தமிழின் முதல்தர
வார இதழ்
# தீபம்
www.deepam.lk
விலை 40 ரூபா • தீபம் 166 • 02.12.2018


திசா என்ரப்பிறைசஸ்
Thisa Enterprises Book Shop
பாடசாலை உபகரணங்கள் , காகிதாதிகள், எழுதுபொருட்கள்,
வெயினோற்றிங், பக்ஸ், E-mail , Scan, Colour Print,Printing
இல.42, திருநகர் வீதி, கிளிநொச்சி T.P: 0775459131



## மட்டக்களப்பு மண் பினாமிகளே
# "எங்கள் வளத்தை சுரண்டாதீர்கள்"

## புலிகளின் ஆயுதக்கப்பல்கள்... இரகசியம் கசிந்தது எப்படி?

## அரசியலாகிய வவுனியா பாடசாலை மீன்ரின்கள்

## கலவர பூமியாகிறதா கல்முனை நகரசபை?

## மாங்கல்ய தோஷம் என்றால் என்ன?




# கூட்டமைப்பே பேசினார்கள்... அவர்களே நிறுத்தினார்கள்
## வரதராஜபெருமாள்

கிளிநொச்சி கனகபுரம் வீதியில் குடும்பத்துடன் சுவைத்து மகிழ்ந்திட
YARL AHI Ice Cream
யாழ் அகி ஐஸ்கிறீம்
ஒருமுறை விஜயம் செய்து
சுவைத்துப் பாருங்கள்


இல. 46, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
No. 46, Kanakapuram Road, Kilinochchi.
T.P 021 7917585 / 077 0232328
திருமணநாள் மற்றும் பிறந்தநாள்
பூப்புனித நீராட்டு விழாக்களுக்கும் ஏனைய
விழாக்களுக்கும் வாகன வசதியுடன் வழங்கப்படும்.
குறிப்பு : மேலதிக விபரங்களை அறிந்திட
www.yarl ahi icecream.comஐ பார்வையிடவும்.


கிளிநொச்சி இலக்கம்-166 ஜெயந்தி நகர்
“வன்னியின் சபரிமலை”
தேவஸ்தானத்தில்
இடம் பெறுகின்ற
“மகர ஜோதி” மண்டல பூசை
சிறப்புற வாழ்த்துகின்றார்கள்...
கிஷா குளிரகம்
குடும்பத்துடன்
சுவைத்து
மகிழ்ந்திட
ஒருமுறை
விஜயம் செய்து
பாருங்கள்
A9 வீதி, கிளிநொச்சி (இலங்கை வங்கிக்கு முன்பாக) இப்போது A9 வீதியில் கிஷா குளிரகம்


TOPAZ Mall
TOPAZ
No.01 Shop in Jaffna
ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்
We are Specialist in
Wedding suits, Wedding Sarees , Party Sarees, Wedding Frocks, Party Frocks and all kinds of Items
TOPAZ
No 72, Grand Bazaar
Jaffna
Tel 021 222 4743
Fax 021 222 7645
TOPAZ TAILORING
No 80/24, Kasthuriyar Road
Jaffna
Tel 021 222 4643
Email : topazagn@gmail.com
TOPAZ MALL
No 195, Power House Road
Jaffna
Tel 021 222 4933
021 221 9933
coustomer is king


TILKO hotels
TILKO
JAFFNA CITY HOTEL
TILKO JAFFNA CITY HOTEL
Mob : 077 780 393, 0777 696 443
Address: 70/6, K.K.S. Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 5969, Fax: 021 222 7291
e-mail: tilko.tilak@gmail.com Web: www.cityhoteljaffna.com



# ஜனாதிபதிக்காக நாடா? நாட்டிற்காக ஜனாதிபதியா?

மன்சூர்

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் அரசியல் முடிவுகள் இலங்கையை சீர்செய்ய முடியாத அரசியல் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. இதன் விளைவுகள் மோசமானவை. அணுகுண்டு தாக்குதல் விளைவை விட மோசமான விளைவை எதிர்காலத்தில் ஏற்படுத்தும்"

இப்படி எச்சரித்திருக்கிறார் பிரபல சிங்கள பத்திரிகையாளர் விக்டர் ஐவன். கடந்த வாரம் அவரது ராவய பத்திரிகையில் இதை எழுதியிருந்தார்.

விக்டர் ஐவன் மட்டுமல்ல, ஜனாதிபதியின் முடிவில் வேறுபட்ட அபிப்பிராயத்துடன் கணிசமானவர்கள் இருப்பதாக தெரிகிறது. நிறைவேற்றதிகாரம், நாடாளுமன்றம், நீதித்துறை என அரசியலமைப்பினதும், நாட்டினதும் தலைவிதியை தீர்மானிக்கும் மீஉயர் மூன்று அலகுகளும் ஒன்றுக்கொன்று வேறுவேறு முடிவுகளையும், நிலைப்பாடுகளையும் எடுக்க வைத்துள்ளது ஜனாதிபதியின் அரசியல் நகர்வுகள்.

நாடாளுமன்றமா, நீதித்துறையா அல்லது நிறைவேற்றதிகாரமாக, நீதித்துறையா பெரியது என்ற சிறுசிறு ஊடாடல்கள் இலங்கை அரசியல் வரலாற்றில் முன்னரும் வந்து போயிருக்கிறதுதான். ஆனால் இந்த மூன்று தரப்பும் முட்டிமோதும் ஒரு சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இது அரிதான ஒரு நிகழ்வு. நீதிமன்றத்தின் முடிவு இன்னும் வெளியாகவில்லை, இருந்தாலும் இடைக்கால தீர்ப்பில் ஜனாதிபதியின் முடிவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. நீதிக்கட்டமைப்புடன், நிறைவேற்றதிகாரம் முரண்படும் சாத்தியமும் தெரியவில்லை. இருந்தாலும், அனைத்தும் வேறுவேறு நிலைப்பாடு எடுக்கும் வாய்ப்பு தென்படுவதே, ஜனாதிபதியின் அரசியல் முடிவுகள் மீதான விமர்சனத்தை கிளப்பியுள்ளது.

நாடாளுமன்றத்தை கலைத்த விவகாரத்தில் ஜனாதிபதி அரசியலமைப்பை மீறி விட்டார் என நாடாளுமன்றத்திலுள்ள பெரும்பாலான கட்சிகள் உயர்நீதிமன்றத்தை நாடியுள்ளன.

நல்லாட்சி அரசின் பங்காளிகளிற்கிடையிலான முரண்பாடு, அரசியலமைப்பை மீறி செயற்படுமளவிற்கு முற்றியுள்ளதா என்பதே இப்போது கேள்வியாகியுள்ளது. ரணில் விக்கிரமசிங்கவை இனி பிரதமராக்க மாட்டேன் என ஜனாதிபதி ஒற்றைக்காலில் நிற்கிறார். ஐ.தே.க பெரும்பான்மையை நிரூபித்தாலும், அவரை பிரதமராக்க மாட்டேன் என்கிறார் ஜனாதிபதி.

ஜனாதிபதியும், பிரதமரும் ஒத்திசைந்து செயற்பட்டால் மாத்திரமே ஆட்சி நிர்வாகத்தை நடத்த முடியுமென்றாலும், ஜனாதிபதியும் பிரதமரும் வேறுவேறு கட்சிகளை சேர்ந்தவர்கள் என்றால், அரசு நகர முடியாதா? அரசியலமைப்பை கவனத்தில் கொள்ள வேண்டியதில்லையா என்ற பிரதான கேள்வி எழுகிறது.

ஏனெனில், அண்மைய வரலாற்றில் ஜனாதிபதியும் பிரதமரும் வேறுவேறு கட்சிகளாக இருந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும், திடுதிப்பென ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைத்துள்ளார். இரண்டு சந்தர்ப்பங்களிலும் ஜனாதிபதிகள் வேறு என்றாலும், பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவே பதவியிலிருந்தார் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.



இரண்டு சந்தர்ப்பங்களிலும் ரணில் மீது ஒரே விதமான குற்றச்சாட்டுக்கள்தான் சுமத்தப்பட்டன. ஜனாதிபதியின் அதிகாரங்களை கையிலெடுத்தார், அல்லது ஜனாதிபதிக்கு தெரியாமல் சில விடயங்களை செய்தார் என ஜனாதிபதிகள் குற்றம் சுமத்தினார்கள். மாறாக, தமக்குரிய அதிகாரங்களையே பயன்படுத்தியதாக அப்போதைய அரசுகள் விளக்கமளித்திருந்தன.


இந்த முரண்பாடுகளை நீக்க அரசியலமைப்பில் தெளிவான ஏற்பாடுகள் இருப்பதாகவும் தெரியவில்லை. ரணில் விக்கிரமசிங்கவின் அரசு சந்திரிகாவினால் கலைக்கப்பட்ட பட்டறிவினடிப்படையிலேயே 19வது திருத்தம் உருவாக்கப்பட்டது. எனினும், ஆட்சியை கலைப்பது குறித்த வரையறைகள் அதில் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், ஜனாதிபதி. பிரதமர் அதிகார மோதல் ஏற்படாத ஏற்பாடு இன்னும் உருவாக்கப்படவில்லை.

அதிகாரங்கள் ஒரு இடத்தில் குவிக்கப்பட்டுள்ள ஒற்றையாட்சி பண்புகளும், அதனால் விளைந்த மனநிலையும் இருக்கும் வரையும், தமிழர்களுடன் மட்டுமல்ல, அரசும் நிர்வாகத்தை தமக்குள் பகிர்ந்து அதிகார மோதலை ஏற்படுத்தாத கட்டமைப்பொன்றை உருவாக்காது என்றுதான் தோன்றுகிறது.


ஜனாதிபதியும், பிரதமரும் ஒரே கட்சியை சேர்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்ற அவசியம் கிடையாது. இனினும் வரலாற்றில் வேறுவேறு கட்சிகளை சேர்ந்தவர்கள் ஜனாதிபதி, பிரதமராகலாம். அப்படியான சந்தர்ப்பங்களில் எல்லாம், நாட்டில் அரசியல் குழப்பங்கள் ஏற்படும் விதமான அரசியலமைப்பை வைத்

தொடர்ச்சி 6-ம் பக்கம்...

அனார்கலி









# களேபரக்களம் கல்முனை மாநகரசபை!

## தொடரும் பெரும் தர்க்கம், அமளிதுமளி!!

தென்கிழக்கின் முகவெற்றிலை என்ற பெருமை பெற்ற மாநகரம் கல்முனை மாநகரமாகும் மூவின மக்களும் குறிப்பாக தமிழ் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் வர்த்தக நகரமும் இதுவாகும்

இன்நிலை மாநகரம் வாழ் மக்களுக்குப் பொறுப்பு வாய்ந்த நிறுவனமாக அதாவது மக்களோடு ஒன்றித்த உள்ளூராட்சிசபையாகக் கல்முனை மாநகரசபை திகழ்கின்றது.

இந்த மாநகரசபைக்கான உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிந்த பின் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அணியினர், தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஆதரவை பெற்று மாநகர ஆட்சியைக் கைப்பற்றினர்.

இதன்படி முஸ்லிம் காங்கிரஸ்சை சேர்ந்த சிரேஸ்ட சட்டதரணி எ.எம். றகீம் மேயராகவும், தமிழர் விடுதலைக் கூட்டணியை சேர்ந்த காத்தமுத்து கணேஷ் பிரதி மேயராகவும் பதவியேற்று ஆட்சியை முன்னெடுத்து வருகின்றனர்.

அதேபோல், தமிழரசுக்கட்சிசார்பில் 7 உறுப்பினர்களும் சாய்ந்தமருதுக்கு தனி உள்ளூராட்சி சபை வேண்டுமென்ற ஒரே நோக்குகொண்ட சுயேச்சைக்குழு உறுப்பினர்கள் 9 பேரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள் 5 பேரும், ஐ.தே.கட்சி மற்றும் தேசிய காங்கிரஸ் உறுப்பினரும், ரிதொரு சுயேச்சை அணி உறுப்பினரும் சபையில் உள்ளனர். இவ்வாறு முக்கியத்துவம் பெற்ற 41 உறுப்பினர்களைக்கொண்ட கல்முனை மாநகரசபையின் மாதாந்த அமர்வுகள் ஒரு சிலவற்றை தவிர தொடர்ச்சியாக பெரும் அமளிதுமளியிலும், கூச்சல், குழப்பத்துடன் முடிவடைவது குறித்து இன்று பலரும் சிலாகித்துப் பேசும் நிலை ஏற்பட்டுள்ளது.

அதிலும் மாநகர மக்கள், வரியிறுப்பாளர்கள், புத்திஜீவிகள் இந்நிலைகண்டு பெரும் கவலையும், விசனத்தையும் தெரிவிக்கின்றனர்.

ஆளும் தரப்பினரெனவும், எதிரணியினரெனவும் தம்மை வரிந்து கட்டிக்கொண்ட உறுப்பினர்கள் சபை அமர்வுகளில் நடந்துகொள்ளும் முறை, விதண்டாவாதம், பிடிவாதம் கொண்டு தர்க்கிப்போர், வாதப் பிரதிவாதங்களால் சபை அமர்வுகளைப் பெரும் களேபரத்திற்கு இட்டுசெல்வது வழக்கமாகி விட்டது.

ஊர்வாதமா? அரசியல் வேறுபாடா? அதிகார மோகமா? அல்லது சபை ஆட்சியைத் தொடர விடக்கூடாது என்ற பின்னணிகளின் கீழா இந்த நிலமைகள் நீடிக்கிறது எனக் கேட்பாருமுள்ளனர். குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முயலும் செயற்பாடுமுள்ளது என்று கூறுவாருமுள்ளனர்.

மேயரின் வெளிப்படைத்தன்மையற்ற செயற்பாடுகளும், சகல உறுப்பினர்களையும் அரவனைத்துச் செல்லும் போக்கற்றதன்மையும், அதிகார தோரணையும், பிடிவாதமுமே நிலமையை இப்படி ஆக்கியிருக்கிறது என்ற கருத்துக்களும் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன.

### 8ஆவது அமர்வு

இந்த பின்னணியில் தான் கல்முனை மாநகரசபையின் எட்டாவது மாதாந்த அமர்வு கடந்த 28 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மாநகரசபை சபாமண்டபத்தில் மேயர் சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் ஆரம்பமாகி நடைபெற்றது.

அமர்வு மிக நீண்ட நேரம் மிகவும் அமைதியான சூழ்நிலையில் நடைபெற்றுக் கொண்டிருந்தமை பலரையும் மகிழ்வுகொள்ளச் செய்தது.

ஒரு கட்டத்தில் மு.கா.உறுப்பினர் ஏ.அமீர் உரையாற்றுகையில்,

"கடந்த மாதங்களில் நமது சபை அமர்வுகள் களேபரத்துடன் முடிவடைந்த சம்பவங்களை பிரதேசமக்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் சிலாகித்துப் பேசியுள்ளதை அறிய முடிகின்றது. உறுப்பினர்கள் விடயங்களை தமக்கிடையே நேருக்குநேர் விவாதிக்காதீர்கள். மாநகரசபை கட்டளைச்சட்டப்படி நேரில் வாக்குவாதப்படாது ஒவ்வொருவராகப் பேசுங்கள். சகல உறுப்பினர்களும் மக்கள் பிரச்சினைகளைப் பேச சந்தர்ப்பமளிக்க வேண்டும்". எனக் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை உபகுழுக்களின் தீர்மானங்கள் பொதுச்சபை அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டு வந்த நிலையில் நிதிநிலையியற்குழு தீர்மான அறிக்கையை மேயர் சட்டதரணி றகீப் சபையின் அங்கீகாரத்திற்காக முன்மொழிந்தார்.

இந்தக் கட்டத்தில் தான் கண்ணூறு பட்டது போல் சபை குழம்பத்தொடங்கியது. ஆகில இவங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் சீ.எம்.முபீத் எழுந்து வாதிடத் தொடங்கினார்.

நிதிக்குழுவில் எந்த தீர்மானமும் எடுக்கவில்லை. நிதிக்குழு தீர்மான விடயத்தில் மேயர் அதிகார தூபிரயோகம் செய்துள்ளார்" இப்படி அவர் கூறினார்.

தமிழரசுக்கட்சி உறுப்பினர் பொன். செல்வநாயகம் எழுந்து "நிதிக்குழு தீர்மான அறிக்கை வழமைக்குமாறாகவுள்ளதெனக் கூறி அது தொடர்பான கட்டளைச்சட்டம் ஒன்றையும் வாசித்துக்காட்டினார்".

இந்த நிலையில் எதிரணியினரெனப்படும் சுயேச்சைக்குழு உறுப்பினர்கள் சிலரும் இக் கருத்துக்கு ஆதரவாக குரலெழுப்பத் தொடங்கி பெரும் வாக்குவாதமேற்பட்ட போதும் மேயர் தமது நிலைப்பாடே சரியென வாதிட்ட வண்ணமிருந்தார்.

இதன்போது ஐ.தே.கட்சி உறுப்பினர் சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிகாகாரியப்பர் எழுந்து மாநகர சபை கட்டளைச்சட்டம் பிரிவு 22இன் கீழ் தீர்மானிக்கும் அதிகாரம் பொதுச்சபைக்கே உண்டு எனக் கூற எதிரணி உறுப்பினர்கள் அதிகம் கொந்தளிக்கத்தொடங்கினார். வாக்கெடுப்புக்கும் கோரினர்.

இந்நிலையில் ஆளுந்தரப்பு முஸ்லீம் காங்கிரஸ் உறுப்பினர் உரிய நிதிக்குழு தீர்மானங்களை அங்கீகரிப்பதாகக்கூறி முன்மொழிந்து வழிமொழிய அது நிறைவேற்றப்பட்டதாக மேயர் அறிவித்துவிட்டு, பலத்த களோபரத்திற்கு மத்தியிலும் வேறு விடயமில்லாததால் சபை அமர்வை முடிவுறுத்துவதாக அறிவித்துவிட்டு சபையை விட்டும் வெளியேறினார்.

தொடர்ந்தும் ஆளும்தரப்பு உறுப்பினர்களுடன் எதிர்தரப்பினர் தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் சில உறுப்பினர்கள் தாம் அமர்ந்திருந்த கதிரைகளை தூக்கி நிலத்தில் குத்தி ரகளையில் ஈடுபட்டதையும் காணமுடிந்தது.

மேயர் ஆளும்தரப்பு உறுப்பினர்கள் வெளியேறியதும், பல எதிரணி உறுப்பினர்கள் பிரதிமேயர் காத்தமுத்து கணேஷ் சுற்றி வளைத்து எம்மிடம் கோரமிருக்கிறது, நீங்கள் சபை அமர்வை நடத்தி குறித்த தீர்மானம் தொடர்பில் வா்க்கெடுப்பை நடத்துமாறு வலியுறுத்தியும் அவர் மறுத்துவிட்டார். சபைச்செயலாளரையும் சிலர் வற்புறுத்தியும் அவரும் சபையை விட்டும் வெளியேறினார்.

இதனைத்தொடர்ந்து சபையை விட்டும் வெளியேறாத சாய்ந்தமருது சுயேச்சைக்குழு உறுப்பினர்கள், தமிழரசுக்கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள், மற்றும் சில உறுப்பினர்கள் சபாமண்டபத்தில் அமர்ந்து ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்தனர்.

குறிப்பாக தமிழரசுக்கட்சி உறுப்பினர் பொன்:செல்வநாயகம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் சீ.எம்.முபீத், சுயேச்சைகுழு உறுப்பினர் எம்.ஐ.அப்துல் அஸீஸ் ஆகியோர் முன்னணியில் அமர்ந்து ஊடகவியலாலருக்கு விளக்கமளித்ததுடன், தமது கண்டனங்களையும் வெளிப்படுத்தினர்.


இந்த ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையிலேயே இடையில் சபாமண்டப மின்வசதி அணைக்கப்பட்டு இருள் பரவியதோடு பொலிஸாரும் உள்நுழைந்தனர்.

இதேவேளை பார்வையாளர்களாக வந்திருந்த சிலரும் வெளியில் உறுப்பினர்கள் சிலருடன் தர்க்கித்த வண்ணமிருந்தனர்.

மொத்தத்தில் மாநகர சபாமண்டபம் மட்டுமன்றி, மாநகரவளாகமும் ரணகளமாகத் தென்பட்டது.

கல்முனை மாநகரசபையே இதுதான் உன் தலைவிதியா?

# என்ர பிள்ளைகள் "மா" வீரர்கள்





"இந்த நாள் எனக்கு புனிதமான நாள். யாருக்கும் பயந்து இந்த மாதத்துக்கான என் கடமைகளில் இருந்து எப்போதும் நான் விடுபடப்போவதில்லை. என்பிள்ளைகள் பயங்கரவாதிகள் இல்லை, அவர்களின் நினைவை அனுஷ்டிக்காமல் விடுவதற்கு நான் ஒன்றும் மலடியில்லை, என் பிள்ளைகள் நாட்டுக்குத் தான் போராளிகள், புலிகள் எனக்கு எப்போதுமே அவர்கள் என் பிள்ளைகள் நான் பத்துமாதம் சுமந்து பெற்ற வீரப்பிள்ளைகள் மார்தட்டி சொல்வேன்" பகவதி ஆச்சி ஆக்ரோசமாக கூறினார்.

அப்பொழுதுதான் கவனித்தேன். வேலியின் மேலால் தலையசைத்து மிகவும் கம்பீரமாக நின்ற கார்த்திகைப்பூவை. அன்றிருந்த அந்த திமிர், அதே செந்தளிப்பு, கம்பீரம், செழிப்பு இன்றும் குறையவில்லை போன்று தோன்றியது அது உண்மைதான்.

அந்த வீதியின் இரு மருங்கும் கார்த்திகைப் பூக்களுக்கு பஞ்சமிருக்கவில்லை. என் கைகள் அவற்றை மெதுவாக தடவின. ஆனால் இனம்புரியாத கவலை ஒன்று ஒட்டிக் கொண்டது. அப்படியே நடந்த என்னை பகவதி ஆச்சியின் குரல்கள் தடுத்து நிறுத்தியது.

முதுமைக்குள் முழுவதுமாய் சிக்குண்டிருக்கும் ஆச்சியை பார்த்தேன். மேல்வாய் முரசு தெரிய சிரித்தாள். பதிலுக்கு சிரித்த என் கன்னத்தைக் கிள்ளி என் மகளைப் போன்றே குறும்புக்காரியாக இருப்பாயோ என்றார். ஆச்சியின் கண்கள் உடனே பனித்தன. நடுங்கிய விரல்களைப் பிடித்தபடி அவரின் வீட்டுக்கு போனேன்.

பகவதி ஆச்சிக்கு இரண்டு பிள்ளைகள். கணவர் பூநகரியில் இடம்பெற்ற கிபிர் வீசிய குண்டு வீச்சில் இறந்து போக பிள்ளைகளை தனியாளாக நின்று வளர்த்தாள,; அவர்களுக்கு அவள் ஊட்டிய வீரம்செறிந்த உணவுகள் தாயைப் போல் தாய் மண்ணையும் நேசிக்க வைத்தன. தந்தையைப்போல் இனியொரு உயிரும் அநியாயமாக போகக்கூடாது என்ற ஒரே நோக்குடன் அமைப்பில் சேர்ந்தான் இளையவன் மனோ. அடுத்ததாக தானும் ஒருத்தியாக இயக்கத்தில் இணைந்தாள் புவனா. சோதியாப்படையணியில் மகள் புவனா கோதை என்ற இயக்கப்பெயருடனும், மகன் ராதா வான்காப்பு பிரிவில் கரிகாலன் என்ற இயக்கப்பெயருடன் பல களங்களில் முன்நிலை வகித்திருந்தார்கள். நானும் அறிந்திருந்தேன். இரண்டு மாவீரர்களின் தாய் இன்று தன் இரு பிள்ளைகளின் நினைவுகளையும் நினைவுகூர முடியாதவளாக இருக்கிறாள். தாய் தன் பிள்ளைகளின் நினைவு நாளை அனுஷ்டிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலை இந்த நாட்டில்.

கணவனையும் இழந்து, தன் இரு பிள்ளைகளையும் இழந்து நிர்க்கதியாக இருக்கிறாள் இந்த வீரத்தாய். அன்று பகவதி ஆச்சி மாவீரர்களின் தாய் என்ற பெயருடன் மதிப்பளிக்கப்பட்டிருந்தாள் பாதுகாப்பாய் வாழவைக்கப்பட்டிருந்தவள் போர் முடிவடைந்த பின்னர், அவள் தனித்து விட்டாள் அவளை அரவணைக்க எவரும் இல்லை, தனிமை அவளைச் சிறைப்பிடித்துக்கொண்டதுஎன்பதற்கு அவளின் பிதற்றல்களே சாட்சி. இன்று இவளைப்போல் எத்தனை தாய்மார்களோ என் எண்ணங்கள் விரிவடைய நான் விரும்பவில்லை. அதற்கான பதிலாக கண்ணீர்த்துளிகள் தான் மிச்சம் என்பதையும் நான் அறிவேன்.

"பிள்ளை உந்த பூமரத்தைப்பாரன் எவ்வளவு பூ என்று" அவரின் ஆற்றாமை என்க்குப் புரிந்தது மெதுவாக சென்று அவர் அருகில் அமர்ந்தேன். தனது பிள்ளைகளின் வரியுடையணிந்த புகைப்படங்களை நெஞ்சோடு அணைத்து வைத்திருந்தார். புகைப்படத்தில் இருந்தவர்களை எனக்கும் காட்டினா இவர்கள்தான் நான் பெற்ற முத்துக்கள் எ்ன்றார். அவர்கள் என்னையும் பார்த்து சிரிப்பதுபோல் இருந்தது. போராளிகளுக்கு இயல்பாகவே இருக்கும் அந்த கம்பீரம் புகைப்படத்தில் இன்னும் அதிகமாகவே தெரிந்தது. பகவதி ஆச்சியின் கண்ணீர்த் துளிகள் இப்பொழுது தெறிப்படைந்திருக்க வேண்டும். எனது வலது கை குளிர்ந்தது. நிமிர்ந்தபோது ஆச்சியின் கண்கள் சிவந்திருந்தன. கண்ணீரைத் தன் பழைய சேலைத் தலைப்பால் துடைத்தபடி ஆச்சி கூறினா..

"பிள்ள, கார்த்திகை மாதம் என்றால் அப்ப மொத்த தமிழீழமும் எழுச்சி மிகுந்து இருக்கும் அனைவரது வீடுகளிலும் பூக்கும் பூமரங்களை ஏனையோரும் உரிமை கொண்டாடுகின்ற மாதம், வீடுகளில் உள்ள தீப்பெட்டிகளுக்கு சிறுசுகள் வரிசையில நிக்குங்கள் மாலைகள் கட்ட வாழை நார்கள் தீர்ந்து போகும், பூமரங்கள் போட்டிபோடும,; கும்மிருட்டு குலைநடுங்க வைக்கும், மழை வெள்ளத்தில் வள்ளம் விடலாம் தண்ணிக்கு பஞ்சமிருக்காது. வரியுடை தரித்த என் தேசப்பிள்ளைகள் சுதந்திரமாக நடமாடுவினம் அந்த மகிழ்ச்சியில் கார்த்திகைப் பூக்கள் தலைகாட்டும், சிவப்பு, மஞ்சள் கொடிகள் வீதிகளை அலங்கரிக்கும் இப்படி இன்னும் ஏராளம் இவற்றைக் கூறும் ஆச்சிக்கு பல் இல்லை என்பதே மறந்துபோனது.

"என்ர பிள்ளைகள் அவர்களை நான் மட்டுமல்ல அன்றைக்கு மொத்த தமிழீழமும் பூசிக்கும், நினைவுகூரும், முன்பு இன்றைய நாளில் நான் இன்னொரு பிறவி எடுத்தவளைப் போல சுறுசுறுப்பாய் இருப்பன். மாவீரர் துயிலுமில்லங்களுக்கு போய் ஆரம்ப நிகழ்வுகளில் கலந்து கொள்வது போராளிகளோட சேர்ந்து ஏனைய வேலைகளைச் செய்வது, பூமாலைகள் கட்டுவது, மண்ணில் சுட்டிகள் பிடிப்பது என்று நானும் ஒரு போராளிபோல இருப்பன். இப்ப அதெல்லாம் காணாமல் போய் பத்து வருசமாகுது. பூமரங்கள் என்ன தான் நிறையப் பூக்கள் பூத்தாலும் அவை அழகாகத் தெரிவதில்லை என்றா. முற்றத்து நித்தியகல்யாணி தலைகுனிந்திருந்தது. ஆச்சியின் குரல் கொஞ்சம் உயர்ந்தது.



மாவீரர் துயிலுமில்லத்த அழிச்சுப் போட்டாங்கள் நினைவுக் கற்களையும் இல்லாமல் செய்து போட்டாங்கள், எவ்வளவு அழகான ஆழமான அர்த்தங்களைக் கொண்ட இடம் அணுவணுவாய் சிதைத்து சின்ன பின்னமாக்கிப் போட்டாங்கள், ஆனால் அந்த நினைவுகளை எம் மனதில்இருந்துஎப்படி அழிக்கமுடியும். ஒவ்வொருநாளும் நாச்சிக்குடாவுக்கு செல்லும் சாட்டில் முழங்காவில் துயிலுமில்ல வீதியால் போவேன். அப்ப பைத்தியக்காரி போல நான்

தொடர்ச்சி 6-ம் பக்கம்...

3-ம் பக்க தொடர்ச்சி...



திருப்பது ஆரோக்கியமானதல்ல.

இனப்பிரச்சனை தீர்விற்காக மட்டுமல்ல, தெற்கில் அதிகார மோதல் ஏற்படாமல் இருக்கவும் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுவது அவசியமானது. புதிய அரசியலமைப்பு உருவாக்கப் பணிகள் நடந்து கொண்டிருக்கும் இந்த சமயத்தில், தெற்கில் குழப்பம் ஏற்பட்டுள்ளது துரதிஷ்டவசமானது. இருந்தாலும், இந்த குழப்பமும், அரசியலமைப்பு உருவாக்கத்தின் அவசியத்தை அதிகம் உணர்த்துகிறது.

அதிகாரங்களை பகிர்ந்து, நிர்வாக முறைமையில் பன்மைத்துவத்தை ஏற்படுத்துவதன் மூலமே ஜனாதிபதியும், பிரதமரும் வேறுவேறு கட்சியை சேர்ந்தவர்களென்ற போதும், நிர்வாகம் சுமுகமாக நீடிக்க அதிகாரங்களை பகிர்ந்து, தெளிவாக வரையறுத்துக் கொள்வது அவசியம். அதற்கு முன்பாக கட்சி அரசியலை கடந்த பொதுப்பார்வை அவசியம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ரணிலை பதவி நீக்கியதற்கும், நாடாளுமன்றத்தை கலைத்ததற்கும் ஊழல், எம்.பிக்கள் விலை பேசப்பட்டதை முக்கிய காரணமாக சொல்லியிருந்தார். மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் பெருமளவு ஊழல் நடந்ததாக ஜனாதிபதியும் குற்றம்சாட்டியிருந்தார். இப்போது, ரணிலுக்கு மாற்றாக மஹிந்தவை அவர் பிரதமராக்கியுள்ளார்.

மஹிந்த அரசின் ஊழல் மோசடிகள் விசாரிக்கப்படாததற்கு பிரதமர் ரணில், சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்க காரணமென ஜனாதிபதி குறிப்பிட்டார். ஆனால், ஜனாதிபதி குறிப்பிடும் அதிகாரத்தைகையிலெடுக்க முனைந்ததால் பதவி நீக்கினேன் என்ற தர்க்கத்தினடிப்படையில் பார்த்தால், அந்த விசாரணைகள் தள்ளி வைக்கப்பட்டதில் ரணில், சாகலவுடன், ஜனாதிபதியும் பங்காளியாக வேண்டும்.

எப்படியோ, இந்த குழப்பங்களை பொதுமக்கள் இரசிக்கவில்லை யென்பது நிச்சயம். இது ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் நன்கு தெரியும். அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆற்றிய உரையில் அது சூசகமாக வெளித் தெரிந்தது. அடுத்த நாடாளுமன்ற தேர்தலிற்கு இன்னும் பதினெட்டு மாதங்கள் இருக்கும்போது அவசரப்பட்டு, இப்போதுபிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டது ஏன்?, காத்திருந்திருந்திருந்தால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தேர்தலில் வெற்றியீட்டியிருக்கலாமென்ற சாரப்பட பலர் கேட்பதாக கூறியிருந்தார். இருந்தாலும், பதவியை விட நாடு முக்கியமென மஹிந்த ராஜபக்ச தனது வழக்கமாக "தேசிய" கேடயத்தை தூக்கி, இந்த சரிவை ஈடுகட்ட முயற்சித்திருந்தார்.

எனினும், தற்போது பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க முடியாத நிலைமையிலும் அவர் பதவியில் தொடர்வது அவர் மீதான சிறிய அதிருப்தியொன்றையும் உருவாக்கியதை மறுப்பதற்கில்லை. அடுத்த தேர்தலில் பெரு வெற்றியொன்றை எதிர்பார்த்திருந்த ராஜபக்ச முகாமிற்கும் இது தெரியும். எப்படியும் ஆசன வீழ்ச்சி ஏற்படுமென அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். உடனடியாக தேர்தலை சந்திக்க ராஜபக்ச முகாமிலும் தயக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது. மறுவள்மாக தேர்தலில் தயக்கம் காட்டிய ஐதேக, இப்போது உற்சாகமாக இருப்பதாக தெரிகிறது.

எப்படியோ, ஜனாதிபதியின் முடிவு பெரும் அரசியல் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. நாடாளுமன்ற பெரும்பான்மையை ஒருவர நிரூபித்தும், அவரை பிரதமராக்க மாட்டேன் என்பது எப்படியான விளைவை ஏற்படுத்தும் என்பதை இனி வரும் நாட்களில்தான் அறியலாம்.

ஜனாதிபதியுடன் ஒருங்கிசைந்து செயற்படக்கூடிய ஒருவரே பிரதமராகலாமென ஜனாதிபதி கூறுவதில் யதார்த்தமான உண்மைகள் இருக்கலாம். ஆனால் நாடாளுமன்ற பெரும்பான்மையை நிரூபிப்பவர் பிரதமராகலாமென்பது அரசியலமைப்பு. இந்த இடம்தான் சிக்கலான புள்ளி. ஏனெனில், யதார்த்தமான உண்மையை சொன்ன ஜனாதிபதியிடம்தான் நிறைவேற்று அதிகாரம் உள்ளது. ஆனால், அரசியலமைப்பு வேறுவிதமாக உள்ளது.

இது ஆரோக்கியமான முன்னுதாரணமாக இருக்குமா என்பதே கேள்வி. நிறைவேற்றதிகாரத்தை கைவசம் வைத்துள்ள ஜனாதிபதிக்கு இசைவாகவே ஒரு நாடு இயங்க வேண்டுமா? ●

---

5-ம் பக்க தொடர்ச்சி...






புலம்புவதை யார் அறிவார்கள். அங்கு குவிக்கப்பட்டிருக்கும் கற்குவியல்களை அள்ளி எடுத்து அழவேணும் போல இருக்கும் ஆனால் என்ன செய்வது அதற்கு கூட அனுமதில்லையே.. ம்... என்ற பெருமூச்சு மேலெழுந்து நின்றது.

"போனவருசம் நான் போய் துயிலுமில்லத்தில விளக்கேற்றினனான், என்ர பிள்ளைகள் இங்க தானே விதைக்கப்பட்டு இருக்கிறார்கள், அவர்களது ஆன்மா இங்க தானே சுற்றிக்கொண்டிருக்கும் அதற்காக போவேன், என்ர பிள்ளைகளைப்போல வித்துக்களான பிள்ளைகளின் பெற்றோர்கள் கூட அவர்களை நினைவு கூர இல்லாமல் இருக்கலாம் அதற்காக மாவீரர் துயிலும் இல்லம் போவேன்" என்றார்.

அந்த துயிலுமில்லத்தில் பொறித்த வாசகம் இப்பவும் என்ர மனசில நிக்குது "இங்கு விதைக்கப்பட்டு இருப்பவைகள் எமது மண்ணின் வீர வித்துக்கள் உங்கள் பாதங்களை மெதுவாக பதியுங்கள்" என்பது இப்ப அந்த புனிதமான இடத்த தீய சக்திகள் நிர்மூலமாக்கிப்போட்டுதுகள். நாங்கள் மெதுவாகப் பதித்த பாதங்கள் இன்று கால் போன போக்கில் போகின்றன குற்ற உணர்வோடு போன வருசம் அந்தக்காணியில ஆமி இருந்தவன் இப்ப இல்ல. கொஞ்சம் நிம்மதி என்றா. கண்ணீர்த்துளிகள் பட்டு காய்ந்து போயிருந்த முகத்திலும் ஏதோ ஒரு பிரகாசம் தெரிந்தது.

இப்படிக் கதைத்துக்கொண்டிருந்தவா திடீரென வீட்டுக்குள் எழுந்து சென்று "பிள்ள, தம்பி" என்றா யாருமற்ற வீட்டிற்குள் யாரை அழைக்கிறார் என்பது புரியாமல் என்னம்மா எவரை அழைக்கிறீர்கள் என்றேன். அவர் தன்னை சுதாகரித்தவாறு இந்த வீடு என் இரு பிள்ளைகளும் வாழுகின்ற வீடு பிள்ள, இப்படித்தான் நடு இரவிலும் சில நேரங்களில் புலம்புவேன் என்றார். அந்தத் தாயின் பாசத்தை என்னால் உணர முடிந்தது. ஆனாலும் என் பிள்ளைகள் "மா"வீரர்கள் என்றார்.

எமது வீரர்களுக்கு "மா" என்ற அடைமொழி கொடுத்தவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் "மா" என்ற தழுவுசொல் ஓர் அர்த்தமுள்ள உயிர்மெய் எழுத்து உயிரும் உடலும் கலந்த அர்த்தம் அதில் வெளிப்படுகின்றது. அழகு, வலிமை, பெருமை, பெரிய, குற்றமற்றவர் என்பன "மா" அடையின் பிற அர்த்தங்கள் என்று அன்று ஒரு போராளி அண்ணா சொன்னதை இன்று என்னால் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகிறது.

பிள்ள என்ர பிள்ளைகள் இந்த மண்ணில் இப்பொழுதும் வாழ்கிறார்கள். அவர்கள் என் வயிற்றில் பிறந்தவர்கள் நல்ல முறையில் தமிழ்த் தாய்க்கு பிறந்தவர்கள் அவர்களை என் உயிருள்ளவரை நான் நினைவு கூருவேன்.

நான் இல்லையென்றாலும் என் பிள்ளைகளை நினைவு கூர வேண்டியவர்கள் பலர் இங்கு இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன்" என்றார் ஆணித்தரமாக. இப்பொழுது என்னால் நித்தியகல்யாணி மரத்தின் அசைவைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது.

நல்ல தலைமை, நல்ல வீரர்களை மட்டுமல்ல, சிறந்த பெற்றோர்கள் உருவாகவும் காரணமாக இருக்கும் என்பதை எண்ணினேன்.

பிள்ள என்ர பொடியன் விடுமுறையில வீட்ட வந்தால் அடிக்கடி சொல்லுவான் "அம்மா உங்களப்போல நிறைய அம்மாக்கள் எங்கள் எல்லாருக்கும் இருக்கினம் எங்கள பார்த்துக்கொள்ள எங்கட தலைவர் இருக்கிறார் இதவிட வேறென்னம்மா எங்களுக்கு வேணும் நீங்கள் எப்பவும் அழக்கூடாது நீங்கள் இரண்டு வீரர்களின் தாய் சந்தோசமாய் இருக்க வேணும் என்பான் நானும் அழாமத் தான் இருக்கிறனான். ஆனால் இப்பொழுது நான் எதற்காகவோ அழுகிறேன் என் பிள்ளைகளின் கல்லறைகளைக் கூட இல்லாமல் செய்து விட்ட அந்த செயலுக்காக அழுகிறேன். ஏதேதோ கதைத்தார், அழுகை மட்டும் தான் அந்த வீட்டை ஆக்கிரமித்தது. மழையின் இரைச்சல் சற்று அதிகமாகியது. எவரால் தான் இன்றைய நாளில் அழாமல் அமைதியாக இருக்க முடியும்.

"அம்மா உன் பிள்ளை உயிரோடு இல்லை என்று நினைக்காதே, வீரத்தின் பிள்ளை இறப்பது இல்லை இதை நீ மறக்காதே" என்ற பாடல் வரி தான் ஞாபகத்திற்கு வந்தது.

ஆச்சியிடம் இருந்து விடை பெற்றேன். முழங்காவில் மாவீரர் துயிலும்மில்ல வளவு சலனமற்று இருந்தது. எருக்கலைகளின் ஆக்கிரமிப்பு குறைந்திருந்தது. இன்றைய மாலை வேளை நினைவுகூரலுக்கான ஆயத்தங்கள் முன்னைப் போன்று இல்லாவிடினும் எம் சோரம் போகாத தமிழ் சகோதரர்களால் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தது பெருமையாக இருந்தது. ●




# அரசியல் ஆக்கப்பட்ட பாடசாலை மாணவர்களிற்கு வழங்கப்படும் மீன்ரின்

குமாரசிங்கம் கோகுலன்

இலங்கையில் அரசியல் இல்லாத இடமே இல்லை. குறிப்பாக ஒரு சில நிகழ்வுகள் தவிர்ந்து ஏனைய எந்த நிகழ்வானாலும் அது ஒரு அரசியல் நிகழ்வாகவே மாற்றம் பெறுகின்றது. அந்தளவிற்கு அரசியல் சதுரங்கத்தின் காலடி படாத இடமே இல்லை என்றளவிற்கு அதன் தாக்கம் எல்லா துறைகளிலும் காணப்படுகின்றது. குறிப்பாக இவ்வரசியல் சதுரங்கத்தின் தாக்கம் வவுனியா முஸ்லீம் மகாவித்தியாலத்தில் வீழ்ந்துள்ளது. வவுனியாவில் உள்ள தேசிய பாடசாலைகளில் ஒன்றான இப்பாடசாலை அண்மைக்காலமாக நடைபெற்ற சில நிகழ்வு காரணமாக விமர்சனத்திற்குரியதாக மாறியுள்ளது.

வவுனியா பட்டானிசூர் பகுதியில் உள்ள இப்பாடசாலையில் கடந்த 9ம் மாதம் நடுப்பகுதியில் உலக உணவு திட்டத்தால் மூவாயிரம் தகரத்தில் அடைக்கபட்ட மீன் (ரின் மீன்) உணவு வழங்கபட்டதாகவும், இன்று வரை அந்த உணவுகள் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை, என தெரிவித்தும் மாணவர்களிற்கு வழங்கபட்ட உணவு வேறு நிகழ்விற்காக பயன்படுத்தபட்டிருக்கிறது போன்ற காரணத்திற்காக ஒரு சாராரால் பாடசாலை அதிபருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றும் முன்னெடுக் கப்பட்டிருந்தது.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த நகர கோட்டக்கல்வி அதிகாரி எம்.பி.நடராஜா பாடசாலை களஞ்சிய அறைக்கு சென்று ஆராய்ந்து இவ்வாறான கையாடல் செய்பாடுகள் எதுவும் நடைபெறவில்லை என தெரிவித்திருந்தார். இதன் காரணமாக பாடசாலை அதிபருக்கு எதிராக நடைபெற்ற இவ்வார்ப்பாட்டம் முடிவுக்கு வந்தது.

**நகர கோட்டக்கல்வி அதிகாரி எம்.பி.நடராஜா**

கொடுக்கபட்ட மீன் உணவை மாணவர்களுக்கு் வழங்குவது தொடர் பாக பாடசாலை நிர்வாகத்தினருக்கு போதிய விளக்கம் இல்லாமை காரணமாகவே அது வழங்கப்பட வில்லை. மாறாக கையாடல்களோ அல்லது பாடசாலையை விட்டு வெளியிலோ குறித்த உணவு பொருட்கள் கொண்டு செல்லபட வில்லை என்பதற்கு போதிய ஆதாரங்கள் இருக்கின்றன. நான் தற்போது களஞ்சிய அறைக்கு சென்று பார்த்த போது அங்கே 3180 தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் உணவு இருக் கிறது .எனவே ஒரு மாணவனுக்கு ஒருநாளைக்கு இருபது கிராம் வீதம் வாரத்தில் இரண்டு நாட்கள் வழங்கபடுவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளோம். எனவே இனிமேல் முறையாக நடக்கும்.

இந்நிலையில் போலியான குற்ற சாட்டுகளை முன்வைத்து சிலர் பாட சாலைக்கும், அதிபரிற்கும் அபகீர்தியை ஏற்படுத்துவதாக தெரிவித்து பாட சாலை மாணவர்கனால் 16.11.2018 அன்று மாணவர்கள் போராட்டதில் ஈடுபட்டனர். இதன் காரணமாக போக்குவரத்து நெரிசலும் இடம் பெற்றிருந்தது. இதன் போது அங்கு வருகை தந்த ஒரு நபருக்கும் பாடசாலை மாணவர்களிற்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டு மோதலாக மாறும் நிலையேற்பட்டிருந்தது.

குறிப்பாக அந்த நபரோடு வந்த சிலர் மாணவர்களை நோக்கி தகாதவார்த்தை பிரயோகங்களை பயன்படுத்திய நிலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களிற்கு சார்பாக குழுமியிருந்த பெற்றோர் மற்றும் பாடசாலை நலன் விரும்பிகள் அவர்களுடன் முரண் பட்டுக்கொண்டனர். இதனையடுத்து அதிகளவான பொலிஸார் அவ் விடத்தில் குவிக்கப்பட்டு நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர்.

இதனையடுத்து வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சம்பவ இடத்திற்கு வந்து அதிபர் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுடன் கலந்துரையாடி மாணவர்களையும் பாடசாலைக்கு உள்ளே வருமாறு தெரிவித்திருந்தார். இதனையடுத்து இவ்வார்ப்பாட்டம் நிறைவுக்கு வந்திருந்தது. குறிப்பாக மாணவர்களினால் மேற்கொள்ளப் பட்ட இவ்வார்ப்பாட்ட தினத்தன்று காஜா புயல் காரணமாக பாடசாலைக்கு விடுமுறையினை ஆளுனரால் வழங் கப்பட்டிருந்த நிலையிலேயே இவ் வார்ப்பாட்டம் காலை 7.30 மணி யில் இருந்து 10.30 மணி வரை மாணவர்களினால் இவ் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.

இதேவேளை மாணவர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத் தின் போது மாணவன் ஒருவனை தாக்கியதாக தெரிவித்து நாற்பது வயதுடைய மன்சூர் நிசாகிர் என்பவரை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு 14 நாட்கள் வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதியால் உத்தர விடப்பட்டது. இதேவேளை தாக்கு தலுக்கு உள்ளானதாக தெரிவிக்கப் படும் மாணவன் வவுனியா வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டி ருந்தார்.


**ரம்சீன் முஸ்லீம் மகாவித்தியாலய அதிபர்**


இந்த பாடசாலைக்கு எதிராக கடந்த சில நாட்களாக இடம்பெற்ற விடயங்கள் ஒரு சில அரசியல் சார்ந்தத பின்னணி இருப்பதாகவும் தனிப்பட்ட ஒரு சிலரின் காழ்ப்புணர்ச்சி காரணமாக இடம்பெற்ற இத்தகைய நடவடிக்கையால் கல்விச்சமூகம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. எந்தவித முன்னறித்தல் இன்றி ஒரு சிலரினால் எனக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தினால் சுமார் பதினைந்து நிமிடங்கள் பாடசாலை நுழைவாயில் மூடப்பட்டு மாணவர்கள், ஆசிரியர்களிற்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். குறிப்பாக எமது பாடலையில் அதிகமான இந்து ஆசிரியர்கள், மற்றும் மாண வர்களும் இருக்கின்றனர். தகரத்தில் அடைக்கபட்ட மீன் உணவு இந்துக் களின் விரதகாலங்களிலேயே வழங்கப் பட்டது. தற்போது விரதகாலம் முடிவடைந்துள்ளதால் குறித்த உணவு வழங்கபட இருந்ததாக தெரிவித்தார்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட மன்சூர் நிசாகிரின் மனைவி கைக் குழந்தை மற்றும் முஸ்லீம் மகாவித்தி யாலயத்தில் கல்வி கற்கும் அவருடைய இரண்டு மகள்களும் இணைந்து வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிமனை முன்பாக பாடசாலை சீருடையுடன் 21.11.2018 அன்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

**மன்சூர் நிசாகிரின் மகள்**

கடந்த 16.11.2018 அன்று எமது பாடசாலைக்கு முன்பாக ஆர்ப் பாட்டம் நடைபெற்றது. இதன் போது எங்களது தந்தை எம்மை பாடசாலைக்கு உள்ளே போகச்சொல்லுவதற்காக வந்தார் அப்போது அதிபரின் தம்பியும் அவரது நண்பர்களும் எமது தந்தையை தாக்குவதற்கு முயன்றனர். அந்த நேரம் அங்கு நின்ற போக்குவரத்து பொலிஸார் அப்பாவை அதில் இருந்து வெளியேற்றி அனுப்பி வைத்தனர். அதன் பின்னர் அப் பாடசாலையில் கல்வி கற்கும் அதிபரின் தங்கைச்சியின் மகனை வைத்தியசாலையில் அனுமதித்துடன் எங்களது அப்பா குறித்த மாணவனை அடித்ததாக கூறி பொலிஸில் முறைப்பாடும் செய்தனர். இதனால் பொலிஸ் அப்பாவை கைது செய்துள்ளது. எனது . அப்பாவை விடுதலை செய்தால் தான் நாங்கள் சாப்பிடுவோம், பாடசாலைக்கு செல் வோம், பரீட்சை எழுதுவோம்.








# கூட்டமைப்பே பேசியது, கூட்டமைப்பே கைவிட்டது

## வரதராஜ பெருமாள் நேர்காணல்

முன்னாள் வடக்கு கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சர் வரதராஜ பெருமாள் நீண்ட அரசியல் அஞ்ஞானவாசத்தின் பின்னர், மீண்டும் தமிழ் அரசியல் களத்தில் குதித்திருக்கிறார். பொதுக்கூட்டங்களில் வடமாகாணசபையையும், தமிழ் தேசிய அரசியலையும் கடுமையாக விமர்சித்து வருபவரை நேரில் சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்தும் பேசினோம்.

எஸ்.நிதர்ஷன்



**தீபம்: இலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடிகளை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

**பதில்:** அரசியல் யாப்பு நெருக்கடி என்றும் அதே போன்று அரசியல் யாப்பு சதி என்றும் சொல்லுகின்றனர். இப்படி பல வேறு விதமாகச் சொல்லப்பட்டாலும் உண்மையில் இந்த நாட்டில் இதுவொன்றும் புதுசான விடயமல்ல என்பது தான் எங்களுடைய கருத்தாக இருக்கிறது. இந்த நாடு சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்தே அரசியல் யாப்பை மதிக்காமல் செயற்படும் போக்கு ஆளுகின்ற எந்தக் கட்சியாலும் அல்லது எந்தப் பகுதியினராலும் கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றது.

இப்பொழுது ஆளுகின்ற அந்த இரண்டு பிரதானமான குழுக்களுக்கும் இடையில் இந்த விவகாரம் ஏற்பட்டவுடன் அதனை பெரிதாகப் பேசுகின்றார்கள். அது தான் இப்பொழுது இருக்கின்ற வித்தியாசம். அரசியல் யாப்பு ஜனநாயகம் என்று சொன்னால் அரசியல் யாப்பு இலங்கையினுடைய அடிப்படையான அனைத்துப் பிரச்சனைகளுக்கும் பொருளாதார சிவில் உரிமைகள் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகள், இனங்களின் பிரச்சனைகள் எல்லாவற்றையும் தீர்த்த ஜனநாயகத்தைப் பராமரிக்கின்ற அரசமைப்பாக இருந்தால் தான் அது வெற்றிகரமாக நெருக்கடி இல்லாமல் இருக்கும்.

ஆனால் இன்றைக்கு இருக்கின்ற ஆளுகின்ற அரசியல் தரப்புக்கள் எவரும் அப்படிப்பட்ட எண்ணங்களுடன் இருப்பதாக தெரியவில்லை.

> **தமிழர் தரப்பைப் பொருத்த வரையில் கட்சிகளைப் பார்க்க வேண்டும் என்றில்லை. ஏனெனில் தமிழர்களுடைய விடயத்தைப் பொறுத்தவரையில் ஆளுகின்ற இரண்டு கட்சிகளுமே ஒன்று தான்.**

ஆனபடியினால் இப்போது ஏற்பட்டிருக்கக் கூடிய அரசியல் நெருக்கடி பெரியளவில் இருந்து அது ஏதோவொரு வகையில் தீர்க்கப்பட்டாலும் கூட இந்த அரசியல் யாப்பு நெருக்கடி என்பது இலங்கையில் தொடர்ந்தும் இருக்கப் போகின்ற விடயமென்று தான் நாங்கள் கருதுகின்றோம்.

**தீபம்: இந்த நெருக்கடி நிலைமையில் தமிழ்த் தரப்புக்கள் என்ன செய்ய வேண்டுமென்று கருதுகின்றீர்கள்?**

**பதில்:** தமிழ்த் தரப்பு கையாள வேண்டுமென்று நாங்கள் அப்படிப் பார்த்தாலே தமிழருடைய பிரச்சனையோடு தொடர்புபடுத்திப் பார்க்கிறதாகத் தான் அது அமையும். ஆந்த வகையில் இருக்கின்ற அரசியல் யாப்பு தமிழர்களுக்கு அடிப்படையான விடயங்களைத் தீர்க்காத ஒரு அரசியல் யாப்பாகவே உள்ளது.

ஆனபடியினால் இந்த அரசியல் யாப்பு நெருக்கடி என்பது பிறகும் தமிழர்களுக்கு நெருக்கடியாக இல்லாமல் இருக்க வெண்டுமாக இருந்தால் தமிழர்களுடைய பிரதிநிதிகள் இந்த அரசியல் யாப்பு நெருக்கடி காலத்தில் எப்படி தமிழர்களுடைய பிரச்சனைகளுக்குத் தீர்வைக் காணுவதற்கு முயலலாம் என்று முயற்சிக்கலாம் என்பது தான் அனுகுமுறையாக இருக்க வேண்டும்.

**தீபம்: தமிழ்த் தரப்புக்கள் இதனை எவ்வாறு கையாள வேண்டுமென்று நினைக்கின்றீர்கள்?**

**பதில்:** தமிழர் தரப்பைப் பொருத்த வரையில் கட்சிகளைப் பார்க்க வேண்டும் என்றில்லை. ஏனெனில் தமிழர்களுடைய விடயத்தைப் பொறுத்தவரையில் ஆளுகின்ற இரண்டு கட்சிகளுமே ஒன்று தான். அதில் ஒருவர் தமிழர்களுக்கு எதனையும் தர மாட்டான் என்று சொல்லுவார் மற்றவர் தாறன் தாறன் என்று சொல்லுவார் ஆனால் அவரும் எதனையும் தரமாட்டார். இது தான் இங்கிருக்கக் கூடிய நிலைமையாக உள்ளது.

ஆக இரண்டு பகுதியினரும் தமிழர்களுக்கு எதனையும் தர மாட்டாத போக்கைத் தான் கடைப்பிடித்து வந்திரக்கின்றனர். ஆகையினால் இதில் யாரைப் பாதுகாத்து யாரை வீழ்த்தி தமிழர்களுக்கு இலாமப் என்று பார்ப்பதற்கில்லை. இந்த இரண்டு பேரையுமே தூர விலத்தி வைத்துக்கொண்டு தமிழர்களுடைய பிரச்சனைகளுக்கு எப்படித் தீர்வு தரப் போகின்றனர் என்று பார்க்க வேண்டும்.

ஆதற்கமைய தமிழர்களுடைய பிரச்சனைக்கான தீர்வைக் காணக் கூடிய அப்படிப்பட்ட அரசமைப்பை தந்தால் இந்த அரசியல் அமைப்பு நெருக்கடி தொடர்பாக நாங்களும் ஒரு தேசிய ரீதியான பங்குபற்றலுக்கு வருவோம் என்ற நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

**தீபம்: தமிழ்த் தரப்புக்கள் என்று பலர் இருந்தாலும் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தான் இருக்கின்றனர். அவர்களுடைய அரசியல் போக்கை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

**பதில்:** கடந்த தேர்தல்களில் தமிழ் மக்களின் அதிக வாக்குகளை அவர்கள் தான் பெற்றிருக்கின்றனர். ஆனால் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அப்படிப் பார்க்க முடியாது. குறிப்பாக உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் அளித்துள்ள வாக்கில் விகிதாசாரம் என்று பார்த்தால் இன்றைக்கு கூட்டமைப்பினரும் சிறுபான்மைக் கட்சியினர் தான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது எப்பொழுதுமே தமிழரசுக் கட்சியினுடைய ஆதிக்கத்திற்கு உட்பட்ட ஒரு அமைப்புத் தான். கூட்டமைப்பு என்பதை விடுத்து கூட்டமைப்பில் பிரதான கட்சியாக இருக்கின்ற தமிழரசுக் கட்சியினரை எடுத்துக் கொண்டால் தமிழரசுக் கட்சியின் நீண்ட கால வரலாறு எப்பொழுதும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பானதாகவே இருந்து வந்திருக்கிறது.

ஆனால் தமிழர்களுடைய பிரச்சனைகள் எல்லாத்திற்கும் பிரதான காரணம் ஐக்கிய தேசியக் கட்சி தான். சிங்கள மொழி உத்தியோக பூர்வமாக ஆக்கப்பட்டதிலும் பெரும் பங்கு வகித்தது ஐக்கிய தேசியக் கட்சி தான். தமிழர்கஷுடைய நிலங்களைப் பறித்ததும், பெரும் கலவரங்களை எல்லாம் நடாத்தியதும், மாகாண சபையைத் தருவதாகச் சொல்லி தராமல் விட்டதும், யுத்தத்தை நீண்ட காலமாக நடாத்திக் கொண்டு வந்ததும் ஐக்கிய தேசியக் கட்சி தான்.

ஆனபடியினால் இப்போதிருக்கின்ற இந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதற்காக ஐக்கிய தேசியக் கட்சிக்கு முண்டு கொடுத்து நிற்க வேண்டும். அவர்கள் ஜனநாயகத்திற்காக நிற்கிறோம், அரசியல் யாப்புக்காக நிற்கிறோம் என்று சொல்லுவதில்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

உண்மை இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினுடைய ஒரு பாகமாக மாறீ விட்டார்கள் என்பதனை இன்றைய அரசியலில் வெளிப்படையாகவே தெரிகின்றது. தமிழர்களுடைய அரசியல் என்பது ஏதோவொரு வகையில் மகிந்த ராஜபக்சவை ஆதரிப்பதாகவோ அல்லது ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாகவோ தான் இப்போது வந்து சேர்ந்திருக்கிறது.

**தீபம்: உங்களுடைய கட்சி இந்த விடயத்தில் எவ்வாறு அனுகும்?**

**பதில்:** இன்றைய அரசியல் நெருக்கடிகளுக்கு என்று தனி அணுகு முறை என்று ஒன்று இருக்காது. நாங்கள் இந்தக் கட்சியை வைத்திருக்கும் இக்கால கட்டம் விடுதலைப் போராட்ட கால கட்டம் இல்லை. போராட்ட அரசியல் என்பது வேறு. தேர்தல் கால அரசியல் என்பதும் வேறு. தேர்தல் கால அரசியல் பற்றி அரசியல் நிபுணர்கள் சொல்லியிருக்கின்றது போல, அரசியல் அதிகாரம் தொடர்பான உறவுகளின் சாத்தியப்பாடுகளை எவ்வாறான அணுகுமுறைகள் கையாளுகையின் மூலம் வாய்ப்பாக்கிக் கொள்ளுவது தான் அரசியல். அது தான் நடைமுறை அரசியல்.

அந்த வகையில் இன்றைக்கு ஏற்பட்டிருக்க கூடிய நிலைமைகளை நாங்கள் எப்படி எங்களுடைய கட்சியின் இன்றைய நிலையில் இருந்து இன்னொரு கட்டத்திற்கு கொண்டு போவதற்கு எவ்வாறான அணுகு முறையை நாங்கள் மேற்கொள்ளுவோம் என்று தீர்மானித்துச் செயற்படுவோம்.

**தீபம்: தமிழ்த் தரப்புக்கள் அனைத்தும் ஒன்றாக வேண்டும். ஒற்றுமையாக பயணிக்க வேண்டும் என்று சொல்லப்படுகின்ற இந்த சூழ்நிலையில் அந்த ஒற்றுமை என்பதை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

**பதில்:** எங்களுக்கு அதில் ஒரு பிரச்சனையும் இல்லை. ஒற்றுமைய என்பதில் எல்லாத் தமிழரும் ஒன்றாகச் செயற்பட வேண்டும் என்றாலும் நாங்களும் அதற்குச் சம்மதம் தான். அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு சேர வேண்டும் என்று சொன்னாலும் நாங்களும் அதற்கும் சம்மதம். விக்னேஸ்வரனுடைய கட்சிக்காரர்கள் எல்லோரையும் சேர்த்துக் கொள்ள முயற்சி எடுத்தாலும் கூட அதனைப்பற்றி நாங்கள் பரீசீலிக்க மாட்டோம் என்றில்லை.

அதேபோல டக்ளஸ் தேவானந்தா மூன்றாவது தரப்பாக இருக்கக் கூடிய கட்சிகள் எல்லாம் சேர்ந்து செயற்படலாம் என்ற முயற்சிகளும் எடுக்கப்பட்டிருக்கின்றது. ஆகையினால் இதில் எதுவும் சாத்தியமாகத ஒன்றாகத் தான் இருக்கின்றது.

**தீபம்: கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் உங்களது கட்சி கூட்டமைப்புடன் இணைந்து கொள்ளப் போவதாகச் சொல்லப் பட்டதே. அதற்கு என்ன நடந்தது.**

**பதில்:** கூட்டமைப்பினர் தான் இணைந்து பயணிப்பது குறித்து எங்களுடன் பேசியிருந்தார்கள். அதற்கான முயற்சியை அவர்களே முன்னெடுத்தார்கள். அதன் பின்னர் அந்த முயற்சிகளை அவர்களே கைவிட்டார்கள். அவர்களுக்குத் தேவைப்படவில்லை என்று நான் நினைக்கின்றேன்.

கூட்டமைப்பினர் முதலில் சேர்ந்து செயற்படுவோம் என்று எங்களுக்குச் சொன்னார்கள். அதனைப் பற்றி சந்தித்துப் பேசினார்கள். அதன் பின்னர் அதைப் பற்றி பேசாமலே விட்டு விட்டார்கள். அரசியல் என்பது அவர் அவருடைய தேவையின் அடிப்படையில் முயற்சிகள் தொடங்கும். அவர்களுக்கு தொடர்ச்சியாக தேவைப்பட்டால் அந்த முயற்சிகள் தொடரப்படும். தேவையில்லையென்றால் அது கைவிடப்படும். அது தான் இங்கும் நடந்திருக்கின்றது.

**தீபம்: கடந்த தேர்தல் காலத்தில் கூட்டமைப்பு உங்களுடன் சேர்ந்து பயணிப்பது குறித்து பேசியிருந்ததாகவும் அதன் பின்னர் அவர்களே அதனைக் கைவிட்டு விட்டதாகவும் சொல்லுகின்றீர்கள். கூட்டமைப்பிலிருந்து ஈபிஆர்எல்எப் வெளியேறுகின்ற நிலைமையில் தான் உங்களை அழைத்ததாக கருதுகின்றீர்களா?**

**கூட்டமைப்பினர் முதலில் சேர்ந்து செயற்படுவோம் என்று எங்களுக்குச் சொன்னார்கள். அதனைப் பற்றி சந்தித்துப் பேசினார்கள். அதன் பின்னர் அதைப் பற்றி பேசாமலே விட்டு விட்டார்கள். அதன் பின்னர் அந்த முயற்சிகளை அவர்களே கைவிட்டார்கள்.**



**பதில்:** உண்மையில் அவர்கள் தான் எம்முடன் பேசியிருந்தார்கள். அதே போன்று அவர்களே அந்தப் பேச்சையும் கைவிட்டார்கள். ஆகவே சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலானவர்கள் கூட்டமைப்பில் இருந்து வெளியேறுவதால் எங்களை அதில் இணைத்துக் கொள்வதற்கான தேவை ஏதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இருந்திருக்கலாம்.

ஆனால் எங்களைப் பொறுத்த வைரயில் அதற்கு முன்னைய காலங்களிலும்நாங்கள் கூட்டமைப்பினருடன் பேசியிருக்கின்றோம். அதிலும் கூட்டமைப்பில் இருக்கின்ற ரெலோ மற்றும் புளொட் கட்சிகள் அந்த முயற்சிகளை எடுத்திருக்கின்றனர். ஆனால் அப்பொழுஐது எல்லாம் அதற்கு எந்தச் சார்பான வார்த்தையையும் கூட்டமைப்பு சொல்லவில்லை. ஆனால் திடிரென அவர்கள் கடந்த உள்ளூராட்சி தேர்தலுக்கு சற்று முன்னர் வந்தார்கள். பின்னர் அவர்களே கைவிட்டு விட்டார்கள்.

**தீபம்: கூட்டணிபற்றி உங்களுடைய கட்சியுடனும் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாக அண்மையில் யாழில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றின் போது ஈபிடிபியின் டக்களஸ் தேவானந்தா சொல்லியிருக்கின்றார். அந்த முயற்சிகள் எந்தக் கட்டத்தில் உள்ளது?**

**பதில்:** அவ்வாறான பேச்சுக்கள் தொடர்பான சந்திப்புக்கள் சில நடைபெற்றிருக்கின்றன. ஆனால் அதில் எந்தவித முன்னேற்றங்களும் இதுவரைக்கும் ஏற்படவில்லை.

**தீபம்: கூட்டமைப்பு, விக்னேஸ்வரன் அணி,ஈபிடிபிபோன்றகட்சிகள் பேச்சுக்களுக்கு அழைத்துள்ளனவா அவ்வாறு அழைத்திருந்தால் அந்தப் பேச்சுக்கள் தற்பொதும் தொடர்ந்தும் பேசுகின்றதா?**

**பதில்:** அப்படி எந்த அழைப்பும் இப்ப விடுக்கப்படவில்லை. அதே நேரம் இதற்கான தேவைகள் அவர்களுக்கு இருக்கிறதோ எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் சில வேளை இதற்கான தேவைகள் நாளையும் வரலாம். அப்படி வருகின்ற போது அதனை அந்த நேரத்தில் பார்த்துக் கொள்வோம்.

அரசியல் அதிகார உறவுகள் தொடர்பாக ஏற்படுகின்ற சாத்தியப்பாடுகளை எவ்வாறு அனுகுவது எவ்வாறு கையாண்டு வாய்ப்பாக்கிக் கொள்ளுவது என்கிற வரைவிலக்கணத்தை மையமாகக் கொண்டே எங்களுடைய செயற்பாடுகள் அமையும். சாத்தியப்பாடுகள் வந்தால் அதை எப்படி எங்களுக்கு சார்பானதாக மாற்றிக் கொள்வது அந்தச் சாத்தியப்பாடுகள் எங்களுக்கு வாய்ப்பானதாக ஆக்கவே முடியாது என்றால் அதனைக் கையாள முடியாது என்று தான் அர்த்தம்..

**தீபம்: தமிழர்களின் ஒற்றுமை என்ற அடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் கிழக்குத் தமிழர் ஒன்றியம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அதன் ஆரம்பத்தில் நீங்களும் பங்கு கொண்டிருந்த நிலையில்அதன் இறுதியில்இணைந்து கொள்வதனை தவிர்த்து வருவதாக கூறப்படுகிறதே?**

**பதில்:** கிழக்கின் ஒற்றுமை என்ற அடிப்படையில் அவர்களும் எம்மை அழைத்தார்கள் எம்முடன் பேசினார்கள் நாங்களும் சென்றிருந்தோம். ஆனால் அவர்கள் வேகமாக கையெழுத்து வைக்க வேண்டும் அதற்குரிய ஏற்பாடுகளுடன் வருமாறு அழைத்தனர். இல்லாவிட்டால் வர வேண்டாம் என்று சொல்விட்டனர்.

ஆனால் இது தொடர்ச்சியான பேச்சுவார்த்தை இங்கு நீண்ட விடயங்கள் பேச வேண்டுமென்று நாங்கள் சொன்ன போது அவர்கள் அதனை ஏற்கவில்லை. அதனால் அந்த முயற்சியும் தொடரவில்லை. குறிப்பாக அதில் இணைந்து கையெழுத்து வைப்பதற்குரிய கால கட்டம் வரவில்லை என்பது தான் எங்களுடைய நிலைப்பாடு ஆகும்.

ஆனாலும் நாங்கள் தொடர்ந்தும் பேசுவோம் என்று கேட்டிருந்தோம். ஆனால் அதனைத் தொடர முடியாத கால கட்டம் என்பதால் அது நடைபெறாமல்நின்றுவிட்டது.ஆனால் இப்போது அவர்களும் அதற்கு மேல் ஏதும் தொடருகின்றார்களா என்பது பற்றிய எந்தவிதமான தகவல்களும் எம்மிடமில்லை.

**தீபம்: வடக்கில் கட்சிகளுடன் பேச்சு, கிழக்கில் கிழக்குத் தமிழர் ஒன்றியத்துடன் கூட்டு என்ற நிலையில் இருந்து விடுபட்டு மகிந்த ராஜபச்சவின் கட்சியுடன் உங்களது கட்சி இணைந்து கொள்ளப் போவதாகச் சொல்லப்படுகிறதே?**

**பதில்:** அவ்வாறு ஒவ்வொருவரும் கற்பனை பண்ணலாம். ஆனால் எதுவும் நடக்க முடியாது என்றில்லை. ஏனெனில் அரசியலில் நிரந்த எதிரியும் இல்லை. நிரந்தர நண்பனும் இல்லை என்று சொல்வார்கள் தானே.

அதிலும் புலிகளின் காலத்தில் கூட ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்திருக்கின்றார்கள், மகிந்த ராஜபக்சவை ஆதரித்திருக்கின்றார்கள். இப்படிப் பல நடந்திருக்கிறது. அதுவும் போராட்ட காலத்திலே அது நடந்திருக்கிறதென்றால் தேர்தல் அரசியல் காலத்தில் இன்னும் சொல்லப்பொனால் நிரந்தர நண்பனும் இல்லை. நிரந்தர எதிரியும் இல்லை என்பது தான் நடந்து முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சி இருந்த முன்னைய காலத்தில் கூட்;டமைப்பு எவ்வளவு எதிராக இருந்தார்கள். இப்போது எப்படி இருக்கிறார்கள். இப்படி அரசியலில் பல மாற்றங்கள் நிகழும். அதனால் எந்த நிகழ்ச்சியும் அப்படி நடந்து முடிந்தது என்பதற்கு முதலில் எல்லாமே ஊகமாகத் தான் இருக்கும்.

**தீபம்: அப்படியான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டனவா இல்லையா?**

**பதில்:** அப்படியான பேச்சுவார்த்தைக்கு அவர்களுக்குத் தேவை

தொடர்ச்சி 24-ம் பக்கம்...

**பிஸ்னஸ் வழிகாட்டல் தொடர் 5**



# சின்ன நிறுவனம்... பெரிய அனுபவம்!

சி.கே.குமரவேல்

தங்கள் பிள்ளைகள் பத்தாம் வகுப்பு செல்லும்போதே, 'நீ ஓ.எல்ல நல்ல ரிசல்ட் எடுத்தால்தான், ஏ.எல் நல்ல பாடம் படிக்கலாம். ஏ.எல்ல நல்ல பாடம் படிச்சால்தான் நல்ல வேலைக்கு போகலாம்' என ஆரம்பத்தில் இருந்தே பெரிதாகத்தான் பிளான் போட்டு அறிவுரை சொல்வார்கள் பெற்றோர்கள். என்னைப் பொறுத்தவரைப் படித்து முடித்தவுடனே பெரிய கம்பெனிகளில் வேலைக்குச் செல்வது நல்லதல்ல.

ஆனால், பலர் தனக்கு எந்த கம்பெனி நிறைய பணம் கொடுக்கிறதோ அங்கே வேலைக்குச் சேர ஆசைப்படுகிறார்கள். ஆனால், வாழ்க்கையில் முன்னுக்கு வர வேண்டும் என்று நினைப்பவர்கள் சின்ன கம்பெனிகளில் வேலைக்குச் சேர வேண்டும்.

ஏனெனில், பெரிய கம்பெனிகளில் சிஸ்டம் முறைப்படுத்தப் பட்டிருக்கும். அதில் உங்களால் எதுவும் செய்ய முடியாது. தவறு செய்ய வாய்ப்பே கிடைக்காது. தவறு செய்யா விட்டால் உங்களால் எதையுமே கற்றுக்கொள்ள முடியாது. நம் கல்விமுறை நம்மைத் தப்பு செய்யவே கற்றுக்கொடுக்கவில்லை. அதனால் எல்லாரும் பெரிய கம்பெனிகளை நோக்கித்தான் ஓடுகிறார்கள். அந்த மாதிரி பெரிய பெரிய கம்பெனிகளில் நீங்கள் பத்து வருடங்கள் வேலை பார்த்தாலும் ஒன்றும் கற்றுக்கொள்ள முடியாது. ஆனால், பத்து வருடங்களுக்குள் உங்களிடம் ஏசி கார் வந்துவிடும், பல இஎம்ஐ வந்துவிடும். அதே சமயம் திடீரென்று உங்களை வேலையைவிட்டு அனுப்பினால் எதுவும் செய்ய முடியாது.

அதனால், சிறிய கம்பெனிகளில் வேலைக்குச் சேருங்கள். உங்களுக்கான நல்ல பாஸை நீங்கள் தேர்ந்தெடுங்கள். நிறையத் தவறு செய்யுங்கள். அங்கு பின்பற்றப்படும் சிஸ்டத்தை மாற்றுங்கள். தவறு செய்ய செய்யத்தான் அதிகம் கற்றுக்கொள்ள முடியும். அதுதான் உங்களின் கரியரைத் தொடங்குவதற்குச் சரியாக இருக்கும்.

அதேபோல் கற்றுக்கொள்ள வேண்டும் என்கிற ஆர்வமும் உங்களிடம் அதிகம் இருக்க வேண்டும். ஆரம்பத்தில் நீங்கள் கற்றுக்கொள்வதுதான் உங்களுக்கு எப்போதும் கைகொடுக்கும்.

முதல் பத்து வருடங்கள் பணத்துக்குப் பின்னால் செல்லாமல் இருந்தால், அடுத்து பணம் உங்கள் பின்னால் வரும். அது மட்டுமில்லாமல், எந்த ஒரு காரியத்தையும் மூளையில் இருந்து செய்யாமல், இதயத்தில் இருந்து செய்ய வேண்டும். அது என்றைக்குமே தவறாகப் போகாது. அதற்கு உதாரணமாக நான் படித்த ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். இன்ஜினீயரிங் படித்த ஒரு பையன் இராணுவத்தில் சேருகிறான். அவன் இராணுவத்தில் இருப்பவர்களைப்போல் ஃபிட்டாக இல்லை. அதனால் அவனுக்குள் நாம் இந்த வேலைக்குத் தகுதியான நபர்தானா என ஒரு குழப்பம் இருந்து கொண்டே இருக்கிறது. முதல் நாள் பயிற்சியில் அவனை 10 கிலோ மீட்டர் ஓடச் சொல்லியிருக்கிறார்கள்.



அவ்வளவுதானா என்று அவனும் ஓட ஆரம்பித்திருக்கிறான். மூன்று கிலோ மீட்டரைத் தாண்டும்போதே 10 கிலோமீட்டர் தூரத்துக்குஓட முடியாது என்று அவனுக்குத் தெரிந்து விட்டது. நான்காவது கிலோமீட்டரில், இனி தன்னால் ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியாது என அவன் எண்ணவும், அவனது கால்கள் நின்றுவிட்டன.

அப்போது, 'மூளை சொல்வதைக் கேட்டு செயல்படாதே, இதயம் சொல்வதைக் கேட்டு செயல்படு' என்று அவனது பயிற்சியாளர் கூறுவது அவனுக்குக் கேட்கிறது. அதனைக் கேட்ட பின்பு 10 கிலோமீட்டரை அவன் பூர்த்தி செய்துள்ளான். இதே போலதான் தொழில் முனைவோர்களும் செயல்பட வேண்டும். மூளை சொல்லும் விஷயங்களைக் கேட்டுச் செயல்படுவதை விட இதயம் சொல்வதைக் கேட்டுச் செயல்பட்டால் நமது இலக்கை எளிதில் அடையலாம்; வாடிக்கையாளர்களையும் திருப்திப் படுத்தலாம். அதேபோல், காலத்தின் வேகத்துக்கு ஏற்ப நம்மை மாற்றிக் கொண்டே இருக்க வேண்டும். ஏனென்றால், ஓர் ஆள் செய்யும் வேலையை இன்று ஒரு போன் செய்துவிடுகிறது.

மொபைல் தயாரிப்பில் லீடராக இருக்கும் நொக்கியா கம்பெனி எம்.டி ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது, 'நாங்கள் எந்தத் தவறும் செய்யவில்லை. ஒரே ஒரு 'சரி' மட்டும் செய்யவில்லை. அதனால் இன்று மார்க்கெட்டில் இல்லாமல் இருக்கிறோம்' என்று கூறினார். இதுதான் பிஸ்னஸ். நம் தாத்தா காலத்திலெல்லாம் வாழ்க்கை ரொம்ப மெதுவாகச் செல்லும். தாத்தா அரசு வேலை பார்த்தால் அப்பாவும் அரசு வேலை பார்ப்பார். ஆனால், இப்போ இரண்டு வருஷத்துக்கு மேல ஒரே கம்பெனியில் வேலை பார்த்தால், 'என்ன தம்பி எதுவும் பிரச்னையா..?'னு கேட்கிறார்கள். அப்படி வேகமாக இயங்குகிறது இந்த உலகம். அதற்கு ஏற்றவாறு நாமும் நமது தொழிலிலும் மாறாமல் இருந்தால் ரொம்பவும் கஷ்டம். **(மாத்தி யோசிப்போம்)**

# பழையன மதிப்புறும் இடம்

✎ செந்தீபன் சக்தீனா

“பிள்ள இது வெண்கலப் பாத்திரம், இந்த வெண்கலப் பாத்திரத்தில் சமைத்துச் சாப்பிட்டால் உடல் சோர்வு நீங்கி நாள் முழுவதும் புத்துணர்ச்சியாக இருப்பதை உணரலாம். இதில் சமைத்த பொருட்கள் சீக்கிரத்தில் கெட்டுப்போகாது”

அப் பாத்திரம் எனது காலில் தற்செயலாகத் தட்டுப்பட்டு தாளம் எழுப்பிய வெண்கலப்பாத்திரம்.

காரைநகர் களபூமிக்கிராமம் கந்தப்பு நடராஜா ஐயாவையும் தன் பெயர் சொல்லவென படைத்தான் போலும். சின்ன வயதில் இருந்து அவர் பயன்படுத்திய பொருட்களை மிகவும் பாதுகாப்பாக சேமித்து வைத்திருக்கிறார் நடராஜா ஐயா.

அவர் பாதுகாக்கும் பொருட்களை ஒரு அருங்காட்சியகம் போல வைத்திருந்த ஐயாவின் வீட்டின் நிலை கூட பழமையானது, தான் பிறந்து வளர்ந்து வரும் வீடு இதுதான் என்கிறார் 82 வயதாகும் ஐயா.

அவர் பக்குவப்படுத்தி வைத்திருந்த பொருட்கள் ஒவ்வொன்றையும் மிகவும் அவதானமாக எடுத்து நான் அறியாத அவற்றின் பயன்பாடுகளை தெளிவாகக் கூறும் ஐயாவிடம் நான் தெரிந்துகொள்ள நிறைய இருப்பதைப்போல தோன்றியது.

நானும் அறிந்துள்ள செம்பு இவ்வளவு சிறப்புள்ளதா வெறும் தண்ணீர் மட்டும் பருகப் பயன்பட்ட செம்பைப் பற்றி ஐயா கூறும் போது தண்ணீர்த் தாகம் ஏற்பட்டது உண்மைதான்.

“கிணற்றில் இருந்து கொண்டு வந்த தண்ணீர் நிறைந்த வாளிக்குள் மிதந்து கொண்டு செம்பு இருக்கும் எதற்காக என்றால், வீட்டின் முன்புறங்களில் வருவோர் யாவரும் கால்களை முன்னும் பின்னுமாய் நன்றாகக் கழுவி வீட்டுக்குள் வருவதும், வெய்யிலுக்குள் சென்றுவிட்டு வீட்டுக்கு வரும் விருந்தாளிகளுக்குத் தாகம் தீர்க்க செம்பு நிறையக் குளிர்நீர் கொடுப்பதும் பாவனையாளர்கள் பாத்திரத்தில் வாய் முட்டாதபடிக்கு அண்ணாந்து அத்தண்ணீரைக் குடிப்பதும் பாத்திர வார்ப்பின் லட்சணமும் அதன் உலோகப்பெறுமதியும் இயற்கைக்கும் சுத்தத்திற்கும் செம்புக்கும் தமிழர் கொடுத்த இடத்தைச் சொல்லும்.” என்றவர்

நான் கையில் வைத்திருந்த பொருளைப்பார்த்து “இதுதானம்மா பூட்டுச் செம்பு” என்றவர்.

“இறுக்கமாகப் பூட்டிப் பாவிக்கக் கூடிய வகையில் இருந்ததால் பூட்டுச் செம்பு எனவும் தூக்கும் கைப்பிடியைக் கொண்டு செம்பு வகையினைச் சார்ந்திருந்ததால் தூக்குச் செம்பு எனவும் இதனை அழைத்தார்கள். பிள்ள இதைப் பாரதத் தென்னப் பண்பாட்டுக்குரியவர்கள் “கூஜா” என்று அழைப்பார்கள். பித்தளையினால் ஆனா செம்பு இனத்தைச் சார்ந்த இவ்வகைப் பொருள் மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கின்றது. செம்பு, குவளை, மூடி என்பவை ஆகும். செம்பின் வாய்ப்பகுதியோடு உள்ளார்ந்து இணைக்கத்தக்க விதமாக குடிக்கும் குவளையை உள்ளடக்கி அது வெளியே தெரியாத விதமாகவும் வெளியே திரவ பதார்த்தங்கள் சிந்தாத விதமாகவும் 78 புரிகள் கொண்ட மூடி அமைந்திருப்பது இதன் சிறப்பம்சமாகும்.



இச் செம்பானது முன்பு தம் நீண்ட வழிப்பயணத்துக்காக பானங்களை இட்டு நிரப்பி எடுத்துச் செல்ல பயன் பட்ட ஒரு சாதனமாகும்” என்றார்.

என்னிடம் இருந்த பூட்டுச் செம்பு தூரமாகி மூக்குப்பேணி என்றழைக்கப்படும் பாத்திரத்தை எடுத்துப்பார்த்தேன். பித்தளையினால் ஆன இப்பாத்திரம் நாம் தண்ணீர் பருகப் பாவிக்கும் வட்டவடிவிலான பாத்திரங்களை விட கூர்வடிவில் முன்னோக்கி நீண்டிருந்தது. இது தானம்மா “மூக்குப்பேணி” என்றார்.

“நான் சிறுவனாக இருந்த காலத்தில் மூக்குப்பேணியில் தான் தேனீர் அருந்துவ்து வழக்கம் எனக்கு அதில் என்னவோ ஒரு வித்தியாசமான சுவை இருப்பதாக இருக்கும் சில வேளைகளில் மூக்குப்பேணி பித்தளையால் செய்த படியினால் அவ்வாறான ஒரு சுவை வருகின்றதோ தெரியவில்லை என்றவர் அதன் அமைப்பைப் பற்றிக் கூறவும் மறக்கவில்லை.

இதன் அமைப்பு கூட ஏனையவற்றில் இருந்து வித்தியாசப்படும் பருமனால் சற்றுப் பெரிது மூக்கு போன்ற வாய் பகுதியை உடையதால் அதற்கு மூக்குப்பேணி என்று பெயர் வந்தது. குடிக்கும் திரவத்தை சிந்தாமல் குடிக்க மட்டுமல்ல சுகாதாரத்தை பேணும் வகையில் அமைந்துள்ளது. வாயினால் எந்த நோயும் பரவமால் இருக்கும்” என்றார்.


பெறுமதிமிக்கவை அதற்குரியவர்களிடம் இருப்பது தான் சாலச்சிறந்தது என்பதை அறிவோம், இப் பழைய பொருட்களும் அதற்குரிய மனிதரிடம் தான் இருக்கின்றன என்பதை உணரமுடிந்த போது அந்தப்பழைய வீட்டில் ஒட்டிப்போயிருந்த பலநாள் தூசிகள் கூட அழகாய்த் தான் இருந்தது.

அந்த வீடு கட்டி நூறு வருடங்கள் கடந்திருக்கும் வீட்டிற்கு உள்ளே செல்வதற்கு கூட பயமாக இருந்தது தொட்டால் வீடு முழுவதும் விழுந்து விடுவதைப் போன்றிருந்தது. ஆனால் அந்த வீட்டுக்குள் இருக்கும் பொருட்கள் ஐயாவினால் கையாளப் பட்டதையும் இப்பொழுது பாதுகாக் கப்பயன்படுவதையும் நினைத்து பெருமையடையுமே தவிர பயந்து விடாது என்பதை நானறிவேன்.

ஐயா பார்த்துப் போங்க என்ற என்னைப் பார்த்து “எனக்கு பழகிப் போட்டுது பிள்ள நீங்க பார்த்து வாங்கோ” என்றவர் கலப்பைகள் இருக்கும் இடத்திற்குச் சென்றார். கலப்பை ஒன்றை எடுத்து தோளில் வைத்துக் கொண்டு திரும்பியவர் நான் அள்ளி வைத்திருந்த பழைய நாணயக்குற்றிகளை பார்த்து “பிள்ள இவையெல்லாம் பழைய நாணயக் குற்றிகள் அந்தக் காலத்தில இவற்றை யெல்லாம் நான் சேர்த்து வைச்சிருப்பன் அப்படிச் சேர்த்து வைச்சவை தான் இவைகள்” என்றார்.

ஐயாவிடம் இன்னும் அதிகமாகவே இருந்தன பழைய மரக் கட்டில்கள், கலப்பைகள், பழைய, காலத்து எண்ணெய் வகைகள், பித்தளைப் பாத்திரங்கள், வெள்ளிப் பாத்திரங்கள், மரத்தளபாடங்கள் என ஏராளம் ஐயாவின் வீட்டில் பழையனவற்றை பறைசாற்றிக்கொண்டிருந்தன.

வயது முதிர்ந்து விட்டாலும் தான் பாவித்த இப் பொருட்களை பாதுகாப்பதில் அவருக்கு அப்படி ஒரு சந்தோசம் போலும் தான் பாதுகாத்து வைத்திருந்த பொருட்களை எனக்கு காட்டும் போது அவருக்கு தன் வயது மறந்துபோயிருக்க வேண்டும். என்னால் நல்லது நடக்கவேணும் என்று எண்ணினேன். நான் வீடு வந்து சேர்ந்தேன் ஆனால் களபூமியில் இருந்து இன்னும் வரவில்லை. ●





# ரோஹின்யா மக்கள் எப்போது திரும்பிப் போவார்கள்?



இவ்வருட ஆரம்பத்தில் மியான்மாருக்கும், பங்களாதேஷுக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தைகளின் பின்பு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின்படி இவ்வருட இறுதியில் பங்களாதேஷில் அடைக்கலம் தேடிவந்த சுமார் 720,000 ரோஹின்யா இன அகதிகளை மியான்மாருக்குத் திருப்பியனுப்புவது ஆரம்பிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டது. ஆனால், அவர்களை மீண்டும் மியான்மாருக்குத் திருப்பியனுப்பும் அளவுக்கு நிலைமை மியான்மாரில் உண்டாகவில்லை என்று குறிப்பிடுகிறது ஐ.நாவின் அறிக்கை. அதனால், அவர்களைத் திருப்பியனுப்பும் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

உலக யன்னல்

தேசமித்ரன்

வெளியிடப்பட்டிருக்கும் ஐ.நா அறிக்கை மியான்மார் அரசு திட்டமிட்ட நடவடிக்கைகள் மூலம் தனது இராணுவத்தைத் தூண்டிவிட்டுத்தான் ரோஹின்யா இனத்தவரை நாட்டிலிருந்து வெளியேற வைத்தது என்று தெளிவாகச் சொல்கிறது. கற்பழிப்பு, பாலியல் அடிமைத்தனம், கூட்டுக் கொலைகள், கிராமங்களை எரித்தல்போன்றவைகளில் மியான்மார் இராணுவம் ஈடுபட்டது என்று வெளிப்படுத்துகிறது அந்த அறிக்கை. குறிப்பிட்ட சில மாதங்களுக்குள் சுமார் 10,000 க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதாக அவ்வறிக்கை மேலும் குறிப்பிடுகிறது.

பங்களாதேஷ் தனது நாட்டுக்குள் வந்திருக்கும் அகதிகளுக்கான உதவிகளைச் செய்யமுடியாமல் திணறிவருகிறது. பல நாடுகளின் உதவிகளுடன் பல அகதிகள் முகாம்கள் கட்டப்பட்டாலும் நிலைமை மிகவும் மோசமாகவே இருப்பதாகப் பல உதவி அமைப்புக்கச் சுட்டிக் காட்டுகின்றன. தனது நாட்டு நிலைமையை அறிந்த பங்களாதேஷ் அரசு அந்த அகதிகளைக் கூடிய விரைவில் மியான்மாருக்குத் திருப்பியனுப்பவே விரும்புகிறது.

இன்னொரு பக்கம் மியான்மாரின் தலைவியான அமைதிப் பரிசுபெற்ற ஔங் சான் சூ ஷீயும் மியான்மாரின் அரசும், இராணுவத் தலைமையும் தமது நடவடிக்கைகளுக்காகப் பெரும் சர்வதேச விமர்சனத்துக்கு உள்ளாகி வருகின்றன. அதனால், அவர்களும் ரோஹின்யா மக்களை விரைவில் திரும்பித் தமது நாட்டுக்குள் கொண்டு வருவதை விரும்புவதாகத் தெரிகிறது.

ஆனால், மியான்மாரில் தொடர்ந்தும் வாழும் சுமார் 400,000 ரோஹின்யா மக்கள் மீதான கொடுமையான நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடந்துவருவதாகப் பல மனிதாபிமான அமைப்புக்கள் தெரிவிக்கின்றன. நாட்டுக்குள் ஐ.நாவின் மனிதாபிமானக் குழுவினர் வந்து நிலைமையைப் பார்வையிடம் மியான்மார் தொடர்ந்தும் மறுத்து வருகிறது.

பங்களாதேஷில் அகதிகளாக இருப்பவர்களில் பெரும்பாலானோரும் மீண்டும் தமது நாடான மியான்மாருக்குத் திரும்பிப் போவதையே விரும்புவதாகப் பல கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. ஆனால், தற்போதைய நிலைமையில் அவர்களின் அந்தக் கனவு நிறைவேறும் காலம் மிகத் தூரத்திலேயே இருப்பதாகத் தெரிகிறது.

# மரபணு மாற்றத்துடன் சீனக் குழந்தைகள்

மருத்துவ உலகத்தைத் திடுக்கிடவைக்கும் ஒரு செய்தியாக மரபணுக்கள் மாற்றம்–திருத்தம் செய்யப்பட்டு இரட்டைக் குழந்தைகள் பிறந்திருக்கும் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. ஷே ஷுவாங்குயி என்ற சீனாவைச் சேர்ந்த மருத்துவ விஞ்ஞானி ஒருவர் எட்டுத் தம்பதிகளுக்கு மருத்துவப் பரீட்சைகள் செய்து அவர்களில் ஒரு தம்பதிகளுக்கு இரட்டைப் பெண் குழந்தைகள் பிறந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லூலு, நானா என்ற அக்குழந்தைகளில் ஒருவருக்கும் மரபணு மாற்றம் முழுவதுமாக வெற்றியடைந்திருப்பதாகவும் மற்றப் பெண் குழந்தையில் பகுதி மரபணு மாற்றங்கள் மட்டுமே வெற்றியடைந்திருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.



வழக்கமாக முக்கியமான மருத்துவ ஆராய்ச்சிகள் பற்றிய விபரங்கள் சர்வதேச மருத்துவச் சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டபின் ஆராய்ச்சியின் ஒவ்வொரு கட்டங்களும் மருத்துவக் கண்காணிப்புக் குழுவின் பரிசீலனைகளுடனேயே நடாத்தப்படுவது வழக்கம். ஆனால், இக்குழந்தைகள் மரபணு மாற்றங்கள் செய்து பிறந்துள்ளதாக மட்டும் செய்திகள் வெளியாகியிருப்பதுடன், தென்கிழக்குச் சீனாவில் சென்சேன் பிராந்தியத்தில் பணியாற்றிவரும் ஷே ஷுவாங்குயி விடுமுறையில் போயிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது. அந்த ஆராய்ச்சியாளர் அவ்விடயத்தை ஹொங்கொங்கில் நடந்த மருத்துவ ஆராய்ச்சியாளர் மாநாட்டில் வெளியிட்டதாகச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

CRISPR/Cas 9 என்று குறிப்பிடப்படும் இந்த மருத்துவ நுட்பம் ஏற்கனவே மரபணுக்களில் மாற்றங்கள் செய்து மனிதக் குழந்தைகளைப் பெறவைப்பது மிகவும் ஆபத்தான விடயமாகப் பெரும்பாலான விஞ்ஞானிகளால் கணிக்கப்பட்டு வருகிறது.

இப்படியான குழந்தைகளுக்கு வரும் வியாதிகள், பிழைகள் எதையும் பின்பு திருத்தமுடியாது என்று குறிப்பிடப்படுகிறது. மேற்குறிப்பிட்ட ஆராய்ச்சியின் குறி அக்குழந்தைக்கு எதிர்காலத்தில் எய்ட்ஸ் நோய் வராமலிருக்கச் செய்வது என்று குறிப்பிடப்படுகிறது.

அத்துடன் மனிதர்கள் மீதான மரபணு மாற்ற நடவடிக்கைகள் மனித நெறிகளுக்கு எதிரானவை என்ற கருத்தே பெரும்பாலான நாடுகளில் இருக்கிறது. அதனால், இப்படியான மனிதப் பரீட்சைகளை சட்டங்கள் பெரும்பாலான நாடுகளில் கண்டிப்பாக அனுமதிப்பதில்லை. சீனாவில் கூட இப்படியான விஞ்ஞானப் பரீட்சைகளுக்கு அனுமதி கொடுக்கப்படுவதில்லை.

சீனாவில் இது நடந்தேறியிருப்பது உண்மையா, அப்படியானால் ஐரோப்பிய, அமெரிக்கர்களைப் பின் தள்ளிவிட்டுச் சீனா இவ்விடயத்தில் இரகசியமாக முன்னேறியிருக்கிறதா?

# மலசலகூடங்களும் சுகாதாரமும்

மலசலகூடங்கள் இல்லாமை உலகின் வறிய நாடுகளில் சுகாதாரரீதியாக பாரிய பிரச்சினைகளை உண்டாக்கிவருகின்றது. இதனால் ஏற்படும் விளைவுகளால் மில்லியன் கணக்கானோர் உயிரிழக்கும் அபாயம் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. இப்படியான பகுதிகள் ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் மிகவும் வறிய ஆனால் மக்கள் தொகை வேகமாக அதிகரிக்கும் பாகங்களிலேயே அதிகமாக இருக்கின்றன.

ஐ.நாவின் ஆராய்வு அறிக்கையின்படி, உலகின் சுமார் 20 விகிதமான ஆரம்பப் பாடசாலைகளும் சுமார் 12 விகிதமான இரண்டாம் மட்டப் பாடசாலைகளும் மலசலகூட வசதியின்றி இருக்கின்றன. ஆபிரிக்காவின் சகாரா பிராந்தியத்தில் சுமார் 344 மில்லியன் பிள்ளைகளின் வீடுகளில் மலசலகூடங்கள் இல்லை. உலகின் 4.5 மில்லியன் மக்கள் தமது பாவனைக்கு வசதியான மலசலகூடங்கள் இன்றி வாழ்கிறார்கள். எத்தியோப்பியாவின் 93 விகிதமான வீடுகளில் பாவனைக்கு மலசலகூடங்கள் இல்லை.

மலசலகூட வசதிகளில்லாத பகுதிகளில் வாழும் மக்கள் வீதியோரங்களிலும், நீர் நிலைகளின் அருகிலும் தமது இயற்கைத் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்கிறார்கள். இதன் விளைவாகப் பல வியாதிகள் பரவிப் பலரின் உயிரைக் குடிக்கும் நிலைமையும் சாதாரணமானதே.

ஐக்கிய நாடுகள் சபையின் 2015 இன் சுகாதாரத் திட்டங்களில் ஒன்றாக 2030 இல் உலகின் சகலரும் பாவிப்பதற்கு உகந்த மலசலகூட வசதியுள்ளவராகவேண்டும் என்பது குறிப்பிடப்பட்டது. ஆனால், தற்போதைய நிலைமையில் அந்தக் குறியை எட்டமுடியாது என்றோ தோன்றுவதர்க ஐ.நா குறிப்பிடுகிறது. அதன் முக்கிய காரணம், பெரும்பாலான வறிய நாடுகளின் அரசுகள் தமது பொருளாதார நிலைமை கருதி, அதைத் தங்களில் முக்கிய குறிகளில் ஒன்றாகத் திட்டமிடாமல் இருப்பதே என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.



## ஆட்டோ சங்கரின் கதை

# சுமதி... தஞ்சம் கேட்டு வந்த எமன்!

### இந்தியாவை உலுக்கிய சீரியல் கில்லரின் மரண வாக்குமூலம் 10



இங்கே உன்னை வச்சிருக்க முடியாது... என் வீட்டிலே வேலைக்குச் சேர்க்க முடியாது. என் ஒய்ஃப் சந்தேகப்படுவாள். ஏன்னா, நீ வயசுப்பொண்ணு. வேணும்ன்னா உன் அம்மாவுக்குத் தெரியாமல் கோட்டூர்லே இருக்கிற என் அம்மா வீட்டுக்கு அனுப்பறேன். அவங்களுக்குத் துணையும் ஆகும். என்ன சொல்றே?

"தம்பி வணக்கம்" என்ற பெண்மணியை நிமிர்ந்து பார்த்து "யாரும்மா நீங்க? என்ன விஷயம்?"

"என் பேரு ஜோதி" என்றாள் ஜோதி. புருஷனை விட்டு விலகி வந்து சில வருஷங்கள் ஆகியிருந்தன. பெயர் தானே ஜோதியே தவிர, வாழ்க்கை இருட்டாத்தான் இருந்தது.

தாய் ஜோதிக்குப் பின்னால் பயந்தபடி எட்டிப்பார்த்த பெண் சுமதியின் தோற்றத்தில் கணிசமான வளர்ச்சி. லாட்டரிச் சீட்டின் பொங்கல் பம்பர் குலுக்கல் மாதிரி அபார குண்டாக இருந்தாள்.

"இவ... என் மக சுமதி... இவளையும் உங்க கம்பெனியிலே(!) சேர்த்துக்கணும்..."

'கம்பெனியா...?' சுமதியை ஆழமாகப் பார்த்தபடி, "நீ கொஞ்சம் வெளியே போய் இரும்மா" என்று சொல்ல, பெண் வெளியே சென்று நின்றது!

தாய்காரியிடம் பேசினேன்.

"இதப்பாருங்க... பொண்ணு நல்லா இருக்கு... ஆனா, இந்தத் தொழிலுக்கு ஏற்ற உடல்வாகு இல்லை. முகவெட்டு, ஸ்ட்ரக்சர் எல்லாம் நடிகை கணக்கா இருந்தாதான் என்கிட்டே போணி ஆகும். ஏன்னா, நான் பெரிய பெரிய இடங்களுக்கு ஆளனுப்புறவன். உங்க மகளுக்குக் குடும்பப் பொண்ணோட தோற்றம். கிளாமர் பத்தாது" என உதடு பிதுக்கினேன்.

"தம்பி... முடியாதுன்னு சொல்லீடாதீங்க தம்பி! ரெண்டு பேருக்கும் பிழைக்கிறதுக்கு வேற வழியே இல்லை..."


யோசித்தேன். ஐடியா பளிச்சிட்டது!

"சரி, வேலை தரேன். பெண்ணுக்கு இல்லை. உங்களுக்கு. இங்கேயிருக்கிற மற்ற பெண்களுக்குத் துணிமணி துவைச்சுப் போடுங்க. எடுபிடி வேலை செய்யுங்க. சம்பளம் தரேன். அதை வச்சுக் குடித்தனம் செய்யிங்க"

மாலை அந்தப்பெண் என்னைத் தனியா தேடி வரும் என எதிர்பார்க்கவேயில்லை. கண்களில் கரைகட்டிக்கொண்டு நீர் பெருகி ஓட, குரல் தழுதழுத்தது.. "ரொம்ப நன்றி சார்... நல்ல வேளையா என்னை ரிஜக்ட் பண்ணினீங்க. என்னை மட்டும் விபச்சாரியா ஆக்கியிருந்தா தூக்குப்போட்டு செத்திருப்பேன். எனக்கு அதிலே இஷ்டம் கிடையாது. குடும்பம், குழந்தை குட்டின்னு இருக்கத்தான் எனக்கு இஷ்டம். ஆனா, நாலு வருஷமா என்னை எப்படியாவது இப்படி ஆக்கிடணும்னு அம்மா முயற்சி பண்ணுது! சதா சண்டைதான். தாயா இவ? தெரியாத்தனமா இவ கூட ஓடிவந்துட்டேன். நீங்க மறுத்ததாலே இனிமே வேற எங்கேயாவது என்னைத் தள்ள முயற்சி செய்யும்

அம்மா...

உங்களை கையெடுத்து கும்பிடுறேன். என்னைக் காப்பாத்துங்க சார்! உங்க வீட்டிலே ஒரு ஓரமா இடம் கொடுத்தா போதும். வேலைகளைக் கவனிச்சுக்கிட்டு நான் பாட்டுக்கு இருந்துப்பேன். என் கற்பு கெடாம நான் இருக்கணும்... அவ்வளவுதான்!"



விக்கித்துப் போனேன். மனசுக்குள் உணர்ச்சிகள் கண்ணாமூச்சி ஆடிற்று. சுமதியை இரக்கம் பொங்கப் பார்த்தேன்.

"கவலையே படாதேம்மா... எப்பாடு பட்டாவது உன்னைக் காப்பாத்தறேன். உன் கற்புக்கு ஒரு சின்ன தீங்குகூட வராது... போதுமா?" என்றேன் உறுதியுடன்.

"இங்கே உன்னை வச்சிருக்க முடியாது... என் வீட்டிலே வேலைக்குச் சேர்க்க முடியாது. என் ஒய்ஃப் சந்தேகப்படுவாள். ஏன்னா, நீ வயசுப்பொண்ணு. வேணும்ன்னா உன் அம்மாவுக்குத் தெரியாமல் கோட்டூர்லே இருக்கிற என் அம்மா வீட்டுக்கு அனுப்பறேன். அவங்களுக்குத் துணையும் ஆகும். என்ன சொல்றே?"

சம்மதித்தாள். ஆனால் சுவற்றில் மோதின பந்தாக கோட்டூர் போன மறுநாளே திரும்பி வந்தாள். வந்தவள்



நேராக ஆட்டோ ஸ்டாண்டு பக்கமாய் இருந்த நம்ம சாராயக்கடைக்கே வந்து நின்று கண்ணைக் கசக்கினாள். "ஏய்.. என்ன ஆச்சு?" என்றேன். அவள் நிமிர்ந்து சொன்னாள்...

"உங்க அம்மா என்னைச் சந்தேகப் படுறாங்க... உங்க வைப்பாட்டியாம் நான்! அடிச்சு துரத்திட்டாங்க" கண்ணைக் கசக்கினாள்.

சரி.. எவ்வளவோ சம்பாதிக்கிறேன்.. எப்படி எல்லாமோ செலவு பண்றேன்.. உன் ஒருத்திக்குச் சோறு போடற திலே ஒண்ணும் கஷ்டம் இல்லை. ஒரு அப்பாவிப் பெண் விபச்சாரி ஆகாம என்னாலே காப்பாற்றப்பட்டாளேன்னு சந்தோஷமாகூட இருக்குமேயென்று, மருந்தீஸ்வர் நகரில் வீடு பார்த்து சுமதியை கொண்டு போய் அங்கே குடி வைத்தேன். சாப்பிடவும் உடுத்தவும் வசதிகள் செய்து தரப்பட்டது. கணிசமாய் பண்ட பாத்திரங்களும்!

ரெண்டு மூணு நாள் கழித்து மறுபடியும் "வீடு சௌகரியமாய் இருக்கிறதா'என அவளிடம்விசாரிப்பதற்காக சென்றபோது எனக்கு அதிர்ச்சி.

(தொடரும்)

நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த நாயகன் கலையரசன் தனது அம்மா தங்கையுடன் சேரி பகுதியில் வசித்து வருகிறார். ஓட்டோ ஓட்டி பிழைப்பை நடத்தி வரும் கலையரசனுக்கு அந்த பகுதி தாதாவான ஜான் விஜய்யிடம் கடன் வாங்கிவிட்டு அதை கொடுக்க முடியாமல் தவித்து வருகிறார். கலையரசனும் பணக்கார வீட்டு பெண்ணான நாயகி அனஸ்வரா குமாரும் காதலித்து திருமணம் செய்து கொள்கின்றனர்.

இந்த நிலையில் கலையரசனின் அம்மாவுக்கு உடல்நிலை சரியில்லாமல் போகஇ அம்மாவை காப்பாற்ற லட்சங்கள் செலவாகும் என்பதால் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்து வருகிறார். எனவே வீட்டு புரோக்கரான சார்லியுடன் ஒரு வீட்டுக்கு செல்கிறார் கலையரசன். வயதான பெண் மட்டுமே இருக்கும் அந்த வீட்டில் கொள்ளையடித்தால் செட்டில் ஆகி விடலாம் என்று சார்லி விளையாட்டாக சொல்கிறார். இதையடுத்து அந்த வீட்டில் திருட முடிவு செய்து கலையரசன் அந்த வீட்டுக்கு செல்கிறார்.

இதுஒருபுறம் இருக்க மனோஜ் கே.ஜெயன் தனது மனைவி சாயா சிங்கை கொடுமைப்படுத்தி வருகிறார். இதனால் மனோஜ் மீது சாயாவுக்கு வெறுப்பு ஏற்படுகிறது. மேலும் தன்னுடன் பாசமாக பழகும் இளைஞர் ஒருவருடன் சாயா நெருக்கமாகிறார். இதையடுத்து அந்த இளைஞரை ஒருநாள் இரவு தனது அம்மா வீட்டிற்கு வர சொல்கிறார் சாயா.

மேலும் வயதானவர்களை தேர்ந்தெடுத்து கொலை செய்து வரும் சைக்கோ கொலையாளி சாயாவின் அம்மாவை கொல்ல நினைக்கிறான்.இவ்வாறாக கலையரசன் சாயா சிங் சைக்கோ கொலையாளி என இவர்கள் சந்திக்கும் போது என்ன நடந்தது? கலையரசன் தனது அம்மாவை காப்பாற்றினாரா? அதன் பின்னணியில் என்ன நடந்தது? என்பதே படத்தின் மீதிக்கதை. கலையரசன் சாதாரண நடுத்தர குடும்பத்து இளைஞராக சிறப்பாக நடித்திருக்கிறார். கொள்ளையடிக்க செல்லும் வீட்டில் அவரது நடிப்பு நேர்த்தியானதாக இருந்தது. நாயகி அனஸ்வரா குமாருக்கு சொல்லும்படியான கதாபாத்திரம் இல்லை என்றாலும் கொடுத்த கதபாத்திரத்தில் ரசிக்க வைக்கிறார். சாயா சிங்குக்கு அழுத்தமான கதாபாத்திரம், அதை ஏற்றுக் கொண்டதற்காக அவருக்கு பாராட்டுக்கள். மற்றபடி மனோஜ் கே.ஜெயன் ஜான் விஜய் சார்லி எம்.எஸ்.பாஸ்கர் அனுபவ நடிப்பை வெளிப்படுத்தியிருக்கின்றனர். யோக் ஜபி ஜாங்கிரி மதுமிதா சுவாமிநாதன் என மற்ற கதாபாத்திரங்களும் கொடுத்த கதாபாத்திரத்தை மெருகேற்றியிருக்கின்றனர்.

இயல்பான நிறைய இடங்களில் கேட்ட பார்த்த கதை தான் என்றாலும் திரைக்கதையில் வித்தியாசமாக இயக்கியிருக்கிறார் ஜெயதேவ் பாலசந்திரன். எனினும் திரைக்கதையில் கொஞ்சம் கவனம் செலுத்தி, படத்தின் காட்சிகளை கொஞ்சம் சுருக்கியிருந்தால் படம் இன்னமும் சிறப்பாக வந்திருக்கும்.

ராணா ஒளிப்பதிவும் இஷான் தேவ் பிரணவ் தாஸ் ஸ்ரீஜித் மேனன் இசையும் படத்திற்கு வலுசேர்த்திருக்கிறது.





ஜாலு சௌரிசியா

## ஓயாது நீடிக்கும் #MeToo விவகாரம் - மோகன்லாலின் கருத்திற்கு ரேவதி கண்டனம்

#MeToo தொடர்பில் நடிகர் மோகன்லால் கூறிய கருத்துக்கு நடிகை ரேவதி தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார். #MeeToo இயக்கம் திரையுலகை உலுக்கி வருகிறது. நடிகர்கள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் மீது நடிகைகளும் பெண் இயக்குநர்களும் தொடர்ந்து பாலியல் குற்றச்சாட்டுக்களை கூறி வருகிறார்கள். இந்நிலையில், மலையாள நடிகர் சங்கம் பாலியல் குற்றவாளிகளை பாதுகாக்கிறது என்று ரேவதி, பார்வதி, பத்மபிரியா மற்றும் ரிமா கல்லிங்கல் ஆகியோர் குற்றம் சாட்டினர்.இதனிடையே நடிகர் மோகன்லால் #Metoo வை சாடினார். அவர் கூறும்போது, "#Metoo என்பது ஒரு ஃபஷனாகி விட்டது. அது வந்த வேகத்திலேயே மறைந்து விடும். #Metoo வை இயக்கம் என்கின்றனர். அதை இயக்கமாக பார்க்க கூடாது. 'மீ டு'வின் ஆயுட் காலம் குறைவுதான். பாலியல் தொல்லைகள் திரையுலகில் மட்டுமல்ல எல்லா இடங்களிலும் இருக்கிறது." என்றார்.

இதனால் மோகன்லாலுக்கு அவரது பெயரை குறிப்பிடாமல் நடிகை ரேவதி கண்டனம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து டுவிட்டரில் அவர் கூறும்போது, "உணர்வுகளோடு பேசுவது பற்றி சிலருக்கு எப்படி பாடம் நடத்துவது? பிரபலமான நடிகர் ஒருவர் #Metoo என்பது ட்ரெண்ட் என்று சொல்கிறார். இயக்குநர் அஞ்சலி மேனன் சொன்னதுபோல் சமீபத்தில் செவ்வாய் கிரகத்தில் இருந்து வந்தவர்களுக்கு பாலியல் கொடுமைகள் பற்றியும் அதை வெளியில் சொல்வதால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றியும் தெரியாது." என்று கூறியுள்ளார்.

## ஷாருகான் மன்னிப்பு கோர வேண்டும் - கலிங்க சேனா அமைப்பு

கலிங்க போரை தவறாக சித்தரித்த ஷாருக்கான் மன்னிப்பு கேட்க வேண்டும் என கலிங்க சேனா அமைப்பு தெரிவித்துள்ளது. இல்லையேல் அவர்மீது மை வீசுவோம் என எச்சரிக்கை விடுத்துள்ளது.பிரபல ஹிந்தி நடிகர் ஷாருக்கான், கடந்த 2001 ஆம் ஆண்டில் 'அசோகா' என்ற படத்தில் நடித்திருந்தார். இப்படத்தில் அஜித்குமாரும் முக்கிய கதாபாத்திரத்தில் வந்தார்.

சந்தோஷ் சிவன் இயக்கியிருந்த இப்படத்துக்கு அப்போது ஒடிசாவில் எதிர்ப்பு கிளம்பியது. போராட்டங்களும் நடந்தன. இதனால் அங்கு படம் வெளியிடப்பட்டு ஒருவாரத்தில் நிறுத்தப்பட்டது. 'அசோகா' படம் வெளியாகி 11 வருடங்கள் ஆன நிலையில் இப்போது மீண்டும் படத்துக்கு எதிராக புதிய பிரச்சினை கிளம்பியுள்ளது. படத்தில் கலிங்கப் போரை தவறாக சித்தரித்துள்ளதாகவும் இதன் மூலம் ஒடிசா மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தி இருப்பதாகவும் கலிங்க சேனா என்ற அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

இதனால் அந்த அமைப்பின் தலைவர் ஹேமந்த ராத் பொலிஸிலும் முறைப்பாடு செய்தார். இந்நிலையில் ஒடிசாவில் உள்ள கலிங்கா ஸ்டேடியத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி ஹொக்கி உலக கோப்பை போட்டி நடக்கவுள்ளது. இப்போட்டியைக் காண வருமாறு நடிகர் ஷாருக்கானுக்கு ஒடிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக் அழைப்பு விடுத்துள்ளார். ஷாருக்கானும் அந்த அழைப்பை ஏற்று விளையாட்டை காண வருகிறார்.இதற்கு கலிங்க சேனா அமைப்பு எதிர்ப்பு தெரிவித்துள்ள்தோடு, 'அசோகா' படத்தில் கலிங்க போரை தவறாக சித்தரித்த ஷாருக்கான் மன்னிப்பு கேட்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது. இல்லை என்றால் ஒடிசா வரும் அவரது முகத்தில் மை வீசுவோம். அவர் செல்லும் இடங்களில் கருப்புகொடியும் காட்டுவோம் என்று அந்த அமைப்பின் செயலாளர் நிஹார் பானி அறிவித்துள்ளார். இதனால் ஷாருக்கானுக்கு பலத்த பாதுகாப்பு அளிக்க மாநில அரசு ஏற்பாடு செய்துள்ளதுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எனக்கு பயணம் என்றால் பிரியம் - பிரீத்தி சிங்

நான் பஞ்சாபி பொண்ணு. அப்பா இந்திய படை வீரர். அப்பாவை இரண்டுஆண்டுகளுக்கு ஒரு முறை வேற வேற ஊருக்கு மாத்திக்கிட்டே இருப்பார்கள். அதனால் நான் இந்தியாவுல பல இடங்களில் வாழ்ந்திருக்கிறேன். தமிழ், தெலுங்கு என இரண்டு மொழிகளிலும் முன்னணி நடிகையாக இருக்கிறார் ரகுல் பிரீத்தீ சிங், இன்றைய இளைஞர்களின் கனவு கன்னி மேற்படி கூறியுள்ளார்.

அவர் ஊடகங்களிடம் வழங்கிய செவ்வியில் மேலும் கூறியுள்ளதாவது

"எனக்கு பயணம் செல்வது மிகவும் பிடிக்கும். இப்போது குடும்பத்தினர் டெல்லியில் இருக்கிறனர். நான் ஹைதராபாத்தில் வசிக்கிறேன். என் முடிவுகளை நானே எடுக்க வேண்டும் என்றே அம்மா சொல்லி வளத்தார். ஆனால் அதற்கான பக்குவம் இன்னும் எனக்கு வரலை. அதனால் எந்த ஒரு விடயத்தையும் அப்பாவிடம் கேட்டுத்தான் முடிவு எடுப்பேன்.. அப்பாவின் பிட்னஸ்சை கவனிப்பது என் முக்கியமான பொழுதுபோக்கு.


சின்ன வயதில் இருந்தே கராத்தை கற்று வருகிறேன். எனக்கு மிகவும் விருப்பமானது. நிறைய பரிசில்களை பாடசாலை காலத்தில் வாங்கியுள்ளேன். பாடசாலைக்காலத்தில் படிக்கும்போது தேசிய அளவிலான கோல்ப் போட்டிகள் விளையாடியிருக்கேன். மாசத்துல ஒரு தடவையாவது கோல்ப் கிரவுண்ட்டுக்குப் போயிடுவேன். இல்லைனா இன்டோர் கேம்ஸ் விளையாடுவேன். பெண் குழந்தைகளுக்கு கல்வி அளிப்பதை எனது சேவையாக நடைமுறைப்படுத்தி வருகிறேன். ஒரு பெண் குழந்தைக்கு பாடம் சொல்லிக் கொடுப்பது என்பது அந்தக் குடும்பத்துக்கே கல்வி அளிப்பதற்கு சமம். கிராமங்களில் நடிகர்களைக் கடவுள் மாதிரி நினைக்கிறார்கள். ஆனால் மக்களிடம் நேரடியா போய் விழிப்புணர்வு ஏற்படுத்தினோம் என்றால் நிச்சயம் மாற்றம் வரும்.

தொழில் மீது செலுத்தும் கவனத்தை தனிப்பட்ட வாழ்க்கை மீதும் செலுத்துமாறு என் அம்மா கூறுகிறார். எப்பொழுது பார்த்தாலும் வேலை வேலை என்று இருக்க வேண்டாம் என்கிறார். விரைவில் திருமணம் செய்து கொண்டு செட்டில் ஆகுமாறும் அம்மா வலியுறுத்தி வருகிறார். இன்னும் எத்தனை நாட்களுக்கு சிங்கிளாக இருப்பது என்று அம்மா கேட்கிறார். என் அம்மா சொல்வது போன்று உடனே திருமணம் செய்து கொள்ள எனக்கு மும்பை அல்லது ஹைதராபாத்தில் காதலர் இல்லை. அதனால் யாரையாவது பார்த்துக் கொடுக்குமாறு நண்பர்களிடம் தெரிவித்துள்ளேன். 6 அடி உயரம் இருக்க வேண்டும். முக்கியமாக தெலுங்கு பேசுபவராக இருக்க வேண்டும். நானும் ராணாவும் நல்ல நண்பர்களே தவிர காதலர்கள் இல்லை." என்றும் அவர் கூறியுள்ளார்.

## அட்லியின் அடுத்தபடத்தில் விஜயக்கு ஜோடியாக நயன்

அட்லி இயக்கத்தில் தளபதி விஜய் நடிப்பில் உருவாக இருக்கும் 'தளபதி 63' திரைப்படத்தில் விஜய்க்கு ஜோடியாக நயன்தாரா நடிக்கின்றார். தெறி, மெர்சல் திரைப்படங்களை தொடர்ந்து விஜய், அட்லி மூன்றாவது முறையாக புதியபடத்தில் இணையவிருக்கின்றனர். இந்த திரைப்படத்தில் விவேக் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்ர். இசைப்புயல் ஏ.ஆர். ரஹ்மானின் இசையமைப்பில் உருவாகவிருக்கும் இந்த திரைப்படத்திற்கு ஜி.கே.விஷ்ணு ஒளிப்பதிவு பணிகளை மேற்கொள்கின்றார்.ஏ.ஜி.எஸ் என்டர்டெயின்மெண்ட் சார்பில் கல்பாத்தி எஸ்.அகோரம் தயாரிக்கும் இந்த திரைப்படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு 2019ஆம் ஆண்டு ஜனவரியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேலும் இந்த திரைப்படம் தீபாவளிக்கு வெளியாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.இந்நிலையில் 'தளபதி 63' திரைப்படத்தில் விஜய்க்கு ஜோடியாக நயன்தாரா நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார் என்று படக்குழுவினர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளனர்.




அலன்கிரிடா

## ஜெயலலிதாவாக நடிப்பது கடினமாகவுள்ளது - நித்யா மேனன்

பிரியதர்ஷினி இயக்கத்தில் ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாற்று படத்தில் ஜெயலலிதா வேடத்தில் நடிக்க தயாராகி வருகிறார் நித்யா மேனன்: எனக்கு வரும் வாய்ப்புகளை ஏற்றுக்கொள்கிறேன். எனக்கு கதையும் என்னுடைய வேடமும் மிகவும் முக்கியம். நிறைய கதைகள் வருகின்றன. ஆனால் சுவாரசியமான படங்களில் மட்டும்தான் நடிக்க விரும்புகிறேன். ஜெயலலிதா போன்ற மாபெரும் தலைவர் வேடத்தில் நடிக்கும் போது நமக்கு பொறுப்பு தேவை. சாதாரணமாக நடித்துவிட முடியாது. படத்தில் எந்த இடத்திலும் நித்யா மேனன் தெரியக்கூடாது. அந்த பொறுப்பும் கடமையும் இயக்குனருக்கு மட்டுமல்ல நடிக்கும் நடிகைக்கும் இருக்கிறது. பிரியதர்ஷினி கதையை சொல்லும்போதே அவரது அர்ப்பணிப்பு புரிந்துவிட்டது. அதனால்தான் சம்மதித்தேன். உடலளவிலும் மனதளவிலும் ஜெயலலிதாவாக நான் மாற வேண்டியிருக்கிறது. அவரது முழு வாழ்க்கையையும் திரைக்கு கொண்டு வர இருக்கிறோம். சந்திரனுக்கு இந்திய விண்கலம் ஒன்று செலுத்தப்பட்டது என்பது வரலாற்று சாதனை. அந்த சாதனையை படமாக்கும்போது அந்த படத்தில் நான் இடம்பெற்று இருப்பது பெருமையான விடயம் எனத் தெரிவித்துள்ளார்.

## விசுவாசம் படத்தில் மோஷன் போஸ்டர் வெளியானது

சிறுத்தை சிவா இயக்கத்தில் அஜித் மற்றும் நயன்தாரா நடித்துவரும் 'விசுவாசம்' திரைப்படத்தின் மோஷன் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. சிவா இயக்கத்தில் அஜித் நாள்காவது முறையாக நடித்து வரும் திரைப்படம் 'விசுவாசம்'. ஐதராபாத்தில் தொடங்கிய இதன் முதல் கட்டப்படப்பிடிப்பு தற்போது முடிந்து அடுத்த கட்டப் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்த படத்தில் அஜித்துக்கு ஜோடியாக நயன்தாரா நடிக்கின்றார்.மேலும் விவேக், யோகிபாபு, தம்பி ராமையா உள்ளிட்ட பலர் நடிக்கின்றார்கள். சத்யஜோதி பிலிம்ஸ் நிறுவனம் தயாரித்து வரும் இத்திரைப்படத்திற்கு டி. இமான் இசையமைத்துள்ளார். இந்த திரைப்படத்தில் அஜித் இரண்டு வேடங்களில் நடித்து வருகின்றார். இவருடன் சேர்ந்து தம்பி ராமையாவும் இரண்டு வேடங்களில் நடித்துள்ளார். பொங்கல் தினத்தன்று வெளியிடயிருப்பதாக திரைப்படக்குழுவினர் அறிவித்துள்ளனர். இந்நிலையில், 'விஸ்வாசம்' படத்தின் மோஷன் போஸ்டர் நேற்று வெளியிடப்பட்டது. குறித்த மோஷன் போஸ்டரில், விஸ்வாசம் திரைப்படம் பொங்கலுக்கு வெளியாகும் என திரைப்படக்குழு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நயன்தாராவின் தற்போதைய சம்பளம் எவ்வளவு தெரியுமா?

தமிழ் திரையுலகின் முன்னணி கதாநாயகிகளில் முதன்மை நாயகியாக வலம்வருபவர் நயன்தாரா. இவர் படத்துக்கு படம் தனது சம்பளத்தை உயர்த்திக் கொண்டே போகிறார். இதுவரை ரூ.4 கோடி சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த நயன்தாரா, ஹகோலமாவு கோகிலா' படத்துக்குப்பின் தனது சம்பளத்தை ரூ.6 கோடியாக உயர்த்தி விட்டார். இது தொடர்பில் நயன்தாரா கூறியபோது, 'நான் நடித்த ஹகோலமாவு கோகிலா' படம் ரூ.12 கோடி வசூல் செய்து இருக்கிறது. அந்த படத்துடன் வந்த ஒரு பெரிய கதாநாயகனின் படம் ரூ.9 கோடிதான் வசூல் செய்திருக்கிறது. எனவே எனது சம்பளத்தை மேலும் ரூ.2 கோடி உயர்த்தியதில், எந்த தவறும் இல்லை என்று கூறியுள்ளாராம்.

# கடற்கரை இசைக்கருவியும், சூரிய நமஸ்காரமும்




ஸடார் நகரிலிருந்து துறைமுகத்தை நோக்கி நடக்கும் பாதையே அழகாக அமைக்கப்பட்டிருந்தது. பூமரங்களும், செடிகளும், மெத்தை போன்ற பச்சைப்புற்றரையும் எங்களைச் சுற்றியிருந்தன. அருகிலிருந்த பல கட்டடங்கள் நவீனப்படுத்தப்படிருந்தாலும் அவைகளில் பழமையைக் காண முடிந்தது. முக்கியமாகப் பல சாளரங்களின் அமைப்புக்களில் பழமை தெளிவாகத் தெரிந்தது. சுற்றிவரப் பூஞ்செடிகளால் பந்தல்கள் அமைக்கப்பட்டு இருந்த சில சாளர அமைப்புக்கள் கண்களைக் கவர்ந்ததைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

நாங்கள் துறைமுகத்தை அடையும்போது தூரத்தில் வான எல்லையில் சூரியன் மறைந்துகொண்டிருந்தது. அதன் மஞ்சள் நிறக்கதிர்கள் அந்த அதிரியாக் கடற்பிரதேசம் முழுவதையும் தனது ஒளியால் ஆக்கிரமித்திருப்பதைக் காண்பது ஒரு வித்தியாசமான அனுபவம். கடலில் மிதந்துகொண்டிருந்த மாளிகைகள் போன்ற உல்லாசக்ப் பயணக்கப்பல்களும், சிறிய படகுகளும், பாய்க் கப்பல்களும் கூடத் தங்கள் மேல் மஞ்சள் நிறத்தை வாரிப் பூசிக்கொண்டிருந்தன.

இயக்குனர் ஹிட்ச்கொக் அந்தக் கடற்கரையின் மகிமையை மிகைப்படுத்தாமல்தான் சொல்லியிருக்கிறார் என்று நினைத்துக்கொண்டேன். அங்கே ஏற்கனவே நிறையப் பேரைக் காணமுடிந்தது. மேலும் பலர் வந்துகொண்டிருந்தார்கள்.

இக்கடற்கரையிலிருந்த ஒரு முக்கிய இசை கட்டடக் கலை வேலைப்பாட்டைப்பற்றி நான் ஒரு வானொலி நிகழ்ச்சியில் கேள்விப்பட்டிருந்தேன். நேரடியாக அதைக் காணவேண்டும் என்ற ஆவல்தான் இப்பிரயாணத்தில் ஸடாரையும் சேர்த்துக்கொள்ள என்னைத் தூண்டியிருந்தது.

அந்தக் கடற்கரைத் துறைமுகத்தில் [Nikola Bašić] நிக்கோலா பாசிச் என்ற கலைஞரின் கற்பனையுடன் அவரது கைவண்ணத்தால் [2005 இல்] உருவாக்கப்பட்டிருக்கும் எனப்படும் sea organ என்ற வித்தியாசமான இசைக்கருவி.

சுற்றுலாப் பயணிகளின் பாரிய கப்பல்கள் வரும் ஒரு சாதாரணமான துறைமுகமாக இருந்த அந்தக் கடற்கரையில் அக்கலைஞர் கட்டடக் கலையுடன் சேர்ந்த அமைப்பில் இயற்கையின் விளையாட்டைப் பாவித்து ஒரு இசைக்கருவியை அமைத்திருக்கிறார் என்று நினைக்கும்போது வியப்பாக இருக்கிறது. அத்துடன் அந்த இசைக்கருவி அவர் திட்டமிட்டதுபோல அங்கே வருபவர்களை வரவேற்கும் இசையை ஒலிக்கிறது என்று நேரடியாக உணரும்போது புல்லரிக்கிறது.

பளிங்குக்கற்களால் அமைக்கப்பட்டிருக்கும் அந்தக் கடற்கரைப் படிக்கட்டுகளில் அடிக்கும் அலைகளின் நாட்டியம் அப்படிக்கட்டுகளினூடே நீர்மட்டத்தின் கீழே அமைந்திருக்கும் ஊதுகுழல்கள் போன்ற ஓட்டைகளினூடாகக் காற்றைச் செலுத்துகிறது. வெவ்வேறு அளவுகளில் அமைக்கப்பட்டிருக்கும் அந்த 35 ஊதுகுழல்களினூடாகப் பயணமாகும் காற்று நீர் மட்டத்துக்கு மேலே இருக்கும் இரண்டு படிகளில் வரிகளாக இருக்கும் குழாய்கள் மூலமாக வெளியே இசையாக மாறி ஒலிக்கிறது.

கடலலைகள் வெவ்வேறு அளவில், வெவ்வேறு வேகத்தில் தாக்கும்போது, ஏற்படும் அதிர்வினால் அக்குழல்களினூடாகக் காற்று வித்தியாசமான அளவில் புகுவதால் அங்கே எப்போதுமே இயற்கை தன் இசையமைப்பை நிகழ்த்திக்கொண்டிருக்கிறது. பியானோ அல்லது ஆர்மோனியம்போன்றஒருவிதமான இசையால் நிறைந்திருக்கும் அவ்விடத்தில், மாலைச் சூரியக் கதிர்களில் குளித்துக்கொண்டிருந்தார்கள் பலர்.



சிலர் ஜோடிகளாகத் தோள்களை அணைத்துக்கொண்டு அப்படிக்கட்டுகளில் இருக்க, மற்றும் பலர் வெவ்வேறு இடங்களில் மாறி நின்று இசையக் கேட்டு ரசித்துக்கொண்டிருந்தார்கள். அங்கிருந்த பல சிறார்களைப் போலவே மகன் கதிரும் அங்குமிங்கும் ஓடிச் சென்று அந்தஇசை எங்கிருந்துவருகிறது என்று குனிந்து படிக்கட்டுகளின் கீழே காதை வைத்துப் பார்த்துக் கேட்டுக்கொண்டிருந்தான்.

அந்தப் படிக்கட்டுகள் சுமார் 70 மீற்றர் தூரத்துக்கு நீண்டிருப்பதால் அங்கே நிறையப் பேர் நின்று ரசிக்க இடமிருந்தது. உலகின் எத்தனையோ நாட்டுக்காரர்களை அங்கே காண முடிந்தது. அந்த மாலையில் கடலலைகளின் வேகம் அதிகமாக இல்லாதிருந்ததால் பலர் அங்கேயே குதித்து நீச்சலடித்துக்கொண்டிருந்தார்கள். இன்னும் சிலர் தங்களது நீச்சலுடைகளுடன் படிகளில் படுத்துச் சூரியக் கதிர்களில் குளித்துக்கொண்டிருந்தார்கள்.

“நாங்கள் நீச்சலுடை கொண்டு வந்திருந்தால் நீந்தியிருக்கலாமே,” என்று கதிர் அங்கலாய்ப்புடன் சொன்னான். “நாளைக்கு நாங்கள் திரும்பி வருவோம், அப்போது நீந்தலாம்,” என்று சொல்லிச் சமாதானப்படுத்தினேன் அவனை.

அவ்விடத்தை ரசித்துப் படங்களை எடுத்துக்கொண்டிருக்கும்போது மெதுவாக இருட்டு எங்களைத் தழுவ ஆரம்பித்தது. அந்த நேரத்துக்கு வரவேற்புக் கொடுக்கவும் நிக்கோலா பாசிச் அருகிலேயே இன்னொரு கலை அமைப்பை உண்டாக்கியிருந்தார். அதன் ·பெயர் [greeting to the sun] “சூரிய நமஸ்காரம்.” இந்தக் கலை அமைப்புக்களுக்காக அந்தக் கலைஞருக்குப் பல சர்வதேச விருதுகளும் வழங்கப்பட்டிருக்கிறது என்பதில் வியப்பதற்கு ஏதுமில்லை.

அங்கே சுமார். 22 மீட்டர் விட்டத்தில் கடற்கரை நடைபாதையில் 22 சூரியக் கதிர்வாங்கிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. அவை பகலில் விழும் சூரிய வெளிச்சத்தில் இருந்து சக்தியைச் சேகரித்து வைத்து இரவில் ஒளியாக வீசுகின்றன. அவ்வொளி அங்கே பதிக்கப்பட்டிருக்கும் வெவ்வேறு நிறக் கண்ணாடிகள் மூலம் பரப்படுகிறது. அந்தக் கதிர்வாங்கிகள் வருடாவருடம் சுமார் 46,500 கிலோ வாட்ஸ்சக்தியைஉற்பத்திசெய்து அந்தப் பிராந்தியத்துக்கே ஒளிகொடுக்கின்றன. இயற்கையினால் உற்பத்தி செய்யப்பட்டு அழகுபடுத்தும் அந்தக் கலையமைப்புக்கு சூரிய நமஸ்காரம் என்று பெயர் கொடுத்திருப்பது மிகவும் பொருத்தமாகவே இருக்கிறது என்பேன்.

அந்த அமைப்பிற்குள் அப்பிராந்தியத்திலிருக்கும் கிறீஸ்தவப் புனிதர்களின் பெயர்களும் அவர்களுடைய பண்டிகை நாட்களின் திகதிகளும் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

அருகிலேயே இருக்கும் கடல் இசைக்கருவியிலிருந்து வரும் இசையை இரவில் நிறங்களால் ஒளிரும் சூரிய நமஸ்காரத்துடன் இணைத்து அந்த ஒளி நிறங்களை அந்த வட்டத்துக்குள் மாறக்கூடியதாக செய்திருக்கிறார்கள். அதனால் இளவட்டங்கள் பலரும் ஒரு நிறத்துக்கு மேலே நின்றுவிட்டு அது அவ்வட்டத்தில் பரவும்போது அதன் மீது ஓடி ஓடிச் செல்வதை விளையாட்டாகச் செய்துகொண்டிருந்தார்கள்.

சிரிப்பொலிகளால் உண்டான சந்தோச அலைகள் அங்கே கடலலைகளின் இசையுடன் கைகோர்த்து நடனமாடிக்கொண்டிருந்தன.

தொடரும்.





## கொரியாவின் கதை #4

# ஜப்பானிடம் கொரியா அடிமைப்பட்டது எப்படி?

18 மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய நாடுகள் தங்களுடைய உற்பத்தி பொருட்களை விற்க கிழக்கு நாடுகளை நோக்கி படையெடுத்து வந்தன. சீனா, கொரியா, ஹொங்கொங், தைவான் போன்ற இடங்களில் ஐரோப்பியர்கள் வர்த்தக உரிமையைப் பெற்று சந்தைகளை ஏற்படுத்தினார்கள்.

ஜப்பானில் மெய்ஜி பேரரசு வலுப்பெற்றிருந்தது. ஜப்பான் முழுவதும் ஒருங்கிணைந்த பேரரசாக இருந்தது. எனவே, ஜப்பானிய போர் வீரர்களான ஆயிரக்கணக்கான சாமுராய்கள் வேலையிழந்தனர். பொருளாதார ரீதியாக நலிவடைந்தனர். இந்தச் சமயத்தில் கொரியாவைக் கைப்பற்றுவது தொடர்பான விவாதம் எழுந்தது. 1873 ஆம் ஆண்டு இந்த விவாதம் தீவிரமடைந்தது. இந்த விவாதத்துக்கு முக்கியமான காரணமாக சைகோ டகாமோரி என்பவர் இருந்தார். இவர் சாமுராய் வீரர்களில் முக்கியமானவர். பேரரசர் மெய்ஜி தலைமையில் ஜப்பானிய பேரரசை மீண்டும் அமைத்ததில் இவருடைய பங்கு முக்கியமானது. 1868 ஆம் ஆண்டு மெய்ஜி பேரரசு பொறுப்பேற்றது. அதன்பிறகு அங்கு தொழில் வளம் பெருகியது. ஆனால், வர்த்தகம் செய்ய போதுமான சந்தையோ, தொழில்களுக்கு தேவையான கச்சாப் பொருட்களோ இல்லை. எனவேதான் கொரியாவை கைப்பற்றுவது என்ற பேச்சு எழுந்தது. கொரியாவோ சீனாவின் குய்ங் பேரரசின் பாதுகாப்பில் இருந்தது.

ஜப்பானியப் பேரரசை கொரியா அங்கீகரிக்க மறுத்ததை காரணமாக வைத்து அந்த நாட்டை கைப்பற்ற வேண்டும் என்ற கோரிக்கை வலுக்கத் தொடங்கியது. முதலில் கொரியாவை குய்ங் பேரரசின் பிடியிலிருந்து விடுவித்து, அதன்பின்னர் அந்த நாட்டை தனது பிடியில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று மெய்ஜி பேரரசு நினைத்தது. கொரியாவை கைப்பற்றுவதால் ஆயிரக்கணக்கான சாமுராய் வீரர்களுக்கு அர்த்தமுள்ள வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும். ஆசிய நாடுகளைக் கைப்பற்ற இது வழியை ஏற்படுத்தும் என்று கருதப்பட்டது. ஜப்பானிய தொழிற்சாலைகளுக்குத் தேவையான கச்சாப் பொருட்களை ஆசிய நாடுகளில் இருந்த பெறமுடியும் என்றும் நினைத்தார்கள்.

இந்த விவாதங்களின் முக்கிய அம்சங்களில் ஏழு அம்சங்களை குறிப்பிட்டு 1873 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஒரு ஆவணத்தை ஒகுபோ டோஷிமிச்சி என்பவர் தயாரித்தார். இவரும் நவீன ஜப்பானை உருவாக்கியவர்களில் முக்கியமான சாமுராய்களில் ஒருவர். அந்த ஆவணப்படி கொரியா மீது நடவடிக்கை எடுப்பது முதிர்ச்சியில்லா யோசனை. ஜப்பான் நவீனமயமாகும் நிலையில் இந்த நடவடிக்கைக்கு ஏராளமான செலவாகும் குறிப்பிடப்பட்டது. யுத்த எதிர்ப்புக் குழுவினர் இந்த ஆவணத்தை ஏற்றனர். குறிப்பாக நவீனமயம் குறித்து ஆய்வு செய்ய அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று திரும்பிய இவாக்குரா டோமோமொய் தலைமையிலான நிபுணர்கள் குழு யுத்தத்தை ஏற்கவில்லை. இதையடுத்து, கொரியா மீதான நடவடிக்கை கைவிடப்பட்டது.


ஆனால், கொரியாவில் ஆட்சி அதிகாரம் சீர்குலையத் தொடங்கியது. கொரியா மன்னர் ஜியோங்ஜோ இறந்தவுடன், அவருடைய 10 வயது மகன் சுஞ்சோ மன்னராக பொறுப்பேற்றார். நிர்வாகப் பொறுப்புகளை அவருடைய மாமனார் கிம் ஜோ சுன் கவனித்துக் கொண்டார். மன்னரின் குழந்தைதனத்தை பாவித்து மாமனார் தன்னிஸ்டப்படி மோசமாக நிர்வாகம் செய்தார்.

இந்தச் சமயத்தில்தான் அரசாங்கத்தின் எல்லாத் துறைகளிலும் ஊழல் தலைவிரித்தாடியது. குறிப்பாக நில வரி, இராணுவ சேவை உள்ளிட்டவற்றிலும் ஊழல் அதிகரித்தது. விவசாயிகள் பெருந் துன்பத்தில் சிக்கினார்கள். மக்களைப் பற்றி கவலைப்படாத அரசு, மக்களை வாட்டி வதைத்தது. அடிமைகளை வைத்திருக்கக்கூடாது என்று 1801 ஆம் ஆண்டு சட்டம் இயற்றப்பட்டாலும், அந்த முறை சட்டப்பூர்வமாக 1894 ஆம் ஆண்டுவரை நீடித்தது.

கொரியாவில் ஆதிக்க வகுப்பினராக இருந்த யாங்பான் மக்கள் மத்தியில் கத்தோலிக்க மற்றும் புராட்டஸ்டண்ட் கிறிஸ்தவ மதத்தினர் ஊடுருவி இருந்தனர். உட்பகையும், துன்புறுத்தல்களும் கிறிஸ்தவ பாதிரியார்களையும் பின்பற்றுகிறவர்களையும் ஒரு பிரிவினர் கொன்று குவித்தனர். அவர்கள் கொரிய தியாகிகள் என்று அழைக்கப்பட்டனர். இதையடுத்து உயர்வகுப்பினர் யாரும் கிறிஸ்தவ மதத்தை பின்பற்றுவதில் தயக்கம் காட்டினர். ஆனால், சமத்துவத்தை விரும்பிய கொரிய உழைப்பாளிகளும், விவசாயிகளும் கிறிஸ்தவ மதத்தில் சேரத்தொடங்கினர்.

இந்தச் சமயத்தில் சோ ஜெ யு என்பவர் புதிய இயக்கத்தை தொடங்கினார். கிறிஸ்தவ ஆதிக்கத்தை தடுத்து நிறுத்தவும், சீனாவைப் போல கொரியாவை பிரிட்டனும் பிரான்சும் ஆக்கிரமிக்காமல் தடுக்கவும், கொரியாவில் ஜனநாயகத்தையும், மனித உரிமையையும் அமல்படுத்த வேண்டும். தேசியவாதம், சமூக சீர்திருத்தம் வேண்டும் என்று பிரச்சாரம் செய்தார். இந்த பிரச்சாரம், வழக்கமாக கொரியா விவசாயிகள் மத்தியில் இருந்த கொரில்லா போராளிகளை உசுப்பிவிட்டது. புரட்சிகர அமைப்புகள் உருவாகி மக்கள் கிளர்ந்தெழுந்தனர். இதையடுத்து, சோ ஜெ யு மீது தேசத்துரோக குற்றம் சுமத்தப்பட்டு 1864 ஆம் ஆண்டு தூக்கிலிடப்பட்டார். அவருடைய ஆதரவாளர்கள் மலைகளில் சென்று ஒளிந்துகொண்டனர்.

இந்நிலையில்தான் கோஜோங் என்ற 12 வயது சிறுவன் கொரியாவின் மன்னரானார். இவருடைய ஆட்சிக் காலத்திலும் உறவினர்களின் ஊழல் குறையவில்லை. அரசு நிர்வாகத்துக்கு இணையாக சோவோன் என்ற தனியார் நிறுவனங்கள் போட்டி நிர்வாகத்தை நடத்தின. மேற்கத்திய சிந்தனைகளும், தொழில்நுட்பங்களும் கொரியாவில் நுழைவதைத் தடுக்க கொரியா தன்னை தனிமைப்படுத்த முடிவெடுத்தது. இதையடுத்து, 1873 ஆம் ஆண்டு மன்னர் கோஜோங்கிற்கு கட்டாய ஓய்வு கொடுத்துவிட்டு, ராணி மியோங்சியோங் பொறுப்புக்கு வந்தார்.





அவர் பொறுப்பேற்ற மூன்று ஆண்டுகளில் 1876 ஆம் ஆண்டு ஜப்பானுக்கும் கொரியாவுக்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. ஜப்பானின் சந்தையாக கொரியா மாற இந்த ஒப்பந்தம் வழிசெய்தது. இந்த ஒப்பந்தத்தின் விளைவாக, ஜப்பான் சீனாவின் பிடியிலிருந்த நாடு என்ற நிலை மாறி, கொரிய துறைமுகங்கள் அனைத்தும் ஜப்பானிய வர்த்தகத்துக்கு திறந்து விடப்பட்டன.

(இன்னும் வரும்)

## 60 ஆயிரம் ஆண்டு பழமையான சென்டினல் தீவு

# அம்பு எய்து கொல்லும் பழங்குடிகள் பயங்கரமானவர்களா?



அந்தமான் நிக்கோபர் தீவுகளில் உள்ள மர்மமான வடக்கு சென்டினல் தீவுக்கு பூர்வீக பழங்குடிகளான சென்டினல் மக்களைச் சந்திக்கச் சென்ற 26 வயது அமெரிக்க இளைஞர் ஜான் ஆலன் சாவ் சென்டினல் பழங்குடி மக்களால் கொல்லப்பட்ட சம்பவம்தான் கடந்த சில நாட்களாகத் தீவிரமாக பேசப்பட்டு வருகிறது.

உலகின் சத்தம் அறியாத, நாகரீகத்தின் தடம் அறியாமல் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வெளி மனிதர்களுடன் தொடர்பு இல்லாமல் வாழ்ந்து வருபவர்கள்தான் சென்டினல் பழங்குடியின மக்கள்.

அந்தமான் தீவில் உள்ள இந்த சென்டினல் தீவு இந்திய அரசின் ஆவணங்களின்படி, ஏறக்குறைய 2 ஆயிரம் ஆண்டுகள் பழையானது. அங்குள்ள சென்டினல் பழங்குடியின மக்களின் பூர்வீகம் ஏறக்குறைய 30 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தையது என்று இந்திய மத்திய அரசு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்னும் ஆழமாகப் பார்த்தால், ஆபிரிக்காவில் உருவான முதல் மனித இனம், ஆசியாவுக்குள் வரும்போது, இந்த சென்டினல் மக்கள் வந்துள்ளார் என்று வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் மிகச்சிறிய தீவான அந்தமானில், கிழக்கு தீவு, வடக்கு அந்தமான் தீவு, ஸ்மித் தீவு, கர்பியூ தீவு, ஸ்டீவர்ட் தீவு, லாண்ட்பால் தீவு, ஆவ்ஸ் தீவு, மிடில் அந்தமான், லோங் தீவு, ஸ்ட்ரய்ட் தீவு, நோர்த் பாசேஜ், பாராட்டாங், சவுத் அந்தமான், ஹேவ்லாக், நிலத்தீவு, பிளாட் பே, லிட்டில் அந்தமான், சவுரா, டில்லாங் சாங் தீவு, தெரஸா, கட்சல், நான்கவுரி, கமோர்டா, புளோமில், கிரேட் நிகோபர், லிட்டில் நிகோபர், நார்கான்டம் தீவு, இன்டர்வியூ தீவு ஆகிய மிகச்சிறிய தீவுகள் உள்ளன.

அதிலும் அந்தமானில் உள்ள வடக்கு சென்டினல் தீவு இந்திய அரசால் பாதுகாக்கப்பட்ட, மனிதர்கள் செல்ல தடை செய்யப்பட்ட தீவாகும். ஒட்டுமொத்த நார்த் சென்டினல் தீவு 59.67 சதுர கி.மீ. கடற்கரை 5 கி.மீ தொலைவு கொண்டது. இந்த தீவில் பூர்வீக பழங்குடிகளான சென்டினல் மக்கள் வசிப்பதால், அந்தமான் நிகோபர் தீவு பாதுகாப்புச் சட்டம் 1956 ன்கீழ் பாதுகாக்கப்பட்ட பகுதியாகும். தடையை மீறிச் செல்வோருக்கு தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

அந்தமானில் உள்ள வடக்கு சென்டினல் தீவில் வசிக்கும் நெக்ரிட்டோ வகை பழங்குடி மக்களே வடக்கு சென்டினல் மக்கள். இவர்கள் இதுவரை உலகில் மற்ற மனிதர்களோடு தொடர்பு இல்லாமல், வாழ்பவர்கள். கற்காலத்தில் மனிதர்கள் வாழ்ந்த போது, கற்களை- ஆயுதமாகவும், இலை, மரப்பட்டைகளையும் ஆடைகளாகவும் அணிந்தார்கள். அந்த வாழ்க்கை முறையை இன்னும் கடைப் பிடித்து வருபவர்கள். அந்தமானில் உள்ள ஜார்வா எனும் பழங்கு மக்களின் அடிப்படை உடற்கூறுகள் இந்த வடக்கு சென்டினல் மக்களுக்கு உண்டு.

அந்தமானில் உள்ள இந்திய மானுடவியல் துறையின் கணக்கின்படி ஏறக்குறைய இந்த சென்டினல் மக்களின் பூர்வீகம் குறைந்தபட்சம் 30 ஆயிரம் ஆண்டுகளாகும். இந்தத் தீவில் ஏறக்குறைய 2 ஆயிரம் ஆண்டுகளாக வசித்து வருகிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தமான் தீவுகளில் அந்தமான் பழங்குடி மக்கள், கிரேட் அந்தமானிஸ், ஓங்காஸ், ஜார்வாக்கள், சென்டினல்கள் எனப் பலவகை பழங்குடி மக்கள் வசிக்கிறார்கள். அதில் சென்டினல்கள் பழங்குடி மக்கள் உலகின் பிற மனிதர்களின் தொடர்பின்றியும், நாகரீகத்தை அறியாமலும் வாழ்ந்து வருகிறார்கள்.

இதுவரை கடந்த 1991ம் ஆண்டு இந்திய மானுடவியல் துறை சார்பில் சென்றகுழுவை மட்டும் சென்டினல்கள் தாக்காமல் சந்தித்துள்ளனர். அவர்கள் அளித்த தேங்காய்களை மட்டும் பெற்றுக்கொண்டனர்.

கடந்த 1901 முதல் 1921ம் ஆண்டுவரை ஆங்கிலேயர்கள் கணக்கின்படி,117 பேர் வரை வாழ்ந்துள்ளனர். அதன்பின் 1931ம்ஆண்டு, அந்த எண்ணிக்கை 50 ஆகவும்,பின் 1991ம் ஆண்டு 23 பேராகவும் சென்டினல் மக்கள் எண்ணிக்கை குறைந்தது. கடைசியாக 2001ம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கில் 39 பேர் வாழ்ந்து வருகிறார்கள் எனக் கூறப்படுகிறது. ஆனால், மானுடவியலாளர்கள் அங்கு 400 பேர் வ்ரை வசிக்கக்கூடும் எனத் தெரிவிக்கிறார்கள்.

கடந்த 2006ம் ஆண்டு அந்தமானைச் சேர்ந்த மீனவர்கள் சுந்தர் ராஜ்(48), பண்டிட் திவாரி(52) ஆகியோர் தங்கள் படகை சென்டினல் தீவில் நிறுத்தி சிறிதுநேரம் ஓய்வு எடுத்துள்ளனர். அப்போது திடீரென சென்டினல் பழங்குடி மக்கள் அந்த இரு மீனவர்கள் மீதும் கூர்மையான அம்புகளை எய்தி தாக்குதல் நடத்தியதில் இருவரும் கொல்லப்பட்டனர்.

அதன்பின் இரு மீனவர்களும் கொல்லப்பட்ட செய்தி அறிந்த இந்திய கடற்படையினர் இரு மீனவர்களையும் உடல்களையும் மீட்கச் சென்றபோது அவர்கள் மீதும் சென்டினல் பழங்குடிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். ஹெலிகொப்டர் மூலம் இரு மீனவர்கள் உடலை மீட்க முயன்றபோது, ஹெலிகொப்டர் மீது அம்பு வீசி தாக்குதல் நடத்தினார்கள். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படமே கடைசியாக சென்டினல்களை எடுத்த படமாகும்.



சென்டினல் மக்கள் இன்னும் வில் அம்புகளையும், கற்களால் ஆன ஆயுதங்களையும் தங்களின் பாதுகாப்புக்காகப் பயன்படுத்தி வருகின்றனர். இவர்களின் தாக்குதல் துல்லியம் 350 அடியாகும். அதாவது 350 அடியில் உள்ள பொருட்களையும் மிகத் துல்லியமாக தாக்கும் திறமை இவர்களிடம் இருக்கிறது. அதனால் தான் சென்டினல் பழங்குடி மக்களை நெருங்க மீனவர்கள், கடலோர படையினர் அஞ்சுகிறார்கள். சென்டினல் தீவில் இருக்கும் காட்டுப்பன்றி, தேன், பழங்கள், இலைகள், மீன், தேங்காய் உள்ளிட்ட உணவுப்பொருட்களை உண்டு வாழ்கின்றனர்.

இந்த பழங்குடியினர் குறித்து இந்தியர் ஒருவரை தவிர வேறு யாருக்கும்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

அதிக விஷயங்கள் தெரிந்திருக்காது. அவர் மானுடவியலாளர் டி.என். பண்டிட். இந்தியாவின் பழங்குடி விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் பிராந்திய தலைவராக இருந்த பண்டிட் தனித்துவிடப்பட்டுள்ள இந்த தீவில் உள்ள மக்களை சந்திக்க பல தசாப்தங்களை செலவிட்டுள்ளார்.

ஆனால் 84 வயதாகும் பண்டிட், தனது அனுபவத்தில் இருந்து அந்த பழங்குடி குழுவானது அமைதியை விரும்பக்கூடியது என்றும், அவர்கள் பயங்கரமானவர்கள் போல் சித்தரிப்பது நியாயமற்றது என்றும் தெரிவித்துள்ளார்.

பண்டிட் முதல் முறையாக 1967ல் ஆய்வுக் குழுவின் பயணம் ஒன்றின் பகுதியாக தனித்துவிடப்பட்டுள்ள பழங்குடிகள் வசிக்கும் வடக்கு சென்டினல் தீவுக்கு சென்றுள்ளார்.

முதலில் அத்தீவுக்கு வருகை தருபவர்களின் பார்வையில் இருந்து மறைவதற்காக காடுகளில் அந்த சென்டினல் பழங்குடியினர் ஒளிந்துகொண்டனர். அதன் பிறகான பயணங்களில் அம்புகளால் தாக்கத் துவங்கினர்.


மானுடவியலாளர்கள் எப்போதும் சென்டினல் தீவுக்கு பயணிக்க தங்களுடன் சில பொருள்களை எடுத்துச் செல்வார்கள். ஏனெனில் அப்பொருள்கள் மூலம் பழங்குடிகளுடன் ஒரு தொடர்பை உருவாக்க முயற்சித்தனர்.

"நாங்கள் பானைகள், உலோக தட்டுகள், பெரிய அளவிலான எண்ணிக்கையில் தேங்காய்கள், சுத்தியல் மற்றும் பெரிய கத்தி முதலான இரும்பு பொருள்கள் ஆகியவற்றை பரிசாக எடுத்துச் சென்றிருந்தோம். மேலும் சென்டினல் பழங்குடியினர் பேசுவதை புரிந்துகொள்வதற்கும் அவர்களின் நடத்தையை அறிந்துகொள்ளவும் மற்ற மூன்று பழங்குடியை அழைத்துச் சென்றோம்.

'ஆனால் சென்டினல் பழங்குடியினர் கோபமான மற்றும் கடுமையான முகத்துடன் நின்று, வில் மற்றும் அம்புகளோடு தங்களது நிலத்தை பாதுகாக்க எங்களை எதிர்கொண்டனர்.

நாங்கள் சிறிய வெற்றியை பெற்றவுடன், மர்மமான அச்சமூகத்தினருடன் தொடர்பை பேணுவதற்காக பரிசுகளை அங்கே விட்டுவிட்டு வந்துவிடுவோம். ஒருமுறை பன்றி ஒன்றை பரிசாக வழங்கியதை கவனித்த பிறகு அவர்கள் அதனை கொன்று அவர்களது நிலத்தில் புதைத்தனர். இது நிச்சயம் அப்பரிசுகளை அக்குழு வரவேற்கவில்லை என்பதை உணர்த்தியது" என்கிறார் பண்டிட்.

பல முறை அவர்களை தொடர்பு கொள்வதற்கு மேற்கொண்ட பயணங்கள் தோல்வியில் முடிந்த நிலையில், 1991ல் முதன்முறையாக கடலில் அப்பழங்குடியினர் அமைதியான ஒரு அணுகுமுறையை கடைபிடித்தனர்.



**முதலில் அத்தீவுக்கு வருகை தருபவர்களின் பார்வையில் இருந்து மறைவதற்காக காடுகளில் அந்த சென்டினல் பழங்குடியினர் ஒளிந்துகொண்டனர். அதன் பிறகான பயணங்களில் அம்புகளால் தாக்கத் துவங்கினர்.**

"நாங்கள் கப்பலில் இருந்து குதித்தோம் மேலும் கழுத்துவரை ஆழமுள்ள நீரில் நின்றுகொண்டிருந்தோம். நாங்கள் தேங்காய் மட்டுமின்றி வேறு சில பரிசுகளையும் வழங்கினோம். ஆனால் அவர்களது நிலத்துக்குள் நுழைய அனுமதியளிக்கவில்லை. நான் தாக்கப்படக்கூடும் என்பது குறித்து பெரிதாக கவலைப்படவில்லை. ஆனால் அவர்களுடன் நெருங்கி இருக்கும்போது கவனமாக இருந்தேன்" என பண்டிட் தெரிவிக்கிறார்.

தனது குழுவின் மற்ற உறுப்பினர்கள் சைகை மூலமாக அந்த சென்டினலீஸ் மக்களை தொடர்புகொள்ள முயற்சித்ததாகவும் ஆனால் அவர்கள் ஏற்கனவே பரிசுகளோடு இருந்ததால் அவர்களின் முயற்சியில் வெற்றி கிடைக்கவில்லை.

"அவர்கள் தங்களுக்குள்ளாகவே பேசிக்கொண்டார்கள். ஆனால் எங்களால் அந்த மொழியை புரிந்துகொள்ள முடியவில்லை. அதே பகுதியில் வாழும் மற்ற பழங்குடி மக்கள் பேசும் மொழியை ஒத்ததாக அவர்கள் மொழி இருந்தது" என பண்டிட் நினைவுகூர்கிறார்.

மற்றொரு முறை பயணிக்கும்போது ஓர் இளம் பழங்குடி அவரை எச்சரித்ததை நினைவுகூர்கிறார்.

"நான் அவர்களுக்கு தேங்காய் வழங்கிக்கொண்டிருந்தபோது என்னுடைய குழுவில் இருந்து சற்றே நான் பிரிந்துவிட்டேன். கடற்கரைக்கு நெருக்கமாக சென்றுவிட்டேன். ஒரு இளம் பழங்குடி வேடிக்கையாக முகத்தை வைத்துக்கொண்டு தனது கத்தியை காண்பித்தார். எனது தலையை கொய்துவிடுவேன் என எச்சரித்தார். உடனடியாக நான் எனது படகை அழைத்து பின்வாங்கிவிட்டேன். அந்த சிறுவனின் உடல்மொழி நான் அங்கே வரவேற்கப்படவில்லை என்பதை தெளிவாக குறிப்புணர்த்தியது" என விவரித்தார் பண்டிட்.

பரிசு வழங்கும் பயணங்களை இந்திய அரசு கைவிட்டபிறகு அயலர்கள் அந்தத் தீவுக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டது.

முழுமையாக அத்தீவு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதன் காரணம் என்னவெனில் அயலர் ஒருவர் அங்கே சென்றால் அதனால் சென்டினலீஸ் மக்களுக்கு உயிருக்கு ஊறு விளைவிக்கும் நோய்கள் வரலாம் ஏனெனில் ஃப்ளூ காய்ச்சல் மற்றும் தட்டம்மை போன்ற வழக்கமான நோய்களை தாங்குவதற்கான எதிர்ப்புச் சக்தி அவர்களுக்கு கிடையாது.

தனது குழுவினர் எப்போதுமே தொற்றுநோய் குறித்து பரிசோதிக்கப்பட்டு ஆரோக்கியமாக இருப்பவர்கள் மட்டுமே வடக்கு சென்டினல் தீவுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டதாக பண்டிட் கூறுகிறார்.

கடந்த வாரம் ஜான் ஆலன் சாவ் தனது பயணத்துக்கு அதிகாரப்பூர்வ அனுமதி எதையும் வாங்கவில்லை என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அனுமதி வாங்குவதற்கு பதிலாக உள்ளூர் மீனவர்களிடம் 25 ஆயிரம் ரூபாய் பணம் பெற்றுக்கொண்டு தன்னை அந்தத் தீவில் விடும்படி கூறியிருக்கிறார். அப்பழங்குடியினரை கிறித்தவர்களாக மாற்ற முடியும் என்ற நம்பிக்கையுடன் அவர் சென்றதாக கூறப்படுகிறது. அவரது உடலை பெற தற்போது முயற்சிகள் நடக்கிறது.

"சென்டினலீஸ் பழங்குடியினர் அமைதியை விரும்புபவர்கள். அவர்கள் மக்களை தேடித் தாக்க விரும்புவதில்லை. அவர்கள் தங்களுக்கு அருகேயுள்ள பகுதிகளுக்கு கூடச் செல்வதில்ல. யாருக்கும் தொந்தரவு கொடுப்பதில்லை. இது மிகவும் அரிதான நிகழ்வு. அப்பழங்குடியினரை தொந்தரவு செய்யக் கூடாது. "தனிமையாக வாழ விரும்பும் அவர்களது விருப்பத்தை நாம் மதிக்க வேண்டும்" என்றார் பண்டிட்.

தீபம்

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்

தொடர்புகளிற்கு

ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563

அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562

செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com



# கணவன் ஓரிடம்... மனைவி வேறிடம்!- இது மாங்கல்ய தோஷமா?

ஜோதிடர் ஜெயம் சரவணன்

கேது திசை பற்றிய பதிவுகளை வாசித்த சில வாசகர்கள் நிறைய சந்தேகங்களைக் கேட்டுள்ளனர்.

அவர்களுக்காக சில பதில்கள்... சில பதிவுகள்.

கேது திசையில் ஆண்களுக்கும் திருமணம் செய்யக்கூடாதா?

ஆம் ஆண்,பெண் யாராக இருந்தாலும் கேது திசை நடக்கும் போது, திருமணம் செய்யக்கூடாது. ஒருவேளை திருமணம் செய்தால் சிறப்பிருக்காது.

மேலும் பரிகாரங்கள் உள்ளனவா?

கேதுவுக்கு உரிய தானியம் கொள்ளு. எனவே, கேது திசை நடந்தாலும், உங்கள் ராசியில் கேது வந்தாலும் தினமும் சிறிதளவு கொள்ளு பேப்பரில் மடித்து இரவில் தலையணைக்கு அடியில் வைத்து உறங்குங்கள். பிறகு காலையில் அதை எடுத்து பூஜை அறையில் வைத்துக்கொள்ளுங்கள்.

இப்படி வாரம் முழுவதும் சேர்த்த கொள்ளு தானியத்தை சனிக்கிழமை அன்று நவக்கிரகத்தில் உள்ள கேது பகவான் காலடியில் சமர்ப்பித்து அதன் மீது விளக்கேற்றி வழிபட கேதுவின் ஆதிக்கம் குறையும்.

மேலும் சனிக்கிழமைகளில் கொள்ளு சுண்டல் செய்து கேது பகவானுக்கு நைவேத்தியம் செய்து தானமாக வழங்குங்கள். கேதுவின் கருணை கிடைக்கும்.

கேது என்பவர் சாதுக்கள், சந்நியாசிகள்,வாழ வழியில்லாதவர்கள், நோயாளிகளைக் குறிப்பவர் என்கிறது ஜோதிட சாஸ்திரம். எனவே இவர்களுக்கு உங்களால் ஆன உதவிகளை செய்துவாருங்கள். நல்ல பலன் கிடைக்கும் என்பது உறுதி.

சரி... இப்போது மாங்கல்ய தோஷம் பற்றி பார்க்கலாம்.

அது என்ன மாங்கல்ய தோஷம்?

அதாவது ஒரு ஜாதகத்தில் 8ம் இடம் தான் மாங்கல்ய ஸ்தானம். குறிப்பாக பெண் ஜாதகத்திற்கு மட்டுமே பெரும்பாலும் பார்க்கப்படும். அப்படியானால் ஆண்களுக்கு பார்க்க மாட்டார்களா? என்று யோசிக்கலாம்.

திருமணப் பொருத்தத்தின் போது " பெண் ஜாதகத்திற்குத்தான் ஆண் ஜாதகம் பொருந்துகிறதா" என்று பார்க்கப்படுமே தவிர, ஆண் ஜாதகத்திற்கு பெண் ஜாதகத்தைப் பார்க்கக்கூடாது.

இரண்டுமே ஒன்றுதானே. என்னங்க இது... என்று யாரேனும் சொல்லலாம். ஆனால் பார்க்கப்படும் முறையானது இப்படித்தான். உதாரணமாக "பெண் பார்க்கப் போகிறோம்" என்று தான் கூறுவார்கள், மாப்பிள்ளை பார்க்கப்போகிறோம் என்று கேள்விபட்டிருக்கிறீர்களா?

மாப்பிள்ளை வீடு பார்க்க போகிறோம் என்றுதான் சொல்லுவோம். சொல்லுவார்கள். அதுபோலத்தான் " பெண்ணுக்குத்தான் ஆணே தவிர, ஆணுக்குப் பெண் அல்ல"

சரி விஷயத்துக்கு வருவோம்.

இப்போது புரிகிறதா மாங்கல்ய தோஷம் பெண்ணுக்குதான் முக்கியத் துவம் தரப்படுகிறது என்று.

என்ன செய்யும் மாங்கல்யதோஷம்.

திருமணத்திற்குப்பின் கணவனுக்கு "மாரக கண்டம்" ஏற்படுத்தும் என்பதே, பெரும்பாலோர் சொல்லுவது!

இது உண்மையா? எட்டாம் இடம், அதன் அதிபதி கிரகத்தின் நிலை, நவாம்சநிலை இவையெல்லாம் கவனிக்கப்பட வேண்டும்.

மாரகம் மட்டுமே தான் தருமா? இல்லை, கணவன் மனைவி சேர்ந்து வாழ்வதுதான் சிறப்பு. அதைவிடுத்து கணவன் ஒரு பக்கம், மனைவி ஒரு பக்கம் என வாழ்ந்தால் அதில் என்ன மகிழ்ச்சி இருக்கிறது?

இதுவும் மாங்கல்யதோஷம்தான்.

பெண் ஜாதகத்தில் ராசிக் கட்டத்தில் எந்த இடத்திலும் சூரியனும் செவ்வாயும் சேர்ந்திருந்தாலும் அதுவும் மாங்கல்யதோஷம்தான்.

நிச்சயமாக அவருடைய கணவர் சம்பாத்தியத்திற்காக வெளியூர் அல்லது வெளிநாட்டில் தான் இருப்பார். சில மாதங்களுக்கு முன், வங்கி ஒன்றில் பணிபுரியும் பெண் ஒருவர் என்னிடம் ஜாதகம் பார்க்கவந்தார், அவர் சொன்னதை அப்படியே சொல்கிறேன்.

"எனக்கு திருமணமாகி 7 வருடங்கள் ஆகின்றன. எங்கள் திருமணத்தின்போது என் கணவர் கொழும்பிலும், நான் வவுனியாவிலும் பணியில் இருந்தோம். என் கணவர் வாரம் அல்லது 15 நாட்களுக்கு ஒருமுறை வீட்டிற்கு வருவார். பிறகு அவர் போராடி கிளிநொச்சிக்கு மாறுதலாகி வந்தார்,

அதன்பின் நான் கஷ்டப்பட்டு கிளிநொச்சி மாறுதல் வாங்குவதற்குள், அவருக்கு இடமாற்றம் வந்துள்ளது. நானும் என் கணவரும் எப்போது தான் ஒன்றாகச் சேர்ந்து வாழ்வோம்? என்று கேட்டார்.

நான் இவர் ஜாதகத்தைப் பார்த்தவுடன் தெரிந்த விஷயம் மண வாழ்க்கை சிறப்பில்லை என்பதுதான். ஆனால் தோஷத்தையும் சில தியாகங்கள் மூலமாக சரிசெய்ய முடியும். அவரிடம் நீங்கள் வேலையை ஏன் விடக்கூடாது? வேலையை விட்டுவிட்டால் உங்கள் கணவரோடு சேர்ந்து வாழமுடியுமே... எனக்கேட்டேன்.

அவர் தன் வேலையை விட முடியாது என சொல்லிவிட்டார். " அப்படியானால் இப்படித்தான் உங்கள் வாழ்க்கை இருக்கும்" என்று உறுதியாய்ச் சொன்னேன். தோஷ பரிகாரம் என்பது ஆலய வழிபாட்டால்தான் சரியாகும் என்பதில்லை, இப்படி சில தியாகங்களாலும் சரியாகும்.

அதாவது ஜாதகத்தில் ஒவ்வொரு கட்டமும் "பொருள்பற்று, உயிர்பற்று" என இரண்டு விஷயங்களை உள்ளடக்கியதாகும்.

பொருள்பற்று என்பது பொருளாதாரம் சார்ந்தது, உயிர்பற்று என்பது வாழ்க்கை சார்ந்தது, நிச்சயமாக, உறுதியாக இந்த இரண்டில் ஏதாவது ஒன்றைத்தான் அனுபவிக்க கொடுத்து வைக்கப்படும். மற்றதை விலக்கியே வைக்கும் என்கிறது ஜோதிட சாஸ்திரம். நோயற்று இருந்தால், பணம் தராது. பணம் தந்தால் எதையும் அனுபவிக்க உடல் ஒத்துழைக்காது. இது யதார்த்தமான உண்மை.

என் நண்பனின் திருமணம். அப்போது தாலி கட்டுவதற்கு முன்பு மாங்கல்யத்தை அனைவரிடமும் ஆசிர்வாதம் வாங்க அனுப்பினார்கள். அதன்படி மண்டபத்தில் எல்லோரிடமும் ஆசி பெறப்பட்டது. பிறகு மணமேடைக்கு வந்து தாம்பூலத் தட்டைப் பார்த்தபோது, ஐயர் உட்பட சுற்றி நின்றவர்கள் அதிர்ந்து போனார்கள். ஆமாம்... திருமாங்கல்யத்தைக் காணவில்லை!

ஆசிர்வாதம் செய்த எவரோ ஒருவர் மாங்கல்யத்தைக் களவாடிவிட்டார்.

வேறு வழியே இல்லை. அவசர அவசரமாக விரலிமஞ்சள் வைத்து மாங்கல்யம் தயார் செய்து தாலி கட்டினார் நண்பர், ஒருமாதம் கழித்து என்னைப் பார்த்தவர் " ஏன் இப்படி நடந்தது? இது ஏதாவது அபசகுனமா?" என்றும் கேட்டார்.

இங்கேஒருவிஷயம்...நண்பருடையது காதல் திருமணம். எனவே, ஜாதகம் ஏதும் பார்க்கப்படவில்லை.

நான் அவர் ஜாதகத்தையும் அவர் மனைவியின் ஜாதகத்தையும் பார்த்துவிட்டு ஒரே வரியில் சொன்னேன்... "ஒன்றும் பயப்பட வேண்டாம். இது "புனர்பூ தோஷம்" மட்டுமே. மாங்கல்ய தோஷம் ஏதும் இல்லை என்று சொல்லி, தைரியம் தந்து அனுப்பினேன்.

அவருக்கு திருமணம் முடிந்து தற்போது 27 வருடங்கள் ஆகிவிட்டன. இன்றளவும் நன்றாகத்தான் இருக்கிறார்கள். அது என்ன புனர்பூ தோஷம் என்று கேட்கிறீர்களா?

ஜாதகத்தில் "சனிபகவானும் சந்திர பகவானும் சேர்ந்திருந்தாலும், ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டாலும், அவர் வீட்டில் இவரும், இவர் வீட்டில் அவர் இருந்தாலும் அதாவது பரிவர்த்தனை அடைந்திருந்தாலும், இந்த புனர்பூ தோஷம். வேலை செய்யும்.

அப்படி என்னென்ன செய்யும்?

இந்த தோஷம் திருமணத்தின்போது மட்டுமே வேலை செய்யும், அதாவது திருமணத்தின் போது சண்டை சச்சரவுகள் , மண்டபம் மாறுதல் என பல குழப்பங்களைத் தந்து திருமணமே நின்று போகும் அளவுக்கு பாதிப்பைத் தந்து மன உளைச்சலைத் தரும்.

உண்மையில் என் நண்பரின் மனைவிக்கு மாங்கல்ய தோஷம் உள்ளது. ஆனாலும் அது தன் தோஷ வீரியத்தைக் காட்டியதால்தான் மாங்கல்யம் களவு போனது.

அவருக்கு 7 ஆம் இடத்தில் சூரியன், செவ்வாய் அமர்ந்து தோஷத்தைத் தந்தது. களவு போனதால் தோஷம் நீங்கியது. களவு போகாவிட்டால் என்ன நடந்திருக்கும்?

இங்கே சில விளக்கங்கள் சொல்லியாகவேண்டும்.

சூரியன், செவ்வாய் சேர்க்கை என்பது 12 ராசிகளில் அமர்ந்திருக்கும் இடத்திற்கு தகுந்தாற்போல் வேலை செய்யும்.

நான் பெரிய விளக்கம் தந்து உங்களை குழப்பப்போவதில்லை,

1) இப்படி மாங்கல்யம் களவு போவது
2) மாங்கல்யத்தில் பின்னம் ஏற்பட்டு அதைசரிசெய்துமீண்டும்அணிவது( எப்படியும் ஒருமுறையாவது கழட்டி மாட்டவேண்டி வரும்)
3) வேதனையோடு சொல்கிறேன், குறைந்தபட்சம் அடகு வைக்கப்படும் சூழல் உண்டாகும்.
4) திருடர்களிடம் பறிகொடுப்பது
5) ஏதோ ஒரு சூழ்நிலையில் வேண்டுதலுக்காக ஆலயத்தில் காணிக்கையாகக் கொடுப்பது.

இப்படி பல வகையிலும் தோஷம் தன் வீரியத்தைக்காட்டும்.

ஆனால் ஒருபோதும் யாருடைய விதியையும் முடித்துவிடாது.

விதி முடியாமல் யாரும் இறைவனை அடைய முடியாது. எனவே மாங்கல்யதோஷம் என பெரிய பரிகாரங்கள் செய்ய வேண்டியதில்லை என்பதே என் கருத்து.

அப்படியானால் என்ன மாதிரியான பரிகாரங்கள் செய்யலாம்?

திருமணம் முடிந்து 3 வது மாதத்தில் தாலி கோர்த்தல் என்ற வைபவம் நடக்கும் அல்லவா! அப்போது அந்த திருமாங்கல்யத்தை ஏதாவது அம்மன் ஆலயத்தில் செலுத்திவிட்டு, புதிதாக மாங்கல்யம் செய்து அணிந்து கொள்ளலாம்.


ஏழைப்பெண்ணுக்கு அவர்களின் திருமணத்திற்கு உங்கள் செலவில் மாங்கல்யம் செய்து தாருங்கள், மிகப்பெரிய புண்ணியம் உண்டாகும்,

தர்மம் செய்வது (யாருக்கும் தெரியாமல்)எப்படிப்பட்ட தோஷத்தையும் இல்லாமல் செய்துவிடும். இனி அடுத்த பதிவுகளில் இன்னும் பல விஷயங்களைப் பார்ப்போம்.

இந்த புனர்பூ தோஷம் வேறு ஏதாவது பாதிப்பைத் தருமா? அதையும் பார்க்கலாம். **தெளிவோம்**

# மண் பினாமிகளே

## எங்கள் வளத்தை சுரண்டாதீர்கள்.



திலக்ஸ் ரெட்ணம்

மண்ணானது தற்காலத்தில் பல தேவைக்கும் பயன்படுத்தப்பட்டு விருகின்றது. அதனால் மண்ணின் விலை பல ஆயிரமாக மாற்றடைந்து கொண்டிருக்கின்றது. இலங்கையில் இருந்து மண்ணானது மாலைதீவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது கண்கூடு.

மண்வளம் பெரிதும் சூறையாடப் பட்டு கொண்டிருப்பது மட்டக்களப் பில் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றது.இதனை மக்கள் சிலஇடங்களில் ஆர்ப்பாட்டங்களின் மூலம் நிறுத்தி யிருந்தாலும் பல இடங்களில் நடை பெற்ற வண்ணமே உள்ளது. மண் தொடர்பான பிரச்சினைகளை செய்தியாக்க சென்ற ஊடகவிய லாளர்கள் தாக்கப்பட்ட சம்பவமும் பதிவாகியிருக்கின்றது. பட்டிப்பளை பிரதேசத்தில் மக்கள் ஆர்ப்பாட்டம் மூலம் மண் ஏற்றலை நிறுத்தியதும் குறிப்பிடத்தக்கது. நிறுத்தியதும் இந்த வாரம் நாங்கள் போரதீவுப் பற்றினுடைய மண் வளம் சுரண்டலை பார்ப்போம்.

மண் வளத்தினை பெறுவதற்கான அனுமதியினை கொடுப்பது யார்? சுற்றாடல் வள திணைக்களம், நீர்பாசன திணைக்களம் தங்களுக்கு சொந்தமான வீதியினை பயன்படுத்தலாம் என்றும் ஆற்றில் மண் இருப்பதை உறுதி செய்தும் தங்களது கடப்பாடு என்கின் றனர். மற்றும் விவசாய திணைக்களம்; போன்றவை உறுதி செய்த பின்னர் பிரதேச செயலாளரினால் சிபார்சு செய்யப்பட்ட பின்னர்புவிச்சரிதவியல் திணைக்களத்தினால் அனுமதிக்கப் படுகின்றது. இந்த மண் எங்கே செல் கின்றது? என்று பார்த்தால் அப்பிரதேச மக்கள் பயன்படுத்த முடியாத அளவுக்கு வெகுதூரம் கொண்டு செல்லப்படுகின்றது.

> **பிரதேசத்தில் மண் வளத்தை சூறையாடும் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்கின்ற தீர்மானம் பெறப்பட்டது. அதற்கான தீர்மானம் இதுவரைக்கும் எட்டப்பட்டதாக தென்படவில்லை**

போரதீவுப்பற்று பிரதேச செயல கத்திற்குட்பட்ட பிரதேசத்தில் கிட்ட தட்ட பதினேழு உரிமப்பத்திரம் மண் ஏற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆற்றுமண் ஏற்றுவதற்கு 12 உரிமப் பத்திரமும், மேன் மண் அகழ்வதற்கு ஐந்து உரிமப்பத்திரங்களும் வழங்கப் பட்டுள்ளது. இன்னுமொரு வியப்பான விடயம் என்னவென்றால், ஒரு உரிமப்பத்திரம் உடையவர் ஐநூற்று 50 கியூப் மேன் மண் ஏற்றலாம். சராசரியாக ஒரு மாதத்திற்கு போரதீவுப்பற்று பிரதேசத்தில் இருந்து முந்நூறு கியூப் மண் வெளியிடங் களுக்கு அனுப்பப்படுகின்றது.

அது போன்று ஆற்றுமண் ஒரு உரிமப்பத்திரத்திற்கு உரியவர் மாதமொன்றிற்கு 120 கியூப் மண் ஏற்றலாம். 12 உரிமப்பத்திரமும் ஒரு மாதத்திற்கு ஆயிரத்து 440 கியூப் மண் வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றது. இது சட்ட ரீதியாக மாத்திரம் தான். பல்வேறு பட்ட வழிகளில் கையூட்டு வழங்கி இன்னும் பல கியூப்கள் செல் கின்றமை அது கடவுளுக்குத்தான் வெளிச்சம். இது மட்டுமல்ல தற்போதைய ஜனாதிபதி வாகன நெரிசலை கருத்திற்கொண்டு இரவு நேரங்களிலும் மண் கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரமும் வழங்கப்பட்டுள்ளது. இதில் குறித்த அளவு மண்ணை கொண்டுசெல்வதற்கு பொலிஸார் கண்ணும்கருத்துமாக தங்கள் பணிகளை செய்தால் மாத்திரமே கட்டுப்படுத்தலாம்.

கடந்த உள்ளூராட்சி சபை தேர்தல் முடிவடைந்ததும் சபைகள் கூட்டப்பட்டது. போரதீவுப்பற்று பிரதேச சபையும் 18.04.2018ம் திகதி கன்னியமர்வு இடம்பெற்றது. இதில் "பிரதேசத்தில் மண் வளத்தை சூறையாடும் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்கின்ற தீர்மானம் பெறப்பட்டது." அதற்கான தீர்மானம் இதுவரைக்கும் எட்டப்பட்டதாக தென்படவில்லை.

மண் வளம் சுரண்டப்படுகின்ற மையால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தான் என்ன? இந்த மண் சுரண்டலால் நாளைக்கல்ல பிரச்சினை இன்னும் இருபதோ? முப்பது வருடங்களுக்கு பிறகு எதிர்கால சந்ததி எதிர்நோக்கப்போகும் பிரச்சினைகள் தான் என்ன? மேட்டு நில பகுதிகளில் இருந்து மண்ணை எடுக்கின்ற போது அவ்விடம் பலஅடி பள்ளமாக்கப்படுகின்றது. இதனால் அவ்விடம் மழைகாலங்களில் நீரேந்து பிரதேசங்களாக மாறி அப்பிரதேசத் தில் வெள்ளம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கு ஏதுவாக அமைகின்றது. இது மட்டுமன்றி பெருகிவரும் சனத் தொகைக்கு ஏற்ப அவ்விடங்களிலும் குடியேற்றம் இடம்பெற வாய்ப்புக்கள் அதிகம் உள்ளது.

மீண்டும் அவ்விடத்தினை நிரப்பு வதற்கு அப்பிரதேச மக்கள் மண்ணை மாலைதீவில் இருந்து தான் நிரப்ப வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். மற்றும் அப்பிரதேசத் திற்குரிய கனிய சேதன வளம் இல்லாமல் போகின்றமையும் குறிப் பிடத்தக்கது. இவை அனைத்தும் மக்கள் பிரச்சினையாகும். அரச அதிகாரிகளிடம் மக்கள் தெரிவிக்கும் போது அதனை அசண்டையீனமாக விட்டால் மக்கள் வீதியில் இறங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படும். அவ்வாறு மக்கள் வீதிக்கு இறங்கினால் தான் இவ்வாறான பிரச்சினைகளுக்கு முற்றுபுள்ளி வைக்கலாம் என்றால் அதற்கும் அவர்கள் தயார் நிலையில் உள்ளார்கள்.

இது எமது காதோரம் வந்த செய்தி. மக்களின் ஆதங்கம் என்ன வென்றால் வயற்காணிகளை திருத்தி அமைக்க வேண்டுமாக இருந்தால் அங்கிருந்து பெறப்படும் மண்மை அப்பிரதேசங்களிலே களஞ்சியப் படுத்தி அப்பிரதேச மக்களுக்கு பயன் படுமாறு செய்யப்படல் வேண்டும். எமது தேவைக்கு மண் தேடினால் மருந்துக்கும் இல்லை என்கின்ற நிலை தோன்ற இன்னும் எவ்வளவு காலம் தேவைப்படும். இன்றைய இளம் சமுதாயம் தேவைகளுக்கு மண் தேவையென்றால் ஒன்லைன்னில் ஒடர் செய்து வெளிநாடுகளில் இருந்து பெறுகின்ற நிலை வெகுதூரம் இல்லை.

அங்கீகாரம் வழங்கும் அரச அதிகாரிகளே! மக்களின் எதிர்காலத் தையும் கவனத்தில் ஏற்றுக்கொள் ளுங்கள். இதனை மிகவும் சூட்சுமமாக செய்த போரதீவுப்பற்று பிரதேச செயலாளருக்கு இடமாற்றம் பெற்றுக் கொடுப்பதற்கான காய்நகர்தல்களை செய்வதில் மண் பினாமிகளும் உள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக போரதீவுப்பற்று பிரதேச செயலாளரிடம் வினவிய போது "நான் எதிர்காலத்தை நினைத்து நல்லது செய்ய நினைக்கும் போது அது யாருக்கெல்லாம் வலிக்கின்றதோ அவர்கள் எல்லாம் எனது இடமாற்றம் செய்ய முனைவார்கள். இது வழக்கமான விடயம் தான்."என்று பதிலளித்தார். தங்களது பைகள் நிரம்பினால் வாழ்க்கை முடிந்து விட்டது என்று நினைப்பவர்கள் வாழ்கின்ற இக்காலத்தில் இது சாதாரண விடயம் தான்.

இதற்கு அரசியல் வாதிகளும் உடந்தையாக இருப்பதுதான் கவலைக் குரிய விடயம். பல அரசியல் வாதிகள் மற்றும் அரச உத்தியோகஸ்தர்கள் மாற்றார் பெயர்களில் அனுமதிப் பத்திரம் வைத்துள்ளனர் என்கின்ற சர்ச்சை சமூக வலைத்தளங்களில் பரவலாக பேசப்பட்ட விடயம் தான். அவர்களின் விபரம் மிக விரைவில் வெளிவரும்.

மக்களே விழிப்படையுங்கள். மண்ணை நேசித்து மண்ணுக்காக போராடிய இனம் என்கின்ற பெருமைக்குரியவர் நாம் மட்டுமே. இன்று மண் கடத்தலை எதிர்த்து வீதிகளில் இறங்க வேண்டிய நிலை உள்ளதை நினைக்கும் போது எதற்காக முப்பது வருடகால ஆயுத போராட்டம் என எண்ணத் தோன்றுகின்றது. மக்கள் சக்தி மாபெரும் சக்தியாக வலுப்பெறும் காலம் வரும்.



## சொல்லேர் உழவு

# உழவாரம், சலவாரம் என்றால் என்ன தெரியுமா? 10

✎ கவிஞர் மகுடேசுவரன்



சொற்களைப் பற்றிய உணர்ச்சி ஏற்பட்டவுடன் அங்கிங்கெனாதபடி எங்கும் சொற்களாகவே நம் கண்களுக்குத் தெரியும். ஒரு சொல் நம்மை எப்படியெல்லாம் வந்தடைகிறது என்பதை நினைக்கையில் புதுவகையான பேருணர்ச்சி ஏற்படும். ஓர் அரிசி மணி நம் உணவுத் தட்டில் சோற்றுப் பருக்கையாக வந்து விழுவதைப்போன்ற பரவயப்படுத்தும் நிகழ்வு. சொல்லுணர்ச்சி ஏற்பட்டவுடன் காணுமிடமெங்கும் சொற்களாகவே தோன்றும். அடிக்கடி தென்படும் சொற்களுக்கும் அரிதாகத் தென்படும் சொற்களுக்குமிடையேயான வேறுபாட்டினை உணர முடியும்.

உங்களுக்கு மிகவும் பிடித்த சொல் எது? உங்களையே வினவிக் கொள்ளுங்கள். சில சொற்கள் நம்மனத்தின் திறவாத் தாழ்களை நீக்கும் தன்மையுடையவை. சில சொற்கள் நம் ஆழ்மனநினைவுகளைத் தொட்டு எழுப்பவல்லவை. சில சொற்கள் கண்ணீரைப் பெருக்கும். சிலவற்றுக்கு ஆறுதல்படுத்தி அணைக்கும் ஆற்றலுண்டு. இந்தப் பக்கத்தின் வழியே நான் உங்கள் மனத்தை அடைவதற்குக் கருவியாகின்றவையும் சொற்களே.

ஆறாம் வகுப்புப் படிக்கையில் எங்கள் பள்ளியில் ஓர் ஆசிரியர் இருந்தார். எங்கள் வகுப்பாசிரியர் வராதபோது அவர் இரண்டு வகுப்புகளைச் சேர்த்து அமர்த்திக் கொள்வார். பாடம் நடத்துகையில் ஒவ்வொரு சொற்றொடரைக் கூறியதும் "விளங்குதா?" என்றே முடிப்பார். பிற ஆசிரியர்கள் "புரிந்ததா?" என்று கேட்கையில் அவர் "விளங்குதா" என்று கேட்டது புதிதாக இருந்தது.

விளங்கியதா, விளக்கம் பெற்றாயா என்கிறார் அவர். என்னே அருமையான சொல். அது முதற்கொண்டு விளங்குகிறது, விளங்கும், விளங்கவில்லை, விளங்கிக் கொண்டான் ஆகிய சொற்களை மிகுதியாகப் பயன்படுத்தத் தொடங்கினேன். புரிந்தது என்ற சொல்லை என் எழுத்தில் அரிதாகத்தான் காண முடியும். புரிந்தது என்பதைக் காட்டிலும் விளங்கியது என்னும் சொல் தேர்ச்சியான பொருள் காட்டுவதாகும். விளங்கு, விளக்கு என்னும் இரண்டு வினைவேர்களும் வியக்கத்தக்க பொருளாட்சி உடையவை.

என் நண்பரின் தாயார் பழுத்து முதிர்ந்தவர். கொங்குத் தமிழின் இலக்கணம் என்று கொள்ளத்தக்கவர். அவர் வீட்டுக்கு நான் எப்போது சென்றாலும் "சோறுண்கிறயா?" என்றுதான் கேட்பார். "வாரபோதே உண்டுட்டுத்தான் வந்தனுங்கொ..." என்று விடை கூறுவேன். உண்டுவிட்டு வந்துவிட்டேன் என்பதற்காக விட்டுவிட மாட்டார். "உண்டுட்டு வாரயா? எப்ப உண்டே?" என்று கேட்பார். "காலையில உண்டன்ங்கொ..." என்று கூறினால் "கார்த்தால உண்டது என்னத்துக்காகறதுஞ் இப்ப உண்கலாம் வா..." என்று சோறிடுவார். சாப்பிடுவது, தின்பது என்பதற்கு மாற்றான கூர்மையான பொருளுடைய சொல்தான் உண்ணல். உண் என்ற வினைவேரிலிருந்துதான் உணவு, ஊண் ஆகிய சொற்களே பிறக்கின்றன. பொருளழகும் உயிரன்பும் சேர்ந்து பெருகி "உண்கிறயா ?" என்று அவர் வாய்வழியே கொங்கின் இசையோடு வெளிப்படும்போது நான் பெறுகின்ற குளிர்ச்சியை எடுத்தியம்பவே இயலாது. அது முதற்கொண்டு உண்கிறாய், உண்டான், உண்பது போன்ற சொற்களை மிகுதியாகப் பயன்படுத்தத் தொடங்கி விட்டேன். சாப்பிட்டான் என்று அரிதாகத்தான் எழுதுவேன்.

சொற்களை நகமும் தசையும், உயிரும் உணர்வுமாய் அறிந்துணர்வதற்கு அவற்றை ஆளும்மக்களின் வாய்ச்சொற்களை உற்று நோக்க வேண்டும். என்னைச் சுற்றியுள்ள மக்களே என் சொல்லாய்வுக்கும் அறிதலுக்கும் வலிமையான சான்றாகிறார்கள். அவர்களுடைய வாய்மொழியில் எழுதித் தீராத புதுச்சொற்கள் கிடைக்கின்றன. இலக்கணத்தை அணுகுவதற்குரிய திறப்புகளையும் அவர்களிடமிருந்தே பெறுகிறேன். என்னுடைய தாத்தா மலங்கழிக்கச் செல்வதைச் "சலவாரைக்குப் போறது" என்பார். சலவாரம், சலவாரை போன்ற சொற்களை அகராதிகளில் காண முடியவில்லை. உழவாரம் என்ற சொல் அகராதியில் இருக்கிறது. உழவுத் தொழிலில் "புல் பூண்டு முதலான பயனற்ற களைகளைக் களைதலே" உழவாரப்பணி. சலவாரம்/சலவாரை என்றால் உடலிலிருந்து நீர் முதலான கழிவுகளை நீக்குவது என்ற பொருளில் விளங்கிக் கொள்கிறேன். மிகவும் பொருத்தமாகவே இருக்கிறது. மக்களின் வாய்ச்சொற்களை உற்று நோக்காவிடில் அச்சொற்கள் அச்சுமேடை ஏறாமல் காற்றோடு கலந்து விடுவதற்குரிய வாய்ப்புகளே மிகுந்திருக்கின்றன. (தொடரும்)


# நீங்களும் பத்திரிகையாளராக ஆசையா?

## தீபத்திற்கு எழுதுங்கள்...

## உங்கள் பிரதேச, சமூக, அரசியல், நிர்வாக மற்றும் பொது விடயங்கள் எதுவானாலும் எழுதுங்கள்...

இளையவர்களும் தயக்கமின்றி இணையுங்கள்

0768255562 0214927562 deepamdesk@gmail.com

# புலிகளின் ஆயுதக் கப்பல்களின் விபரம் வெளியில் கசிந்தது எப்படி?

பீஷ்மர்

புலிகளின் சர்வதேச வலையமைப்பு மோப்பம் பிடிக்கப்பட்டு, புலிகளின் மிதக்கும் ஆயுதக் களஞ்சியங்களான ராங்கர் கப்பல்கள் ஒவ்வொன்றாக தகர்க்கப்பட்டன. 2008 இல் புலிகள் கடைசி முயற்சியொன்றை மேற்கொண்டார்கள்.

ஆயுதங்களை முல்லைத்தீவிற்கு சப்ளை செய்ய புலிகளின் கப்பல்கள் தொடர்ந்து வருவதில்லை. வருடத்திற்கு நான்கைந்து ட்ரிப்தான் இறக்கப்படும். சில சமயம் ஓரிரண்டு தடவைகள் கூடலாம். அல்லது குறையலாம். இப்படி போதிய இடைவெளி விட்டு வருவதால்த்தான் புலிகளை கண்காணிப்பவர்களால் இலகுவாக மோப்பம் பிடிக்க முடிகிறது என புலிகள் நினைத்தார்கள். இதற்குள் இடையீடாக ஒரு தகவல்.

தமது கப்பல்கள் தாக்கப்பட தொடங்கியதும், புலிகளிற்கு பெரிய குழப்பமொன்று ஏற்பட தொடங்கி விட்டது. எப்படி கப்பல்கள் தாக்கப் படுகின்றன?

இலங்கை புலனாய்வு நெற்வேர்க் பலவற்றாலும் மயன்று புலிகளின்




ஆயுதக்கடத்தல் அடி, முடியை கண்டுபிடிக்க முடியாமல் போயிருந்தது. கே.பி அணியிடமிருந்த சர்வதேச நெற்வேர்க், வன்னியிலிருந்து சென்ற அணியிடம் மாற்றப்பட்ட பின்னர் புலிகளின் ராங்கர் கப்பல்கள் வரிசையாக அழிக்கப்பட தொடங்கின.

இப்பொழுது புலிகளிற்கு ஒரு குழப்பம் ஏற்பட்டது.

ராங்கர் கப்பல்களின் நகர்வு எப்படி இலங்கைக்கு தெரிகிறது?

ராங்கர்களில் ஆயுதம் ஏற்றுவதும், முல்லைத்தீவிற்கு கொண்டு செல்லப்படுவதும் மிகமிக இரகசியமாக நடக்கும் விசயம். ஓரிரண்டு பேர் மட்டுமே சம்பந்தப்பட்டது. ராங்கர் கப்பல்களில் இருந்து ஆயுதங்களை ஏற்றிச் செல்வதற்காக முல்லைத்தீவு கரையிலிருந்து வரும் கடற்புலிகளிற்கு, சர்வதேச கடல் எல்லைக்கு வரும் வரையும், ராங்கர் கப்பல்களின் லொக்கேஷன் தெரியாது. அதேபோல, ஆயுதங்களை ஏற்ற செல்வதற்கு புறப்படும் வரை, கப்பல் வரும் விசயமும் தெரியாது. அது கடற்புலிகளின் தளபதி சூசைக்கு மட்டும் தெரிந்த விசயம். ஆகவே, வன்னியிலிருந்து தகவல் கசிய வாய்ப்பில்லை.

ராங்கர் கப்பல்களின் நகர்வுகள் குறித்து தகவல் கசிவதற்கு மூன்று வாய்ப்புக்கள் இருப்பதாக புலிகள் கருதினார்கள்.

முதலாவது, கே.பி அணி. புலிகளின் சர்வதேச நெற்வேர்க் கே.பி அணியினரிடமிருந்து வன்னியிலிருந்து சென்ற போராளிகளிடம் மாற்றப்பட்டதில், அவர்களிற்கு பயங்கர அதிருப்தியிருந்தது. அந்த அணியிலிருந்த சிலர் வெளிப்படையாகவே விமர்சிக்கவும் தொடங்கியிருந்தனர். பலர், புலிகளுடனான தொடர்புகளையும் துண்டித்திருந்தனர். அதிருப்தியிலிருந்த அவர்கள் யாரிடமிருந்தாவது தகவல் கசியலாமா?

அதற்கும் வாய்ப்பிருந்தது. காரணம், சர்வதேச நெற்வேர்க் மாற்றப்பட்டதே தவிர, சிஸ்டம் ஒன்றுதானே. அதாவது, ராங்கர்கள், அதை இயக்குபவர்கள், அதன் பதிவுகள், தரிப்பிடங்கள், ஆயுதம் வாங்குமிடங்கள் எல்லாமே ஒன்றுதான். முன்னைய அணி பொறுப்பிலிருந்து ஒதுங்கினாலும், புதிய நெற்வேர்க்கை நூல் பிடிக்கலாம்!

அடுத்தது, விடுதலைப் புலிகளிற்கு பெரிய வில்லங்கமாக இருந்த இந்தியா!

ராஜிவ் காந்தி கொலைக்கு பின்னர், புலிகள் அழிக்கப்பட வேண்டுமென இந்தியா முடிவெடுத்திருந்தது. குறிப்பாக காங்கிரஸ் கட்சி. இடையில் வாஜ்பாய் அரசு அமைந்ததில், ஓரளவு தலையிடாத போக்கை கடைப் பிடித்தது. மீண்டும் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததும், விடுதலைப் புலிகளிற்கு எதிரான நகர்வுகளை ஆரம்பித்தது.



இந்த இடத்தில் ஒரு உதாரணத்தை சொல்லலாம்.

ராஜிவ் காந்தி கொலை விவகாரத்தில் இந்தியாவின் டார்க்கெட்டாக இருந்தவர்கள் மூவர். முதலாவது பிரபாகரன், அடுத்தது பொட்டம்மான். மூன்றாவது கிட்டு!

கொலைக்கு உத்தரவிட்டதாக பிரபாகரன், பொட்டம்மான் மீது இந்தியாவிற்கு கோபம். கிட்டு மீது வேறுவிதமான கோபமிருந்தது. ராஜிவ் கொலை நடந்ததும், சிபிஐ புலனாய்வில் இறங்கியது. யார் கொன்றிருப்பார்கள் என்ற குழப்பம். அப்போது இந்திய ஐ.பி புலனாய்வு அமைப்பு, விடுதலைப்புலிகள் இதை செய்திருக்க வாய்ப்பேயில்லையென உறுதியாக நம்பியது. அதற்கு காரணம், அப்போதைய ஐ.பி தலைவருடன் கிட்டுவிற்கு இருந்த நெருக்கம். இந்தியாவுடன் ஒரு நெருக்கத்தை பேண வேண்டுமென்பதற்காக ஐ.பி தலைவருடன் கிட்டு நெருக்கத்தில் இருந்தார். அப்போது கிட்டு லண்டனில் இருந்தார்.

ராஜிவ் கொலை நடந்ததும், இந்தியாவை திசை திருப்ப ஐ.பி தலைவருக்கு நிறைய பிழையான தகவல்களை கொடுத்தார் கிட்டு. அதில் முக்கியமானது "ராஜிவ் கொலையை நாங்கள் (புலிகள்) செய்யவேயில்லை. இதை நீங்கள் நம்பலாம். புலிகளின் மூத்த தலைவர்களில் ஒருவர்... சர்வதேச பொறுப்பாளர் என்ற அடிப்படையில் உங்களிற்கு இதில் உத்தரவாதம் தருகிறேன்" என கிட்டு கூறியிருந்தார். கிட்டுவை நம்பி, உயர்மட்ட கூட்டங்களில், விடுதலைப்புலிகள் இந்த கொலையை செய்யவில்லையெ ஐபி தலைவர் அடித்து சொன்னார். விடுதலைப்புலிகள்தான் இந்த கொலையை செய்தார்கள் என சிபிஐ ஓரளவு நெருங்கத் தொடங்கவும், ஐபி தலைவர், கிட்டு சொன்னதை அநியாயத்திற்கு நம்பிக் கொண்டிருந்தார். இதனால் பின்னாளில் ஐபி தலைவர் கடுமையான விமர்சனங்களையும் சந்திக்க வேண்டியிருந்தது.

இது இந்தியாவிற்கு பயங்கர கோபம். ராஜிவ் கொல்லப்பட்ட உடனேயே விடுதலைப்புலிகளும் சந்தேக வலயத்திற்குள் இருந்தார்கள். இருந்தாலும் ஐபி தலைவர் அப்படி சொல்லி வந்ததால், புலிகள் ஆரம்பத்தில் சந்தேக வலயத்திலிருந்து தள்ளி வைக்கப்பட்டனர். பின்னர் உறுதியான ஆதாரங்கள் கிடைத்ததன் பின்னரே புலிகளை குறிவைத்தனர். இதற்குள் கொலை திட்டத்தில் சம்பந்தப்பட்ட சிவராசன், சுபா உள்ளிட்டவர்கள் சென்னைக்கு வெளியில் சென்று விட்டனர்.

புலிகள்தான் இந்த கொலையை செய்தார்கள் என்ற கோணத்தில் ஆரம்பத்திலேயே விசாரணையை செய்திருந்தால், கொலைச்சதியில் ஈடுபட்டவர்களை உயிரோடு பிடித்திருக்கலாமென இந்தியா நம்பியது. கொலைக்கு உதவியவர்கவீளத்தான் சிபிஐ கைது செய்தது. வழிநடத்திய யாரும் உயிரோடு இந்தியாவிடம் சிக்கவில்லை.

இந்தியாவிற்கு இது பயங்கர ஆத்திரம். ராஜிவ் கொலையில் நேரடியாக திட்டமிட்ட, வழிநடத்திய யாரையாவது உயிரோடு கொண்டுவந்து, விசாரணை செய்து, தண்டனையளிக்க வேண்டுமென இந்தியா விரும்பியது.

(தொடரும்)



9-ம் பக்க தொடர்ச்சி...

இருக்கின்றதா என்று எனக்குத் தெரிய வில்லை. நாங்கள் சென்று கதைப் பதற்கு கூட அவர்கள் மேசை தருவார் களா என்று கூட தெரியாது. ஆனால் நாங்கள் யாருடனும் பேசுவோம்.

ஆனால் அவர்களுடன் பேசுவதற் கான சந்தரப்பமும் இன்றும் எமக்கு வரவில்லை. ஆனால் மாத்தறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் நான் தினேஸ் குணர்த்தனவுடன் சாதாரண மாக பல்வேறு விசயங்கள் குறித்து பேசியிருக்கின்றேன். அதே போன்று அங்கு சமல் ராஜபச்சவுடனும் பேசிருந் தோம்.

ஆனால் அவர்களது கட்சியில் இணைந்து கொள்வதற்காக நடக்க வில்லை. அவ்வாறு நடைபெறு வதற்கான சாத்தியங்களே இந்த நாட்டில் இல்லை. அவர்களும் கேட்க வில்லை. நாங்களும் கேட்கவில்லை. அதற்காக யாருடனும் நாங்கள் பேச மாட்டோம் என்றுமில்லை.

அதற்கான நிலைமைகள் வர வேண்டும். அது ஐக்கிய தேசியக் கட்சியானலும் பொதுஜன பெரமுன வானாலும், சுதந்திரக் கட்சியானாலும் சந்தரப்பம் வர வேண்டும். இப்ப யார் தீட்டு? ஒருத்தரும் தீட்டான ஆட்கள் இல்லை. தீட்டான ஆட்கள் எல்லாம் தீட்டில்லாமல் போன வரலாறுகளும் இருக்கிறது. தீட்டில்லாதவர்கள் என்று. சொல்லப்பட்டவர்களும் தீட்டுப்பட்டுப் போய் நிற்கின்ற நிலைமைகளும் நடந்திருக்கிறது.

இது தேர்தல் கால அரசியல் என்பதை விளங்க வேண்டும். நாங்கள் இணையவே மாட்டோம் என்று சொல்லாவர்கள் சில நாட்களின் பின்னர் ஒரு கூட்டணியை உருவாக்கி ஒன்றாக நிற்பார்கள். இது எல்லாம் தேர்தல் அரசியலில் நடக்கும். இதனை அருகிலுள்ள நாடான இந்தியாவிலும் உலக நாடுகளிலம் பார்க்க முடியும். தேர்தல் அரசியல் எவ்வாறு இருக் கிறதோ அதற்கு தக்கபடி பலதும் நடக்கும்.

**தீபம்: தேர்தல் அரசியல் என்கின்ற போது எதுவும் நடக்கலாம் என்கின் றீர்கள். அவ்வாறாயின் தேர்தல் அரசியலில் நிற்கின்ற தமிழர் தரப்புக்களும் ஒற்றுமைய வலியுறுத் துகின்ற போது அந்த ஒற்றுமையை ஏன் ஏற்படுத்த முடியவில்லை?**

*பதில்:* தமிழர் தரப்புக்கள் ஒற்றுமை என்று உண்மையாகப் பேசுவதில்லை. தன் தன் வசதிக்கான ஒற்றுமைய குறித்தே அவர்கள் பேசுகின்றனர். மற்றப்படி உண்மையான ஒற்றுமைக் காக அவ்வாறு பேசுவதில்லை. ஆகவே ஒற்றுமைய என்று சொல்லிப் போட்டு நாங்கள் நடுச்சந்தியில் போய் குந்தியிருக்கேலாது தானே.

ஒற்றுமை என்பது யதார்த்தமாக யாருடன், எவருடன், எப்ப, என்னத்துக்கு, அதில் எங்களுக்கு என்ன வாய்ப்பு என்ற எல்லா கேள்விகளுக்கும் பதில் இருந்தால் ஒற்றுமை என்பது வரும். ஒற்றுமை என்பது சும்மா வராது தானே. இதில் இன்னும் சொல்லப் போனால் விக்னேஸ்வரனை எல்லாக் கட்சி களுமாக இணைந்து கொண்டு வந்திருந்தனர். அவருடனேயே இன்று ஒற்றுமைப்பட முடியாமல் நிற்கின் றனர்.

அவரோ இந்த அரசியலுக்கு எதுவித சம்மந்தமும் இல்லாமல் வந்தவர். அவ்வாறு வந்து இன்றைக்கு இவர்களுடன் போக முடியாமல் நிற்கின்றார். ஆகவே அவரவருடைய அந்தந்தக் கட்சிகளுக்கு என்ன சாத்தியப்பாடுகள் எற்படுகிறதோ



**தமிழர் தரப்புக்கள் ஒற்றுமை என்று உண்மையாகப் பேசுவதில்லை. தன் தன் வசதிக்கான ஒற்றுமைய குறித்தே அவர்கள் பேசுகின்றனர். மற்றப்படி உண்மையான ஒற்றுமைக் காக அவ்வாறு பேசுவதில்லை.**

அந்தத்தக் கட்சிகளுக்கு என்னென் வாய்ப்புக்கள் ஏற்படுகிறதோ அந்த வாய்ப்புக்களுக்கிடையே ஏற்படுவது தான் ஒற்றுமை.

**தீபம்: அவ்வாறாயின் ஒற்றுமையை எவ்வாறு ஏற்படுத்த முடியும்?**

*பதில்:* இங்கு ஒற்றுமையே கிடையாது. ஆனால் அவரவருக்கு என்று தேவையுடன் ஒரு ஒற்றுமை இருக்கிறது. அந்த ஒற்றுமைக்காக முயற்சிப்பார்கள். ஆனால் அந்த ஒற்றுமைய யார் யாருக்கு நன்மை வருகிறதோ அவர்கள் அதில் சேர்ந்து கொள்வார்கள். இங்கு எல்லாரும் ஒற்றுமைப்பட வேண்டுமென்ற முயற்சியில் இருப்பவர்கள் யாருமே இல்லை. அவ்வாறு ஒற்றுமை வேண்டும் என்று சொல்வது எல்லாம் பொய். அவரவர் தங்களைக் காட்டிக் கொள்ள முற்படுவது தான் ஆகவே அவர்கள் கூறுகின்ற ஒற்றுமையில் உண்மையும் இல்லை. அது தவறும் இல்லை.

**தீபம்: வடக்கு கிழக்கு இணைந்த முதலாவது மாகாண சபையின் முதலமைச்சராக நீங்கள் இருந்த தற்கும் இப்ப பிரிந்திருக்கின்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபை இருப்பதனையும் எவ்வாறு பார்க்கின்றீர்கள்**

*பதில்:* நாங்கள் இருந்த காலம் போராட்ட அரசியல் காலம். அதனால் வடக்கு கிழக்க மாகாணத்தை இணைக்க வேண்டுமென்பதில் மும்முரமாக இருந்து அதற்கான அதிகாரப் பகிர்வைக் கோரினோம். இந்தியாவின் ஆதரவு எங்களுக்கு இருப்பதை தற்காத்துக் கொள்ள வேண்டியிருந்தது. ஏனெனில் பிரேமதாசாவோடு நாங்கள் சேர்ந்து இந்தியாவை வெளியேற்றியிருந்தால் பிரேமதாசாவுடன் நாங்கள் நல்லாக இருந்திருக்கலாம். இந்தியாவின் ஆதரவு தமிழ் மக்களுக்குத் தேவை என்பதால் அதைத் தற்காப்பதற்கு முடிவெடுத்தோம். அது போராட்ட காலம்.

இப்ப தேர்தல் அரசியல் என்றால் இந்தியாவா சீனாவா, அமெரிக்காவா எதுவானாலும் எங்களுக்கு என்ன பிரச்சனை என்று பார்க்காது உள்ளூராட்சி சபைக்கு, மாகாண சபைக்கு, பாராளுமன்றத்திற்கு எப்பிடி செல்லலாம் என்று அல்லது அதிகாரத்திற்கு வருவபவர்களிட மிருந்து எவ்வாற நன்மையைப் பெற்றுக் கொள்ளலாம் என்று பார்க்கிறது தான் இந்த அரசியல்.

**தீபம்: இணைந்த மாகாண சபையை பொறுப்பெடுத்த நீங்கள் அதிகாரங்கள் இல்லை என்று சொல்லியிருந்தீர்கள். இப்ப அதனை எப்பிடி பார்க்கின்றீர்கள்?**

*பதில்:* 13 ஆவது திருத்தச் சட்டம் குறைபாடானது என்று சொல்லித் தான் அதனை நாங்கள் ஏற்றுக் கொண்டிருந்தோம். அதனையே மாகாண சபையிலும் ஒவ்வொரு கூட்டங்களிலும் நீளமாகவே பேசி யிருக்கின்றோம். அதேவேளையில் கொழும்பு அரசாங்கத்துடன் அதிகாரப் பகிர்வைப் பெறுவதற்கான சண்டையையும் பிடித்திருக்கின்றோம்.

அந்த மாகாணசபைக்கு அதிகாரம் இல்லை என்று நாங்கள் தொடர்ந் தும் சொன்னபடியால் தான் பிரேம தாசாவே பாராளுமன்றக் குழுவொன்று அமைத்திருந்தார். அதேபோல சந்திரிக்காக, மகிந்த ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்டவர்களும் வந்து அத்தகைய செயற்பாடுகளை முன்னெடுத்திரந்தனர். சிங்களத் தலைவர்களும் 13 ஆவது திருத்தம் தமிழ் மக்களுடைய பிரச்சனை களுக்கு திருப்தியானது என்று ஒரு காலத்திலும் சொல்லவில்லைத் தானே.

ஆனால் 13 ஆவது திருத்தத்திற்குள் இருந்து கொண்டே சில விடயங்கள் இருப்பது பொன்று அடுற மாட்டை ஆடிக் கறப்பதும் பாடுற மாட்டைப் பாடிக் கறப்பதும் என்பது போல மத்திய அரசாங்கத்துடன் சேருகின்ற இடத்தில் சேர்ந்து அனுகுகின்ற இடத்தில் அனுகி பேகின்ற இடத்தில் பேசி சண்டை பிடிக்கின்ற இடத்தில் சண்டை பிடித்து செயற்பட வேண்டி இருக்கின்றது.

அதே போன்று இன்னொரு விடயம் இருக்கின்றது. அது என்னவெனில் உயர் நீதிமன்றம் என்ற ஒன்று உள்ளது. அந்த நீதிமன்றம் சென்று இந்த அதிகாரப் பகிர்வு தொடர்பாக இப்பிடி மத்திய அரசாங்கம் தவறாக நடக்கிறது அதாவது தரப்பட்ட அதிகாரங்களை தர மறுக்கின்றது என வழக்குத் தொடர்ந்து நீதிமன்றத் தீர்ப்பை பெறுவததென்ற ஒன்று உள்ளது. இப்படி பல வேறு விடயங்கள் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**தீபம்: மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டால் அத் தேர்தலில் உங்கள் நிலைப்பாடு என்னவாக இருக்கும்?**

*பதில்:* எங்களக்கு அந்தத் தேர்தலில் பங்கு பற்றினால் வெற்றி பெறலாமா இடம் கிடைக்மா என்று பார்ப்போம். அவ்வாறு அத் தேர்தலில் நாங்கள் பங்கு பற்றின்ால் எமக்ம் இடம் திடைப்பதற்குரிய சூழல் கிடைக்குமென்றால் நாங்கள் அதில் பங்குபற்றுவோம். ஒரு இடமுமே கிடைக்காது என்றால் ஏன் அதில் பங்குபற்றுவான். ஆனால் • எமக்கும் வாய்ப்புக் கிடைக்குமென்றால் நிச்சயமாக நாம் அதில் பங்குபற்றுவோம். ஆத்தோடு அந்த நேரத்தில் எந்தக் கட்சிகளோடு நாங்கள் சேர்ந்து செயற்படலாம் என்ற சாத்தியங்கள் ஏற்படுகிறதோ அந்தச் சாத்தியங்களில் எங்களக்கு என்ன வாய்ப்புக்கள் ஏற்படுகிறதோ அதனடிப்படையில் நாங்கள் செயணற்படுவோம். **தொடரும்...**


23
மூன்று கில்லாடிகள்!
கதை, படம்: ராஜே
முன்கதை: பிரான்ஸும் ஜெர்மனியும் பரம வைரிகள்... இரண்டாம் உலகப் போரின்போது விமானப் படைகளின் மூலம் மோதுகின்றன. அதில் பிரெஞ்சுப் படையைச் சேர்ந்த ஹெலனின் சாமர்த்தியத்தால் ஜெர்மனின் விமானப்படையைச் சேர்ந்த பல விமானங்கள் வீழ்த்தப்பட்டன... அதனால் ஹெலனைக் குறிவைத்து ஜெர்மன் விமானப் படையினர் தாக்கியதில் ஹெலன் விமானம் வெடித்துச் சிதறுகிறது... ஹெலன் என்ன ஆனான்..?
விமானத்திலிருந்து குதித்த ஹெலன் பாராசூட்டை விரிக்கவில்லை.
இப்போது பாராசூட்டை விரித்தால் ஆபத்தில் சிக்கிக்கொள்வேன்.
எந்த விமானியாலும் என்னைச் சுட்டு வீழ்த்த முடியாது. இன்னும் 4000 அடிக்கு கீழே இறங்கியதும் பாராசூட்டை விரித்துக் கொள்ளலாம்.
ஒரு வழியாய்த் தப்பிவிட்டேன்.
திட்டமிட்டப்படி 4000 அடிக்கு கீழே வந்ததும் பாராசூட்டை விரித்தான்.
ஹேய்! அங்கே பாரு! பாராசூட்டில் ஒருவன் மட்டும் தரையிறங்குகிறான். ஒருவேளை ஜெர்மனியனாக இருக்கலாம்.
சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்திலிருந்து தப்பியவனாக இருக்கலாம்.
இல்லையென்றால் நாசகாரத் திட்டத்தோடு வந்து இறங்கலாம்.
எது எப்படியோ முதலில் அவனைத் தப்பவிடக் கூடாது.
நீ சொல்வதும் சரிதான்அருகில் சென்று பார்த்தால்தான் தெரியும்.
பாராசூட்டில் வந்தவன் ரகசிய ஆயுதம் வைத்திருக்கலாம் உடனே அருகில் நேரடியாகச் செல்ல வேண்டாம். முதலில் சுற்றி வளைப்போம்.
நீ இங்கே இறங்கிக்கொள்.
இவன் கையில் ஆயுதம் எதுவும் தென்படவில்லை.
துப்பாக்கியுடன் ஹெலனை நெருங்கினர்.
ஹெலனைத் தொடர்ந்து மறைவாகப் பின் தொடர்ந்தனர்.
ஹெலன் விறுவிறுவென்று நடக்கத் தொடங்கினான்.
தன்னை சந்தேகத்தின் பேரில் சுட்டு விடக் கூடாது என்று எண்ணி கைகளை மேலே உயர்த்தினான்.
இவன் மட்டும் ஜெர்மனி வீரனாக இருந்தால் சுட்டுத்தள்ளிடணும்.
நீ பிரெஞ்சு படையைச் சேர்ந்தவன்தானே உனது பெயர் மற்றும் அடையாள எண்ணைக்காட்டு!
நிச்சயமாக.
(தொடரும்...)

# மாணவர் பூங்கா


**தெரியுமா?**
கியூபா நாட்டின் விடுதலைக்காகப் போராடிய சே குவெரா பிறந்த நாடு அர்ஜென்டினா.




❶ கலர் பென்சில்களை எடுத்துக்கோ... கலக்கலா வண்ணம் அடிச்சுக்கோ!



❷ ஆமைகள் பள்ளி அழகா நடக்குது... ஆறு வித்தியாசங்கள் இதிலே இருக்குது!




❸ யாரு யாருக்கு எந்தத் தீனி? பாதையைக் காட்டிக் கூட்டிட்டுப் போ நீ!






❹ கண்களை உருட்டிப் பாருங்க... அரைத் தூக்கத்தில் எத்தனை ஆந்தைங்க? முழுத் தூக்கத்தில் எத்தனை பேருங்க? முழுசா விழித்திருப்பது எத்தனை ஆந்தைங்க?







❺ எண்கள் எல்லாம் இங்கே இருக்கு... சரியான எழுத்துகளை எழுதிக் கட்டங்களை நிரப்பு!

❻ பல துண்டுகளாக இருக்காரு பாலைவன ராஜா... பார்த்து வெட்டியெடுத்து ஒட்டிக்க ராஜா!






## விடைகள்

❷



❹ அரைத் தூக்கம்: 7, முழுத் தூக்கம்: 4, விழிப்பு: 12

❺




❻




❼



டைமர்


கண்ணாயிரம் அரைக்கும் ஆலை
நெல் குற்றுதல், அரிசி மா மற்றும் மிளகாய் தூள் வகைகளை
சுத்தமாக திரித்து பெற்று கண்ணாயிரம் அரைக்கும் ஆலை
✓ நெல், அரிசி ,என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யப்படும்
✓ அத்துடன் உழுந்து உடைத்தல்,தேங்காய் எண்ணை உற்றுதல் போன்ற சேவைகளை பெற்று கொள்ளலாம்
✓ விசேடமாக கால் நடைகளுக்கான அனைத்து வகையான தீவன பொருட்களையும் பெற்றுக் கொள்ளலாம்
கண்ணன் கோயிலடி.
கனகபுரம் கிளி நொச்சி
0772844706
உரிமையாளர்
செ.சூரியகுமார்(கண்ணன்)
இல 9 கனகபுரம்
கிளிநொச்சி


S.K.Karan
Director
T.P: 0777442846
HOTEL
Sella Rest
A/C , NON - A/C ROOMS & CONFERENCE HALL
No.46, Uthayanagar West Kanagapuram Road,
Killinochci
T.P: 021 228 5613
Yahoo:- hotelsella@yahoo.com
T.P : 021 492 5665 , 021 228 5613


யாழினி பூஞ்சோலை
Yalini Fruit Plant Nurery
அனைத்து விதமான
அழகுத்தாவரங்கள்
பழமரங்கன்றுகள்,
பூச்சாடிகள் என்பவற்றை
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்
இல66 கனகாம்பிகைக்குளம் கிளிநொச்சி 0772779266







இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 02.12.2018 அன்று வெளியிடப்பட்டது.